Registered as a Newspaper in Srilanka

வெள்ளிக் கிழமைகளில் உங்கள் கரங்களில்... வார இதழாக மக்கள் கருத்துக்களுடன்

# முஸ்லிம் குரல்


MUSLIM KURAL

'சுயநிர்ணயத்துடன் கூடிய முஸ்லிம்களின் கௌரவமிக்க சமத்துவமான வாழ்விற்கு'

தருகை - 20 ரூபா | 19 டிசம்பர் 2003 வெள்ளிக்கிழமை | 25 ஷவ்வால், 1424 | சுவடு- 28




# உலகின் கண்கள் குருடாகி விட்டது!



## சதாம் உசைன் 66 வருடங்கள்

- # 1937 ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி திக்ரித் நகரில் சதாம் உசைன் பிறந்தார்.
- # 1957இல் பாத் சோசலிசக் கட்சியில் இணைந்தார்.
- # 1958இல் அன்றைய ஈராக்கிய அரசுக்கு எதிரான நடவடிக்கைக்காக 6 மாத சிறைத்தண்டனை.
- # 1959இல் ஆட்சியிலிருந்த ஜெனரல் கரீம் காசிமை படுகொலை செய்ய எடுத்த முயற்சி தோல்வியில் முடிவடைந்ததையடுத்து - காலில் காயத்துடன் சிரியாவுக்குத் தப்பிச் சென்று அங்கிருந்து எகிப்தில் தஞ்சம் அடைதல்.
- # 1963 திடீர் புரட்சி மூலம் அதிபர் காசிமை கொலை செய்து பாத் கட்சி ஆட்சியைக் கைப்பற்றுதல் - ஆனால் மீண்டும் பாத் கட்சியிடம் இருந்து இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றல்.
- # 1968 ஜூலை 17இல் மீண்டும் இராணுவத்திலுள்ள முக்கிய தளபதிகள் ஒருசிலருடன் இணைந்து ஆட்சியை பாத் கட்சி கைப்பற்றியது. உள்நாட்டு பாதுகாப்புப் பொறுப்பை சதாம் ஏற்றல்.
- # 1979 ஜூலை 16இல் ஈராக்கிய அதிபரானார்.
- # 2003 மார்ச் 20இல் அமெரிக்கக் கூட்டுப்படைகள் ஈராக் மீதான யுத்தத்தைத் தொடங்கியது.
- # 2003 ஏப்ரல் 9இல் ஈராக் அமெரிக்கப் படைகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது.
- # 2003 ஜூலை 22இல் சதாமின் இருமகன்களும் அமெரிக்கப் படைகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- # 2003 டிசம்பர் 13இல் சதாம் கைது செய்யப்பட்டார்!

## சதாமிற்கு ஒரு நீதி புஷ்ஷுக்கு வேறொரு நீதியா?

அமெரிக்க ஆக்கிரமிப்பு அரசு எதிர்பார்த்திருந்த அந்த மகத்தான செய்தி வந்துவிட்டது. ஆனந்தத்தில் ஆக்கிரமிப்பு அரசுகள் துள்ளிக் குதிக்கின்றன. உலகின் நாலாதிசைகளிலுமுள்ள பல்வேறுபட்ட மக்களையும் சதாமின் சரணாகதிச் செய்தி அதிர்ச்சியடையச் செய்துவிட்டது. மிக எளிதாக, ஒரு துப்பாக்கி ரவைதானும் தீர்க்கப்படாத நிலையில், அமெரிக்காவின் மிகப்பெரும் எதிரியான சதாம் இப்போது அமெரிக்க இராணுவக் கட்டுப்பாட்டில். யாருமே எதிர்பார்த்திராத அனைவரையும் உலுக்கிய அதிர்ச்சி தரும் நிகழ்வாகவே சதாமின் சகாப்தம் முடிவுக்கு வந்துள்ளது.

சதாம் ஹூசைன் கைது செய்யப்பட்ட ஒளிப்படங்களும் அதன் ஆனந்தத்தில் திளைத்து நிற்கும் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் சந்தோசம் ததும்பும் முகமும், எவ்வித மறுப்புமின்றி அமெரிக்க இராணுவத்தின் மரபணுப் பரிசோதனைக்கு சதாம் தலைசாய்த்ததையும் கண்ட உலகின் விடுதலை உணர்வுமிக்க மக்கள் ஒருதரம் கூனிக்குறுகிப் போய்த்தான் இருப்பார்கள்! உலகப் பொலிஸ்காரனாகிய அமெரிக்கா இப்போது தீர்ப்பை எழுதிவைத்துவிட்டு வழக்கை விசாரிக்கப் போகிறது. தீர்ப்பின் முடிவு அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான்.

ஆயிரக்கணக்கான ஈராக்கிய மக்களை சதாம் கொன்றொழித்தார் எனவும், மனித உரிமைகளை மீறினார் எனவும் உலகின் முன் நீலிக்கண்ணீர் வடிக்கிறது அமெரிக்கா, அப்படியானால் ஆயிரக்கணக்கான ஈராக்கிய, ஆப்கானிய மக்களை குண்டு வீசியும் ஆக்கிரமிப்புப் படைகளை அனுப்பியும் கொன்றுகுவித்த ஜோர்ஜ் புஷ்ஷுக்கு யார் தீர்ப்பு வழங்குவது? பூமிப்பந்து முழுவதும் பரந்தும் பரவியுமுள்ள அமெரிக்காவின் மனித உரிமைகள் மீறல்களுக்கு யார் தண்டனை வழங்குவது?

சதாம் குற்றவாளி எனப்படின் புஷ்ஷும் அதே குற்றவாளிதான். மனிதகுல நீதியின் கண்கள் குருடாகிவிட்டது என்பதை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் பக்கச்சார்பான கருத்துக்கள் ஒரு தரப்பை குறிவைத்து வந்துகொண்டிருக்கின்றன. இந்நிலை சதாமுக்கு மட்டும் உரியதல்ல. அமெரிக்காவுக்கு அடிபணிய மறுக்கும் அரபு உலகத் தலைவர்களுக்கும், சுதந்திர தாகமிக்க தலைமைகளுக்கும் நாளை இக்குரூர நிகழ்வு காத்திருக்கிறது. இந்த உலகம் விசித்திரமானதும் பக்கச் சார்பானதும் என்பதை சதாமினது கதையிலும் மீள நிரூபித்துள்ளது.

ஒரு வீரனைப்போல் தோற்றம்காட்டி, மிகப்பெரிய கோழைபோல் சதாம் சரணடைந்துவிட்டார். அமெரிக்காவை வரலாறு மன்னிக்காதது போல் சதாமையும் வரலாறு மன்னிக்காது! சதாம் வீழ்ந்தார் என்பதற்காக ஈராக்கிய மக்களின் சுதந்திர உணர்வு மடிந்துவிட்டதென அமெரிக்கா கனவு காணவும் முடியாது!

- பிரதம ஆசிரியர் -

## பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு ரணில் தரப்பு கோரிக்கைவிடுக்கக் கூடும்?

இந்த வருட பாராளுமன்ற அமர்வு முடிவுற்று, புதிய வருடத்திற்கான பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஜனவரி மாதத்தில் தொடங்கும் போது, ஐக்கிய தேசியக் கட்சித் தலைமை பாராளுமன்றத்தைக் கலைக்க கோரி ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது. மக்களிடம் மீளச்சென்று, ஆணையைப் பெற்றுவருவதே ரணில் அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகவுள்ளது. இதற்காக புதியதொரு தேர்தலைச் சந்திப்பதற்கு ரணில் தலைமை தயாராகிவருகிறது.




சந்திரிகாவோ இப்போது வசமாக மாட்டிக் கொண்டுள்ளார். அவரின் கணக்குகள் பொய்த்துப் போய்விட்டது.

தான் பறித்தெடுத்த அமைச்சுகளை மீள ரணிலின் தலைமையிடம் கையளிப்பது அவரின் தற்கொலைக்கு ஒப்பானதாகவே மாறிவிட்டது. தேர்தலுக்கு போவதற்கும் அவர் உடனடியாக தயார் இல்லை. சுருக்குக் கயிறை தனது கழுத்தில் தானாக மாட்டிக் கொண்ட ஒரு பெண்மணியாக சந்திரிக்கா கொழும்பு அரசியலில் காட்சி தருகிறார்!

ரணிலின் பாராளுமன்றக் கலைப்புக் கோரிக்கையை அவர் அமுல்படுத்த வேண்டிய கட்டாயம் இல்லை. ஆனால் இழுபறி நிலையில் தொடர்ந்தும் நீடித்துச் செல்லமுடியாது! இப்போது சந்திரிகா விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவரும் தேர்தலுக்குச் சென்றேயாக வேண்டி உள்ளது. ○

### ஈராக்கில் நடைபெற்றுவரும் தாக்குதல்களுக்கு சதாம் தலைமை ஏற்கவில்லையா?

## உசாமா பின் லேடன் மீதான கவனம் திரும்புகிறது!



சதாம் உசைன் அமெரிக்கப் படைகளினால் சிறைப்பிடிக்கப்பட்ட தினத்திலிருந்து ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. சதாமைக் கைது செய்தவுடன் ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கக் கூட்டுப் படைகள் மீதான தாக்குதல்கள் முடிவுக்கு வந்துவிடுமென்ற எதிர்பார்ப்பு பொய்த்துப் போய்விட்டது.

அமெரிக்கக் கூட்டுப் படைகள் ஈராக்கில் எதிர்கொண்டுவரும் தற்கொலைத் தாக்குதல்களை சதாம் உசைன் தலைமையேற்று வழிநடத்தவில்லை என்ற உண்மை இப்போது அம்பலத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. சதாம் கைது செய்யப்பட்டபோது அவரிருந்த கையறு நிலையும் - வெளிஉலகத்துடனான அவரது துண்டிக்கப்பட்ட உறவும் இந்த உண்மையை ஊர்ஜிதம் செய்துள்ளது.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள ஆக்கிரமிப்புப் படைக்கு எதிரான யுத்தத்தை உசாமா பின் லேடன்தான் வழிநடாத்துகிறார் என்கிற நம்பிக்கை ஓரளவு உறுதிசெய்யப்பட்டு வருகிறது. சதாமைக் கைதுசெய்த சந்தோசத்தில் உள்ள அமெரிக்காவுக்கு - ஒசாமா பின்லேடனின் பலமான யுத்த முஸ்தீபுகள் மீளவும் நெருக்கடியைத் தந்துள்ளது என இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ○

## சரணடைந்திருக்க வாய்ப்பில்லை மயக்க மூட்டியே பிடித்திருப்பார்கள்!

### -சதாமின் சகோதரி கூறுகிறார்

எனது சகோதரன் கோழைத்தனமாக சரணடைந்திருக்க வாய்ப்பில்லை- அவரது நரம்புகளைத் தாக்கும் வாயுக்களை ஏவி அவரை மயக்கமடையச் செய்தே அமெரிக்கப் படைகள் அவரைக் கைது செய்திருக்கக் கூடும். பாருங்கள் ஒரு நாட்டின் தலைவனை தங்களது அதிகாரத்தினால் படுத்தும் பாட்டை. அமெரிக்கா ஊடகங்களுக்கு ஊடாக மிகக் கீழ்த்தரமாகவே நடந்து கொள்கின்றது என்கிறார் அவர்.

இலங்கை முஸ்லிம்களின் தேசியத்தின் குரல்! சுதந்திரத்திற்கான குரல்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களிடமிருந்து மனுக்கள்



உங்கள் கருத்துக்கள், படைப்புகள் அனைத்தையும் உடனுக்குடன் எமக்கு அனுப்பி வையுங்கள் : நமது மக்களின் அவலங்கள், தீர்க்கப்படாத பிரச்சினைகள், அரசியல்வாதிகளின் பொடுபோக்குத்தனம், அதிகாரிகளின் அசமந்தம், ஊழல், அதிகார துஷ்பிரயோகம் ஆதாரங்களுடன் எழுதப்படல் வேண்டும் – முஸ்லிம் குரலில் வெளிவரும் கருத்துக்களுக்கு மாற்றுக்குரல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. நமக்காக எழுதுவோம்! நமக்குள் உரையாடுவோம். விவாதிப்போம்! என்பதே நமது பத்திரிகையின் இலக்கு

## புத்தளம் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி எப்போது தேசியப் பாடசாலையாகும்?

எண்பது பாடசாலைகளை தேசியப் பாடசாலைகளாக தரமுயர்த்த அரசாங்கம் தயாராகப் போகிறதாம் என்ற செய்தி 'முஸ்லிம் குரல்' இதழில் கண்டேன். புத்தளம் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியை தேசியப்பாடசாலையாக்குகிறோம் என்று வாக்குறுதியளித்து 1998ஆம் ஆண்டு தேசிய மீலாத் என்ற பெயரிலே பல பித்னாக்களை அரங்கேற்றி, பொக்கட்டுகளை நிரப்பிக் கொண்ட பொ. ஐ.மு. அரசியல்வாதிகள் படுத்த பாய்க்கும் தெரியாமல் 'ஸ்கேப் ஆகி' உள்ளனர். அதை நம்பி ரூபா 59000/= ம் செலவிலான மாணவிகள் அணியும் சீருடைக்கான பெஜ் (சின்னத்தை) இன்னும் கழட்டாமல் திரிகின்ற பிள்ளைகளின் எதிர்பார்ப்புக்காகவாவது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அதனை நிறைவேற்றுமா?

1998ஆம் ஆண்டு ஜனாதிபதி பகிரங்க மேடையில் வைத்து 1998ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3 மாடிக்கட்டிடத்துக்காக நாட்டுவேன் என்று சொன்ன கல் இன்னும் கிடைக்கவில்லைபோலும்.?

சமூகத்திற்காக குரல் எழுப்பியவர்களை புத்தளத்து குண்டர் படையின் தலைவர் அடியாட்களை விட்டு மிரட்டி ஒதுக்கிவிட்டு சமூக உணர்வுள்ள உறுப்பினர்களை நீக்கி வெறும் வாய்வீச்சு பொம்மைகளால் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் கதிரைகளை நிரப்பி நான்கு வருடங்களாகிவிட்டன. பூசப்பட்ட கரி ஐந்து வருடங்களை பூர்த்திசெய்துவிட்டு ஆறாம் வருடத்தில் உள்ளது. அரசியல் மேடைகளிலே "நாங்கள் வந்து புழுத்துகிறோம்" என்று சொல்லி முழங்கிய ஐ.தே.க. காரர்களும், மு.கா. க்காரர்களும் கூட 5 வருடங்களாக தூங்குகின்றனர். யாரைக் குறை சொல்வது என்று தெரியாமல் மண்டையை உடைத்துக் கொள்கிறவர்கள் சிலர்களை இழந்து நாளுக்கு நாள் பொலிவிழதந்து போல் காட்சி தரும் புத்தளம் பாத்திமா முஸ்லிம் மகளிர் பாடசாலைக்கு என்ன பெயர் வைக்கலாம் என்பதே இப்போதைய பெரும் பிரச்சினை?

உப்புத்தளத்தான

## அக்கரைப்பற்று முஸ்லிம்களின் காணி உறுதிகளை ஆலையடி வேம்பு பிரதேச செயலகத்திற்கு ஒப்படைக்கலாமா?

1987ஆம் ஆண்டு அக்கரைப்பற்றிலிருந்து ஆலயடிவேம்பு பிரதேச செயலகம் தன்னிச்சையாக பிரித்தெடுக்கப்பட்டது. இன்னும் சரியான எல்லைகள் நில அளவைத் திணைக்களத்தால் வரையறுக்கப்படவில்லை. ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குள் அடக்கப்பட்ட காணிகள் பல வருடங்களாக அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தினால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந் நிலையில் பின்வரும் கண்டங்களிலுள்ள காணிக்கான ஆவணங்களை உடனடியாக ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்கு ஒப்படைக்குமாறு அரசாங்க அதிபர் கோரியுள்ளார்!

கிறவல்குழிக் கண்டம், கிறவல்குழி தென்கண்டம், முதலைக்கல் கண்டம், சேம்புக் குளம், சிறு நீத்தைக் கண்டம், நீத்தைக் கண்டம், விப்பிரியக்கண்டம் இக்கண்டங்களில் 100 சதவீதம் தொடக்கம் 95 சதவீதம் வரையான காணிக்கு உரித்துடையோர் முஸ்லிம்களே!

இம்முக்கிய விடயத்தையிட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள், பொது இயக்கங்கள் நமது காணிகளை நாமே பராமரிப்பதற்கான நிர்வாக ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும்.

எம்.ஐ. உதுமாலெப்பை
முஸ்லிம் லீக் வாலிப முன்னணி அக்கரைப்பற்று.

## திருடர்களின் அட்டகாசம்!

அண்மைக் காலமாக காங்கேயனோடை கிராமத்தில் திருடர்களின் அட்டகாசம் அதிகரித்து வருகிறது. பதுறியா வீதியிலுள்ள வீடொன்றில் இரண்டாயிரம் ரூபாய் பெறுமதியான கோழிகளையும், மையவாடி வீதியிலுள்ள வீடொன்றில் ஆடுகளையும் ஆற்றங்கரை வீதியிலுள்ள மீன்பிடி சங்கத்தின் கூரைமேல் இருந்த ஓடுகளையும், நெருப்பு மஸ்தான் பள்ளிவாயலிலிருந்த ஒலிபெருக்கியுடன் இணைக்கும் அம்புலிசெட்டையும், பள்ளியிலிருந்த உண்டியலையும் உடைத்து அதற்குள் இருந்த பணங்களையும் திருடர்கள் திருடியிருக்கிறார்கள். இப்படியான திருட்டுக்களை ஒழிப்பது எப்படி? பொதுமக்களின் உடமைகளை பாதுகாப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

சே.மு. முபயிதீன் காங்கேயனோடை - 13.

## முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்

*நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக்கொணர முடியும்! சந்தாதாரர்களாக சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!*

### சந்தா விபரம்!

3 மாதங்கள் - (12 இதழ்கள்) 250/-
6 மாதங்கள் - (24 இதழ்கள்)- 500/-
1 வருடம் - (48 இதழ்கள்) - 1000/-

(பிரதிகள் தபால் மூலம்அனுப்பி வைக்கப்படும்)

காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசுக்கட்டளையாக அனுப்புவதாக இருந்தால்
Muslim Kural Publiction
Slave Island Post office
எனக் குறிப்பிடவும்.

## வீட்டுப் பணிப்பெண்களின் பரிதாப நிலைமை மாதமொன்றுக்குச் சராசரி 20 பேர் உடல் பெட்டியில் வருகை.

வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காகச் சென்றிருந்த பெண்களில் 15 பேர்களின் சடலங்கள் கடந்த ஒரு மாத காலத்தில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தினூடாக வந்து சேர்ந்துள்ளன. விமான நிலையத் தகவல்களின் படி இவ்வாண்டு ஒக்டோபர் மாதம் 14ந் திகதி வரை மத்திய கிழக்கில் இருந்து கட்டுநாயக்க வந்து சேர்ந்துள்ள சடலங்களின் எண்ணிக்கை 203 ஆக அதிகரித்துள்ளது. இதன்படி மாதமொன்றுக்கு சராசரி 20 சடலங்கள் இங்கு அனுப்பப்பட்ட வண்ணம் உள்ளன. 2000ஆம் ஆண்டில் இருந்து கடந்த 3 ஆண்டுகாலமாக வந்து சேர்ந்த சடலங்களின் எண்ணிக்கை 756 ஆகும்.

மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வந்து சேர்ந்த சடலங்கள் 756ல், 532 பேரினது சடலங்கள் ஐக்கிய எமிரேற் ராஜ்ஜியம், கட்டார், ஜோர்டான், குவைத், சவூதி அரேபியா போன்ற நாடுகளுக்கு பணிக்காகச் சென்ற வீட்டுப் பணிப் பெண்களினதாகும். இவற்றின் 80 வீதம் மரணங்களில் : மரணத்துக்கான காரணம் தெரிவிக்கப்படாமலும், அல்லது தகவல்கள், ஆவணங்கள் முழுமையற்றனவாகவும் ஆட்சேபனைக்குட்பட்ட முன் பின் முரணானவையாகவும் உள்ளன.



வடக்கிலிருந்து முஸ்லிம்கள் இனச் சுத்திகரிப்புச் செய்யப்பட்டு 13 வருடங்கள் கடந்துவிட்டன. நெஞ்சத்தில் மாறாக் காயமாக அந்நிகழ்வையொட்டி அம்மக்களின் துயரை வெளிப்படுத்தும் முகமாக புத்தளம் உலுக்காப்பள்ளத்தில் நடைபெற்ற வில்லிசை நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட படம் இது! அற்புதம் கலைஇலக்கிய கலைஞர்கள் வடக்கு முஸ்லிம்களின் துயரைப்பாடினர்.

படமும் தகவலும் : எஸ். அப்துல் ஜாஹித்




## பாரிய உழைப்பின் வெளிப்பாடு!

முஸ்லிம் குரலின் வரவு நம்பிக்கை தருகிறது. எமக்கென்றொரு ஊடகத்தேவை மிக நீண்டகாலமாக உணரப்பட்டு வந்தபோதிலும், அதற்கான பிரயத்தனங்கள் முஸ்லிம் தேசத்தில் இருந்து பெரியளவுக்கு மேற்கொள்ளப்படவில்லை. உலகின் தலைவிதியை ஊடகம் மாற்றிக் கொண்டிருக்கும் இந்நிலையில் எமக்கென ஒருசில பத்திரிகைகள் மட்டுமே வெளிவந்து கொண்டிருப்பது மிகவும் கவலை தரக்கூடிய விடயம்தான். அதற்குள்ளும் எமது பத்திரிகைகளை வாங்கிப்படிப்பதில் எமது சமூகம் காட்டுகின்ற அசிரத்தை எவ்வளவு கொடுமையானது. பாரிய பிரயத்தனங்களின் அறுவடையாக வெளிவரும் இப்படியான பத்திரிகைகளையும் எமது மக்கள் வாங்கிப்படிக்கவில்லையானால் நாம் தொழில்நுட்ப ஊடகங்களைப் பற்றியெல்லாம் யோசிப்பதும், செயல்படுவதும் எனக்கு நியாயமானதாகப்படவில்லை. முதலில் 'முஸ்லிம் குரல்' போன்ற எமது காத்திரமான பத்திரிகைகளை எமது மக்கள் வளர்த்தெடுக்க முன் வரட்டும்.

பாலைநகர் ஜி:.ப்ரி
ஓட்டமாவடி.

## முஸ்லிம் குரல் வாழ்கவே!

எங்கள் விடியலுக்கான களமாக
எங்கும் ஒலிக்கும் முரசமென – பங்களிக்கும்
முஸ்லிம் குரலென்னும் ஏடு முனைப்புடனே
விஸ்த்தரிக்க ஏகன் துணை.

ஈழம்வாழ் முஸ்லிம்கள் வாழ்வியலை முன்னின்று
சூழப் படம்பிடித்துக் காட்டுகின்ற – ஈழத்தில்
முந்துகின்ற மாசிகையாய் முஸ்லிம் குரல் வாழ
எந்தன் முழுவாழ்த்துமாம்.

இனவாதம் முஸ்லிமை ஏழனமாய் நோக்க
இனங்காக்க முஸ்தீபு செய்தே – கனம்மிகைக்கும்
பொன்னேடாய் முஸ்லிம் குரல் சிறந்தே
யாவணமாய்
என்றும் நிலைக்க வினிது.

இருக்கின்ற ஊடகங்கள் எமக்கெதிரா யியங்க
மறைக்காதே யுள்ளதையே சொல்லி –
உறுதுணையென்
றோதுதற் கொவ்வி யொளிவீசு மிவ்வேடு
போதும்நம் மாட்சிதனைக் கூற.

கண்பட்டதுபோலக் காங்கிரஸும் கூறுபட
எண்ணம்போல் நம்தலைமை செல்லவே –
கண்ணெனவே
மக்கள் நிலவரத்தைப் பாரறியச் செய்கின்ற
தக்ககுரல் நீ வளர்கவே.!

தொன்றுமுதல் இன்றுவரை நம்மினத்தின்
பங்களிப்பு
நன்றே யரசியலில் நீண்டுவர – இன்று
நமக்கெதிராய் காய்பறிக்கும் நீசத்தைக் காட்டும்
நமது குரல் நீ வாழ்கவே!

கவிஞர் பாறூக் ஷரிபுத்தீன்

## நமது பிரதேசத்திற்கும் வேண்டும்!

நானொரு (உயர்தர) வகுப்பு மாணவன். எனது நண்பனொருவன் மூலம் நான் நமது பத்திரிகையைப் படித்தேன். ஒவ்வொரு வாரமும் எமது நகரில் பல இடங்களில் நமது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்தேன் ஆனால் எனக்குக் கிடைக்கவில்லை. உங்களது ஆக்கங்களின் மூலம் நான் பத்திரிகையின் பால் ஈர்க்கப்பட்டுள்ளேன். `தயவு செய்து மாவனல்லையிலும் முஸ்லிம் குரல் விற்பனை முகவர் ஒருவரை அறிமுகம் செய்து, ஒவ்வொரு வாரமும் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ள வழி செய்யுங்கள். ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம்!

எஸ்.எச். பர்விஸ் மாவனல்லை.

## ஆதரவுக் கரம்!

இலங்கை வாழ் முஸ்லிம் மக்களுக்குள்ளிருந்தும், வெளியில் இருந்தும் முஸ்லிம் சமூகத்தை கருவறுக்கக் காத்திருக்கும் கறையான்களையும், வேட்டைப் பற்களை மறைத்து வேசப்பேச்சுக்களால் விஷம் தடவிக் கொண்டிருக்கும் மிருகக் கூட்டங்களை முழு உலகிற்கும் வெளிச்சம் போட்டுக்காட்டிய 'முஸ்லிம் குரலே' உன் குரலை நசுக்கி, வளர்ச்சியைத் தடுக்க நீட்டப்படும் கரங்களையும், எரிச்சலாய்ப் பார்க்கும் மலட்டுக் கண்களையும் அந்த இறைவனின் துணை இல்லாதொழித்து விடும். சத்தியப் பாதையிலே சாத்திய உண்மைகளை வன்மையாக எழுது. உன் பணி தொடர வாழ்த்துக்கள்.

ஹுஸைன்.எம்.அமீன். மருதமுனை-06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம் அரசியல்



அபிலாசைகளைப் பிரதிபலிக்குமா?

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தங்களது யோசனைகளை சமர்ப்பித்திருக்கும் சூழலில் முஸ்லிம் தரப்பு. பிரதானமாக மு.கா. தலைமை தனது

# பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தை மாதிரியாகக் கொண்ட தீர்வு முஸ்லிம்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்குமா?



யோசனையைச் சமர்ப்பிப்பதற்கு கால அவகாசத்தைக் கோரியிருந்தமை நாமறிந்ததே! மு. கா. தரப்புக் கோரிய கால அவகாசம் முடிவடைய இன்னும் ஒரு சில வாரங்களே எஞ்சியிருக்கின்றன.

இந்நிலையில் மு. கா தரப்பு தனது ஆலோசனை நகலை வரைவதற்கு தற்போது ஆரம்பித்திருக்கும் என நாம் நம்பலாம். ஏனெனில் தேசிய இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தை அரங்கில் முஸ்லிம்களின் சார்பில் மிகத் தெளிவான கோரிக்கையை- வரைபை முன்வைக்க வேண்டிய முக்கியமான அரசியல் சூழல் ஏற்பட்டு விட்டது.

இந்தத் தேவைப்பாட்டிற்கு இரண்டு காரணங்கள் அடிப்படையாக உள்ளன. ஒன்று- தேசிய இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட முத்தரப்புகளில் இரு தரப்புகள் தங்களது நிலைப்பாடுகளை ஏலவே முன் வைத்து விட்டன. இரண்டாவதாக. முஸ்லிம்கள் தனித்தரப்பு- சமத்துவத்தரப்பு நிலைப்பாட்டை அரசியல் அரங்கில் வலியுறுத்தி வருவதுமாகும்.

புலிகளின் திட்ட வரைபை அடிப்படையாகக் கொண்டு ரணில் விக்கிரம சிங்கவின் அரசாங்கம் புலிகளுடன் பேசலாம் என நம்பிக்கை தெரிவித்திருப்பதும் – எதிர்காலத்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகள் புலிகளின் இத்திட்ட நகல் வரைவை மையமாகக் கொண்டே தொடங்கவும் உள்ளது. இந் நிலையானது. முஸ்லிம்கள் தங்களது நகல்வரைவை உடனடியாக முன்வைத்தாக வேண்டிய நிலைக்கு தள்ளி உள்ளது.

தேசிய இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட முஸ்லிம்கள் – தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வில் தங்களின் கோரிக்கைகள். யோசனைகளை முன் வைப்பது தவிர்க்க முடியாததாகவும் மாறி விட்டது. மு.கா தனது யோசனையை எந்த அடிப்படையில் முன் வைக்கப் போகிறது என்கிற அதிக எதிர்பார்ப்பு முஸ்லிம் அரசியலில் இன்று எழுந்துள்ளது.

கடந்த காலத்தைப் போல் வெறும் வார்த்தை அளவில் அல்லது அதற்கு சற்றுக் கூடிய வகையில் முஸ்லிம்களுக்கான தீர்வை மு.காவால் முன் வைக்க முடியாது! ஏனெனில் விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள யோசனையானது வடக்கு கிழக்கை முழுவதுமாகக்

தடவைகள் விடுதலைப் புலிகள் நிராகரித்து வந்துள்ளனர். இந்திய மாநிலங்களின் அதிகாரங்கள் உண்மையான அதிகாரப் பகிர்வே அல்ல. அது தன்னாட்சியை நிராகரிக்கும் இந்திய மத்திய அரசின் ஏமாற்றுத்தனமாகும்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையானது வெறுமனே நிருவாகங்களை பகிர்ந்தளிப்பது அன்று. அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதாகும். வெறும் நிர்வாக அதிகாரத்தை புலிகள் கோரி

ஏற்படுத்தியுள்ளன.

மு.கா தரப்பு பாண்டிச்சேரி முறைமையை உதாரணமாகக் காட்டுவது பாண்டிச் சேரி யூனியன் பிரதேசத்திற்கான அதிகாரங்களை மையப்படுத்தியா அல்லது பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தின் நில அமைப்பை (நிலத்தொடர்பற்ற பிரதேசங்களை இணைத்தல்) உதாரணமாகக் காட்டவா என்பதை முதலில் தெளிவு படுத்தல் வேண்டும்.

இந்தியா. தேசங்களின் சிறைக் கூடம் என்கிற கருத்தை நாம் அறிவோம்! இந்திய மாநிலங்களுக்கு ஒத்த அதிகாரங்களை விடுதலைப்புலிகளுடன் (தமிழ்தரப்புடன்) பகிர்ந்து கொள்வதற்கு முன் வைத்த யோசனைகளை பல்வேறு தடவைகள் விடுதலைப் புலிகள் நிராகரித்து வந்துள்ளனர். இந்திய மாநிலங்களின் அதிகாரங்கள் உண்மையான அதிகாரப் பகிர்வே அல்ல. அது தன்னாட்சியை நிராகரிக்கும் இந்திய மத்திய அரசின் ஏமாற்றுத்தனமாகும்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையானது வெறுமனே நிருவாகங்களை பகிர்ந்தளிப்பது அன்று. அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதாகும். வெறும் நிர்வாக அதிகாரத்தை புலிகள் கோரி இருப்பார்களானால் அவர்கள் 1987ம் ஆண்டின் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு வடக்கு கிழக்கு மாகாண சபையை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும்.வடக்கு கிழக்கு மாகாணசபை யோசனையை புலிகள் அன்றே நிராகரித்தது மட்டுமல்லாது. கடந்த 15 வருடங்களுக்கு மேல் போராடி வடக்குகிழக்கு மாகாணசபையின் குறித்துரைக்கப்பட்ட அதிகாரங்களுக்கு மேல். தமிழர்களுக்கு அதிகாரம் தன்னாட்சியுடன் வழங்கப்பட வேண்டுமென சிங்கள. சர்வதேசத் தலைமைகளை ஏற்கவைத்துமுள்ளனர்.

வடக்கு கிழக்கிற்கு தன்னாட்சி கோரி – தனக்கே அதற்கான அரசியல் அதிகாரமும் வழங்கப்படல் வேண்டுமென விடுதலைப் புலிகள் கோரி நிற்கும் சூழலில் – வடக்கு கிழக்கில் இனத்துவத் தனித்துவத்தையும். தேசிய அடையாளத்தையும். சுயநிர்ணயத்தையும் பிரதிபலிக்கும் வகையில் மு.கா. தரப்பின் யோசனைகள் அமைவது இன்றியமையாததாகிவிட்டது.

மு.கா. தரப்பு எந்த வகையான யோசனையை முன்வைக்கப்போகிறது என்கிற நிலை ஒரு புறம் இருக்க – மு.கா. கோரும் – அல்லது முன்வைக்கும் யோசனைகள் முஸ்லிம் மக்களின் நலனில் இருந்தும் – அவர்களின் அரசியல் அபிலாசைகளுக்கு ஏற்புடையதா இல்லையா என்பது குறித்தும் நமது மக்களுடனும். ஏனைய அரசியல் தலைமை. நிறுவனங்களுடனும் பேசுவது சாலச்சிறந்ததாகும்.

ஒரு இந்தியப் பயணத்தின் ஊடாக மு.கா. தலைமை பாண்டிச்சேரி யோசனையை முன்வைக்கவுள்ளோம் என ஊடகங்களுக்குத் தெரிவித்திருப்பது அவ்வளவு தூர நோக்கான சிந்தனையாகத் தெரியவில்லை. மு.கா. தலைமை முஸ்லிம்களின் குரலாக இருக்க வேண்டுமே தவிர. காலத்திற்குகாலம் ஆதிக்க சக்திகளின் கைபொம்மையாக இருக்கக்கூடாது என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

○

## உங்கள் பார்வைக்கு...

சம்பந்தன் எம்.பி. பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது வெறும் வாய் வார்த்தையால் முஸ்லிம்களுக்கு உரிமை வழங்குவது பற்றிக் கதைக்கிறார். உள்ளால் அனைத்தையும் கச்சிதமாகவே செய்துவருகிறார். கிழக்கு அபிவிருத்தி அமைச்சின் கீழ் மீன்பிடி அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட 640 மில்லியன் ரூபாவை – உடனடியாக பிரதமரைச் சந்தித்து நிதியமைச்சின் செயலாளர் ஊடாக பொதுநிர்வாக அமைச்சுக்கு மாற்றம் செய்துவிட்டார்களாம் தமிழ்க் கூட்டமைப்பினர்! இதையறிந்த முஸ்லிம் தரப்பு மீளச்சென்று அப்பணத்தை கிழக்கு அபிவிருத்தி அமைச்சுக்குக் கொண்டுவர படாதபாடுபட வேண்டி ஏற்பட்டதாம். – இப்பணத்தைப் பொதுநிர்வாக அமைச்சுக்கு மாற்ற பெருமுயற்சி எடுத்தவர் சம்பங்கன் எம்.பி. கானாம்! பொகுநிர்வாக இளவரசி ANN உம். அவரது சகோதரர் சாள்ஸும் 10 நிமிடங்கள் காத்திருக்க வேண்டியேற்பட்டது. பற்றன் 30 நிமிடங்கள் வரை காத்திருந்தார். பின்னர் இரவு விருந்தொன்றில் பங்கேற்ற அவர் கூறினார். 30 நிமிடங்கள் மட்டும் காத்திருக்க வேண்டியேற்பட்டமை எனது அதிஷ்டமே. அவர் மேலும் கூறினார்."ரோமுக்குச் சென்றால். ரோமானியர்கள் போல் நடந்துகொள்ள வேண்டும்"

### அதாஉல்லா அணி மீதான தடை நீடிப்பு

அதாஉல்லா அணி மு.காவாக தொடர்ந்தும் செயற்படுவதற்கான தடைஉத்தரவை நீக்கக் கோரி – அதாஉல்லா அணி தரப்பால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை – பெப்ரவரி 12ஆந் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை கொழும்பு நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது. ஹக்கீம் தலைமையிலான அனைவரும் நீதிமன்றத்திற்கு சமுகமளித்திருந்தனர். அதாஉல்லா தரப்பில் முக்கியமான யாருமே சமுகமளித்திருக்கவில்லை.

### சம்பந்தன் என்ன பேசுகிறார்?

சம்பந்தன் எம்.பி. பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது வெறும் வாய் வார்த்தையால் முஸ்லிம்களுக்கு உரிமை வழங்குவது பற்றிக் கதைக்கிறார். உள்ளால் அனைத்தையும் கச்சிதமாகவே செய்துவருகிறார். கிழக்கு அபிவிருத்தி அமைச்சின் கீழ் மீன்பிடி அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட 640 மில்லியன் ரூபாவை – உடனடியாக பிரதமரைச் சந்தித்து நிதியமைச்சின் செயலாளர் ஊடாக பொதுநிர்வாக அமைச்சுக்கு மாற்றம் செய்துவிட்டார்களாம் தமிழ்க் கூட்டமைப்பினர்! இதையறிந்த முஸ்லிம் தரப்பு மீளச்சென்று அப்பணத்தை கிழக்கு அபிவிருத்தி அமைச்சுக்குக் கொண்டுவர படாதபாடுபட வேண்டி ஏற்பட்டதாம். – இப்பணத்தைப் பொதுநிர்வாக அமைச்சுக்கு மாற்ற பெருமுயற்சி எடுத்தவர் சம்பந்தன் எம்.பி. தானாம்! பொதுநிர்வாக அமைச்சின் கீழ் இப்பணம் வந்தால் ரணிலை வைத்து முழுவதையும் தங்களுக்கே சுருட்டிப் போடலாம் என நினைத்தார்களாம். – இவர்களா முஸ்லிம்களுக்கு நீதி வழங்குவது?

### ஹரீஸ், அன்வர் இஸ்மாயில் சமாதானத் தூதுவர்களாகினர்!

கடந்த வாரம் நடைபெற்ற மு.கா. அரசியல் அதிஉயர்பீடத்தில் ஏலவே திட்டமிட்டபடி ஒரு நாடகம்நடாத்தப்பட்டதாம்! மு.கா.லிருந்து பிரிந்துசென்ற அனைவரையும் ஒன்றுசேர்க்க வேண்டுமென கோரிக்கையொன்றை ஒருவர் முன்வைத்தாராம். அதற்கமைய பிரிந்தவர்களிடம் பேசுவதற்கு புதிய பல சமாதானத் தூதுவர்கள் நியமனம் செய்யப்பட்டார்களாம். பேரியல் தரப்புடன் பேசுவதற்கு ஹரீசும் அதாஉல்லா தரப்புடன் பேசுவதற்கு அன்வர் இஸ்மாயிலும் தூதுவராக்கப்பட்டனராம்!

உண்மையில் பிரிந்தவர் அனைவரும் ஒன்றுபடல் வேண்டும். அப்படியானால் முதலில் அதற்குப் பல விட்டுக் கொடுப்புகள் செய்யப்படல் வேண்டும். யார் அதற்குத் தயாராக இருக்கின்றனர்?

### பௌஸி - ஜனாதிபதி மோதல் நீடிக்கிறது!

ஜனாதிபதி கலந்து கொள்ளும் எந்த வைபவத்திலும் தான் கலந்து கொள்ளப் போவதில்லை என்ற தனது நிலைப்பாட்டிலிருந்து பௌஸி இறங்கிவரமாட்டார் போல் தெரிகிறது.

ஜனாதிபதி தொடர்ந்தும் தன்னை அவமானப்படுத்தும் செயல்களிலும் – கொழும்பு மாவட்டத்தில் தனது கட்சி அதிகாரத்தைக் குறைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வருவதாக பௌஸி பகிரங்கமாக சந்திரிகா மீது குற்றஞ்சாட்டியுள்ளார். தான் யாரின் முதுகிலும் ஏறி அரசியலுக்கு வரவில்லை எனவும் சந்திரிகாவை எச்சரித்துமுள்ளார்.

○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டு டெஸ்ட் தொடர்களுக்காக இலங்கை அவுஸ்திரேலியாவுக்குச் செல்கிறது

இரண்டு டெஸ்ட் தொடர்களில் மட்டும் கலந்து கொள்வதற்காக இலங்கை கிரிக்கட் அணி அடுத்த வருடம் ஜூன் மாதம் அவுஸ்திரேலியாவில் சுற்றுலாவை மேற்கொள்ள உள்ளது.

இரண்டு நாடுகளுக்குமிடையில் நடைபெறவுள்ள டெஸ்ட் போட்டிகளின் முதல் போட்டி டாவின்னிலும். இரண்டாம் போட்டி கொயான்ஸ்ஸிலும் நடைபெற உள்ளது. இந்தக் கிரிக்கட் சுற்றுலாவிற்கு ஒருநாள் போட்டிகள் உள்ளடக்கப் படவில்லை என்று இலங்கை கிரிக்கட் கம்பனியின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

### கால அட்டவணை

ஜூன் மாதம் 24-27 ஆகிய தினங்களில் வடக்கு டெரிடரி பிரதம அமைச்சரின் குழுவினருடன் 04 நாள் போட்டித் தொடர் டாவின்னில்.

ஜூலை 01-05 ஆகிய தினங்களில் முதலாவது டெஸ்ட் தொடர் டாவின்னில்.

ஜூலை 09-13 ஆகிய தினங்களில் இரண்டாவது டெஸ்ட் தொடர் கொயான்ஸ்ஸில்.

## இலங்கை இங்கிலாந்து கிரிகெட் வரலாற்றில் ஒரு துளி





இங்கிலாந்து கிரிகெட் குழுவினரின் பக்கமிருந்து நோக்கும் போது இலங்கைக்கு எதிரான சிறந்த டெஸ்ட் தலைவராக நசார் ஹுசேன் கருதப்படுகிறார். அவர் 06 போட்டிகளில் தலைமை தாங்கி. 04 போட்டிகளில் வெற்றியீட்டி 01 போட்டியில் தோல்வியுற்று. 01 போட்டியில் வெற்றி - தோல்வியற்ற நிலையில் முடிவுக்கு கொண்டு வந்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான இலங்கைக் குழுவின் சிறந்த தலைவராக சாதனைப் புத்தகத்தில் தனது பெயரைப் பதித்துள்ளவரே அர்ஜுனா ரணதுங்க. 1993ம் ஆண்டு நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான போட்டியின்போது கன்னி டெஸ்ட் வெற்றியை எஸ்.எஸ்.சி விளையாட்டு மைதானத்தில் வைத்து இலங்கைக்கு பெற்றுக் கொடுத்தார். இதே போல் இங்கிலாந்தில் மேற்கொண்ட கிரிக்கட் சுற்றுலாவின்போது 1998ம் ஆண்டு இரண்டாவது டெஸ்ட் வெற்றியை இலங்கைக்கு பெற்றுக் கொடுத்தார்.

## எதிர்வரும் 10 மாதங்களில் இலங்கையில் 09 டெஸ்ட் தொடர்கள்

எதிர்வரும் 10 மாதங்களில் கிரிக்கட் உலகின் பிரபலமான 03 அணிகள் இலங்கையில் சுற்றுலாக்களை மேற்கொள்ளவுள்ளன. (தற்போது இங்கிலாந்து அணி தனது இலங்கைக்கான சுற்றுலாவை மேற்கொண்டுள்ளது) அடுத்த வருடம் பெப்ரவரியில் அவுஸ்திரேலிய அணியும். அதன் பிறகு தென் ஆபிரிக்க அணியும் இலங்கையில் சுற்றுலாக்களை மேற்கொள்ளவுள்ளன. இந்த அணிகள் மூன்றும் இலங்கை அணியுடன் 03 டெஸ்ட் தொடர்கள் வீதம் விளையாடவுள்ளன. இதன் படி எதிர்வரும் பத்து மாதங்களில் இலங்கை அணி 09 டெஸ்ட் தொடர்களுக்கு முகங்கொடுக்க உள்ளது. இந்த போட்டித் தொடர்களை நிறைவு செய்த பின்னரே இலங்கை அணி ஐ.சி.சி மினி உலகக் கிண்ண போட்டியில் கலந்து கொ ள்வதற்காக இங்கிலாந்தை நோக்கி பயணம் மேற்கொள்ளவுள்ளது.



## மெய்வல்லுனர் விளையாட்டு உலகில் அனைவரையும் ஈர்க்கும் இரட்டையர்

லீஸா பாபர். மிகெலீ பாபர் ஆகிய இருவரும். சர்வதேச மெய்வல்லுனர் விளையாட்டு அரங்கில் உள்ள இளம் தாரகைகளுள் மிளிரும் பிரபல இரட்டை தாரகைகளாவர். ஒரு முறைக்குப் பல முறை பார்க்கத் தோன்றுவதோடு. உள்ளத்தை கொள்ளை கொள்வதுமாக இவர்களது விளையாட்டு காணப்படுகிறது.

1980-10-04ம் திகதி பிறந்த இவர்களுள் லீஸாவே மிகெலீயைக் காட்டிலும் 30 நிமிடங்கள் மூத்தவராவார். இவர்கள் 1998ம் ஆண்டுதான் சர்வதேச மெய்வல்லுனர் போட்டி அரங்கிற்குள் பிரவேசித்தனர். லீஸாவின் உயரம் 1.60 மீட்டர்களாகும். மிகெலீயின் உயரம் 1.57 மீட்டர்களாகும். இவர்களுக்கு இப்போது மன்மதன் கணை எய்துள்ளான். குடும்ப வாழ்வை மேற்கொண்டாலும் கூட அவர்களுக்கு விளையாட்டுக்களிலிருந்து விடைபெற மனமில்லை என்று கூறப்படுகிறது.

## அவுஸ்திரேலிய அணியினருக்கு இலங்கை சுற்றுலாவின் போது 05 ஒருநாள் போட்டிகள்

வருகின்ற பெப்ரவரி மாதம் இலங்கையில் சுற்றுலா மேற்கொள்ளவுள்ள அவுஸ்திரேலிய அணியினர் தங்கள் கால அட்டவணையில் 03 ஒரு நாள் போட்டிகளையே ஆரம்பத்தில் பதிவு செய்திருந்தனர். ஆனால். பின்னர் இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய கிரிக்கட் அதிகாரிகள் மேற்கொண்ட கலந்துரையாடலின் பயனாக மேலும் இரண்டு ஒரு நாள் போட்டிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## பள்ளிமுனைக் கிராமத்தின் கதை 19 (குறுநாவல்)

அரச அதிகாரிகள். செல்பேசி... ஏஸி.... காலிமுகத்திடல்... ரூபவாஹினி.... ஊனக் கைகளால் பஜரோ வாகனம் கூட ஓட்டவும் முடிந்தது... எல்லாம் பழக்கமாகின... முத்துமுகம்மதின் பள்ளிக்கிராமத்தனம் குறைந்து... அவனுக்குள் ஒரு நகர இளைஞன் உருவாகிக் கொண்டிருந்தான்.. இத்தனைக்குள்ளும் மைமுனாவின் கனவு மட்டும் ஒரு சிறிதும் குறையாது அமிழ்ந்தும் எழுந்தும்... வேதனைப்படுத்தியது... அவளிடமிருந்து ஒரு தகவலும் வரவில்லை.... இந்நேரம் மைமுனா யாரும் ஒரு சவூதி எஜமானனின் கட்டிலில்.... ச்சீ..... இருக்காது பாவம்!

ஒருநாள் வாகனத்தில் தலைவருடன் வரும் போது முத்துமுகம்மதே வாகனத்தை செலுத்திக் கொண்டு வந்தான். தலைவரை பக்குவமான ஓட்டுதலால் கொணர்ந்தான். கூடவேயிருந்த இணைப்பதிகாரி தலைவரிடம்.

'சேர். முத்துமுகம்மது இஸ் எ குட் ரைவர்! ட்ரைவிங் தரோ..." என்றார் தலைவர் புன்னகைத்து-

'முத்துமுகம்மது ட்ரைவிங்க மட்டுமல்ல. அரசியலும் பழக வேண்டும்! மிஸ்டர் ஹுஸைன் பாறுக். முத்துமுகம்மது தலைவருக்காக மூன்று விரல்களைத் தியாகம் செய்திருக்கிறான். அந்த 'இன்ஸிடென்ட்" நடந்த சமயம்... முத்துமுகம்மது மட்டும் தடுத்திருக்காவிட்டால் என் முகமே பிய்ந்து போயிருக்கும்... அதற்குப் பதிலாக முத்துமுகம்மதின் மூன்று விரல்கள்... இரண்டு உயிர்கள்....!"

'.............."

'யெஸ். மிஸ்டர் ஹுஸைன் பாருக்! முத்துமுகம்மது எனக்காக இழந்த மூன்று விரல்களுக்கும் நான் மூன்று பரிசு கொடுக்க இருக்கிறேன்."

முத்துமுகம்மதுக்கு வெட்கமாக இருந்தது. பேசாமல். வாகனம் செலுத்துவதில் குறியாயிருந்தான். தலைவர் விடவில்லை.

'என்ன பரிசுகள் தெரியுமா? யெஸ். மிஸ்டர் ஹுஸைன் பாறுக்! ஐம் கோயிங் டு மேக் ஹிம் அஸ்த சேர்மன் 'எப் த வயற்சேனை பராதேஸ்ய சபா..."

முத்துமுகம்மதுக்கு சட்டென விளங்காவிட்டாலும். தலைவரின் மர்மமான புன்னகையும். இணைப்பதிகாரியின் கண்களில் பளிச்சிட்டு மறைந்த பொறாமைச் சுடரும் அவனைத் திகிலடையச் செய்தன... இணைப்பதிகாரி கோபமுற்றுச் சிரித்து

'குட் ஜோக் சேர்!" என்றார்.

'இட் இஸ் நொட் ஜோக்!"

தலைவரின் குரலில் தெரிந்த உறுதி. இணைப்பதிகாரியை வாய் மூட வைத்தது.

### அத்தியாயம் 09

திடீரென்று தேனீர்க்கடை நெய்னார் முத்துமுகம்மதைச் சந்திக்கவும், தலைவரிடம் உளவு சொல்லவுமாக கொழும்பு வந்திருந்தான். பிரதேச சபைத் தேர்தல் வேட்பாளர் தெரிவுக்காக பள்ளிமுனை இஸ்லாமியக் கட்சிக் கிளையினர் கொழும்பு வரவிருப்பதாக தெரிவித்தான். சொன்னபடியே-

பள்ளிமுனை இஸ்லாமியக் கட்சிக் கிளையினர் தலைவரைச் சந்திக்கவும். வேட்பாளர் தெரிவுக்குமாக கொழும்பு வந்து சேர்ந்தனர். செய்லான் ஹாஜியார் இரண்டு மினிபஸ் நிறைய ஆதரவாளர்களோடு வந்திருந்தார். ஆதரவாளர்கள் ஓசிப் பிரயாணச் சுகத்திலும் கொழும்பில் தலைவரைச் சந்தித்து மீண்ட செம்மல்கள் பட்டியலில் சேர்ந்த திமிரிலும் இலயித்திருந்தனர். முத்துமுகம்மதை விடுப்புப் பார்ப்பதை உப தொழிலாக மேற்கொண்டனர்.

எல்லோரையும் தலைவர் தனியறையில் சந்தித்தார். தலைமை தாங்கி வந்திருந்த பள்ளித்தலைவர் செய்லான் ஹாஜியார் ஏகப்பட்ட வஸ்திரங்கள் அணிந்திருந்தார். நிரந்தரப் புன்னகையுடனும். இரகசியமாய் மாலையுடனும் அமர்ந்திருந்தார்.


தாடிமாஸ்டர் அதிசயமாக முழுக்கை சேர்ட்டை முழுக்க விரித்து மணிக்கட்டில் தெறி பூட்டி. போதாதற்கு கழுத்து டை யும் தலைமயிர் டை யுமாக இளமையில் இருந்தார்.

சர்பத் கடை கிழவர். சர்பத் நிற கொட்டிச்சாரனும். மதினாவார் அணிந்து தலைவரைக் காதலிக்கக் காத்திருந்தார். வலது கையில் மணிக்கூடு கட்டி அடிக்கடி தலை சொறிந்து மணி காண்பித்துக் கொண்டிருந்தார்.

ஓரத்தே போஸ்ட்மாஸ்டர் ஒதுங்கியிருந்தார். பள்ளிக்குயில் பளீல் தானைத் தலைவர் ஆளும் அரசரை. வாய்க்குள் ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தார்.

பக்கத்தில் முடஉதுமான். யாஸின் ஹோட்டல் முதலாளி. பொம்பிளடெய்லர். அஷ்ரஃப் தண்டயல். சப்போட்டு நானா. மௌலா இஸ்லாம். பள்ளிமுனை கொ.ப.செ. ஹுசைன் மாஹிர். மைமுனாவின் தம்பி யாஸீன். மீன்பிடிச்சங்கம். அவர் தம் கிளைகள். ப.நோ.கூ. சபையினர். மூன்று மரைக்கார்மார்கள். புரட்சி மௌலவி புழைல்..........ப்பா.. சுமார் நூற்றிருபது பேர்கள்..... மைமுனா இல்லாத மனிதர்கள்.....

தலைவருக்குப் பக்கத்தில் நின்று கொண்டு அங்குமிங்கும் போய்க் கொண்டுமிருந்த முத்துமுஹம்மதை அத்தனை மனிதரும் உலக மஹா அதிசயமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவனது ஷம்பூத் தலையையும் குர்தா ஆடையையும், மொட்டுக் கையையும் கண்டதிசயித்து 'சுத்லும் கொளும்பான்' என்றனர். செய்லான் ஹாஜியார் முத்துமுகம்மதை விழியால சுட்டெரித்துவிட்டு. தாடி மாஸ்டரிடம் 'கொறுக்காட்புளியன பாருங்க மாஸ்டர்! சலுவார் கொம்மீஸிம் லோங்கிஸிம' எனறு கூறிச சிரிததததை முத்துமுஹம்மது கவனிததான். கோபம் வெடித்து அடங்கியது.



புரட்சி மௌலவி புழைலின் புகழ்தலோடு மினிக்கூட்டம் ஆரம்பமாயிற்று. பிரதேச சபைத தேர்தல் சூடு அவர்களின் வார்த்தைகளில் சுட்டது.. தேர்தல் களம் ஆடைகளில் தெரிந்தது. இருபது நிமிடங்கள் அவர்கள் கோர்வையற்றுச் சொல்லியவற்றை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்த தலைவர் தனக்கேயுரித்தான மந்தகாசப் புன்னகையுடன் அமைதியாக்கினார். பின். திடீரென்று கணீரென்று சொன்னார்.

இன்னும் வரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க விரும்புகிறோம்... - எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஸ



*கே: சனாதிபதியும். பிரதமரும் மேற்கொண்ட இணக்க ஏற்பாட்டு முறையின் மூலமான நேரடிப் பேச்சுவார்த்தைகளை எவ்வாறு நோக்குகிறீர்கள்?*

ப: மிகவும் வரவேற்கத்தக்கன. இவ்வகையில் நாம் செயற்பட்டால், ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ள சமாதான முன்னெடுப்பை மேலும் உறுதிப்படுத்தலாம். எத்தகைய பிணக்குத் தீர்வு முயற்சிக்கும் இது முக்கியமானது. பயங்கரவாதம். பிற பிரச்சினைகள் என்பவற்றிலிருந்து இந்நாட்டை மீட்டெடுப்பதற்காக இரு தலைவர்களும் இப்போது செயற்படுவதனை நான் வரவேற்கிறேன்.

*கே: அரசாங்கம் தேசிய பாதுகாப்புத் தொடர்பாக விட்டுக் கொடுக்கும் நிலையில் உள்ளதாகக் கூறி ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றார். எனினும் அதன் பிறகு மாற்றங்கள் ஏதும் நடைபெறா நிலையில் விடயங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. எனவே மூன்று அமைச்சர்களைப் பதவியிலிருந்து நீக்கியதிலிருந்து ஜனாதிபதியின் நல்லெண்ணம் கேள்விக்குட்படுத்தப்பட முடியுமா?*

ப: சமாதான முன்னெடுப்பின் நிலைமையை பாதுகாப்பதற்காக ஜனாதிபதி கவனமாகச் செயற்படுகிறார் என நான் கருதுகிறேன். முழுமையான சமாதான முன்னெடுப்பு ஜனாதிபதியாலேயே தொடங்கப்பட்டது. எனவே அதனைச் சிதைவடையாது காக்கவே ஜனாதிபதி விரும்புவார். எனவே அவர் அவசரப்பட்டுச் செயலாற்றுவதன் மூலம் இடர் நிகழ இடம் வைக்க மாட்டார். இக்கட்டத்தில் ஒரேயடியாக மாற்றங்களை எதிர்பார்க்க முடியாது. சமாதான முன்னெடுப்புக்கு இடையூறில்லா வகையிலான மாற்றங்களை ஜனாதிபதி காலப்போக்கில் அறிமுகப்படுத்துவாரென நான் கருதுகிறேன்.

தேவையாயிருந்த காரணத்தாலேயே மூன்று அமைச்சுக்களைக் கையேற்க வேண்டியேற்பட்டது. உதாரணமாகக் கிழக்கின் பாதுகாப்பு நிலை முன்பை விட மோசமாகிக் கொண்டு வந்தது. முஸ்லிம்கள் தொடர்ந்தும் இடருக்குட்படுத்தப்பட்டார்கள். பொலிஸார் அப்பாவி மக்களைக் கொடுமைப்படுத்தினர். குற்றச் செயல்கள் கட்டுப்பாட்டையிழந்து. அதிகரித்த வண்ணமிருந்தன. பாதாள உலகச் செயல்கள் அதிகரித்துச் சமூகத்தை அச்சுறுத்தத் தொடங்கின. எனவே இவை ஒன்று சேர்ந்து ஜனாதிபதியினை இவ்வமைச்சுகளைப் பொறுப்பேற்கும் நிலையினை ஏற்படுத்தின.

*கே: புலிகள் புதிதாக பதுங்கு குழிகளை அமைப்பதாக அறிக்கைகள் விடப்பட்டது. அவற்றை அகற்றுமாறு ஜனாதபதி பாதுகாப்புப் படையினருக்குக் கட்டளையிடுவாரா?*

ப: இத்தகைய குறிப்பிட்ட ஒரு விடயம் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டபோது. புலிகளுடன் பேசும்படி ஜனாதிபதி உடனடியாக இராணுவத்தினருக்குக் கட்டளையிட்டார். எனவே எதிர்காலத்திலும் ஜனாதிப்தி இத்தகைய விடயங்களையிட்டுப் பாராமுகமாக இருப்பார் என நான் நினைக்கவில்லை. அவசியம் ஏற்படின் அத்தகையவற்றை அகற்றும்படி ஜனாதிபதி. படையினருக்குக் கட்டளை பிறப்பிப்பார்.

*கே: இன்றைய நெருக்கடிக்குத் தேசிய அரசாங்கம்தான் வழி எனக் கருதுகிறீர்களா?*

ப: இல்லை. தேசிய அரசாங்கமொன்றுக்கு நாம் ஆதரவளிக்க மாட்டோம். தேசிய இணக்க அடிப்படையிலான அரசாங்கமொன்றை அமைக்கவே நாம் நிச்சயமாக இணங்குவோம். வித்தியாசமான கொள்கையுள்ள கட்சியொன்றுடன் நாம் எவ்வாறு தேசிய அரசாங்கமொன்றை அமைக்க முடியும்? இனப் பிரச்சினை தொடர்பாகத் தீர்வொன்றைக் காண முயற்சிப்பதற்காக ஐ.தே. கட்சியுடன் செயற்பாட்டு ரீதியிலான இணக்கமொன்றுக்கு வர நாம் இணங்க முடியும். எனினும் ஐ.தே. கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளுடன் நாம் இணங்க முடியாது. எனவே ஐக்கிய தேசியக் கட்சியுடன் தேசிய அரசாங்கம் அமைத்துச் செயற்படுவது எப்படி?

இவ்வாறு செயற்படுவதற்கு மக்களும் எமக்கு அங்கீகாரம் அளிக்கவில்லை. நாட்டின் எதிர்க்கட்சி சிறப்பாக இயங்கினால் மட்டுமே. ஜனநாயகம் சிறப்பாகச் செயற்படும். தேசிய அரசாங்க அமைப்பில் எதிர்க்கட்சிக்கு இடமில்லை. எனவே. இந்நிலைமையில் நாம் எவ்வாறு செயற்படுவது? எதேச்சகார அரசாங்கத்தை எம்மால் ஏற்க முடியுமா? எனவே இதற்கு இடமில்லை.

*கே: ஜே.வி.பி. தனது கோட்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளது. ஜே.வி.பி.யினரின் தந்திர உபாயங்களை எவ்வாறு நோக்குகிறீர்கள்?*

மாக்சியக் கட்சிகள் இத்தகைய நிலைமைகளை வைத்தே வளருகின்றன. இப்போதுள்ள நிலைபற்றியும் அதன் அடிப்படையில் எப்படித் தொடர்ந்து இருப்பது என்பது பற்றியும் ஜே.வி.பி. யினர் பொது மக்களுக்கு கூறியுள்ளமை பற்றி ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஜே.வி.பி. தான் இந்நாட்டில் மூன்றாவது அரசியல் சக்தியாக உள்ளது என்றும், தான் ஒரு சக்திமிக்க கட்சியாக எழுந்து வளர்ந்து வருகிறது என்றும் கருதுகிறது. இதற்கான பதில் மக்களிடம் உள்ளது. அதனையிட்டு அதிகமாக நான் எதனையும் கூறவில்லை. ஆனால் மக்களுக்கு உரிய சேவைகளை வழங்காமையிட்டு இரு பிரதான அரசியற் கட்சிகளும் பொறுப்பேற்க வேண்டும். பிரதான கட்சிகள், தம் கடமைகளில் தவறும்போது நிலைமையில் இருந்து நன்மை பெற்று மேலும் அதிகபலன் பெற ஜே.வி.பி. போன்ற கட்சிகள் எண்ணுவது சகஜம். இது மாக்ஸியக் கட்சிகளில் பின்பற்றப்படும். ஒரு கோட்பாடாகும். நாம் அதிகம் தவறு செய்கையில், ஜே.வி.பி. அதிகம் மக்கள் மனதை வெல்லும். இதனை எப்போதும் மனதிற் கொள்ள வேண்டும்.

*கே: ஜனாதிபதி ஐ.தே. கட்சியுடன் பேசும் அதேவேளை ஜே.வி.பி.யுடன் வேறுவகையில் ஒப்பந்தம் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது. இங்கு முரண்பட்ட நிலைமை இருப்பதாகக் கூற முடியுமா?*

ப: முரண்பாடு இல்லை. இந்நாட்டு மக்களுக்கு இவை பற்றித் தெளிவாகக் கூறப்படவில்லை. ஜே.வி.பி.யுடன் இணைந்து செயற்படுவது என்பதும். ஐ.தே. கட்சியுடன் செயல் ரீதியான ஏற்பாடொன்றைச் செய்து கொள்வதும் வேறுபட்ட இரு விடயங்கள் ஆகும். ஆட்சியில் உள்ள எக்கட்சியினையும் தோற்கடிப்பதற்காக எத்தனைக் கட்சிகளுடனும் கூட்டிணையலாம் என்பது தொடக்க காலத்தில் இருந்தே ஸ்ரீ.ல.சு. கட்சி பின்பற்றி வந்துள்ள ஒரு கொள்கையாகும். கட்சியின் வரலாற்றில் இது மிகத் தெளிவு. நாம் ஐ.தே.க.யைத் தோற்கடிப்பதற்காக. அதற்கு எதிரான கட்சிகளுடன் கூட்டுச் சேருவோம். இது இலகுவானது.

எனினும் ஐ.தே.கட்சியுடன் செயல்ரீதியான ஏற்பாட்டுக்கு வருதல் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தைக் கொண்டதாகும். அதனையே இப்போது நாம் செய்கிறோம். ஜே.வி.பி.யுடன் இணைதல் என்பது நீண்ட காலத்திட்டமாகும். ஆனால் இதற்காக நாம் எமது கொள்கைகளைப் பலி கொடுக்கப் போவதில்லை.

*கே: ஜனாதிபதி. மாகாண சபைத் தேர்தல்களை முதலில் நடத்துவாரென்றும். ஆறு மாதங்களின் பின்னர் பொதுத் தேர்தல் நடத்துவதாகவும் ஊடகங்கள் அறிக்கை விடுக்கின்றனவே. இது தொடர்பாக உறுதியான முடிவு இருக்கிறதா?*

ப: இம்முடிவு எவ்வளவு உறுதியானது என்பதனை நான் அறியமாட்டேன். பொதுசனக் கூட்டு முன்னணி எதற்கும் தயாராக உள்ளது. இதனால்தான் நாம் ஜே.வி.பி.யுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையினைக் கைச்சாத்திட்டுள்ளோம்.

*கே: 2005ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்காக உங்கள் கட்சியின் அடுத்த வேட்பாளர் யார் என்பதைத் தெரிவிக்காது தாமதிக்கப்பட்டால் கட்சிக்கு ஊறு விளையாதா?*

ப: ஒரு கட்சியென்ற வகையில் நாம் நிறைவேற்று சனாதிபதிப் பதவியை அகற்றுவதற்காக எண்ணியுள்ளோம். இறுதி நேரம் வரை இதனை அகற்றவே நாம் முயற்சிக்கிறோம். இது தொடர்பாகக் கட்சி முழுமையான ஒரு தீர்மானத்திற்கு வரவில்லை. ஆனால் இதன் அர்த்தம் சரியான நேரத்தில் உரிய முடிவை எடுக்காது என்பதல்ல. நாம் எதனையும் பிற்படுத்த மாட்டோம். உண்மையில் இது தனிப்பட்ட ஆட்களின் முடிவுஅன்றி. கட்சியின் முடிவாக இருக்கும்.

நன்றி: சண்டே லீடர்
15.12.2003

# தேவஹூவ முஹம்மது முனாஸ் முஹம்மது ரிகாஸின் கொடூர கொலைக்குச் சரியான நியாயம் கிடைக்குமா?



கடந்த 11.12.2003ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் 19 வயதுடைய முஹம்மது ரிகாஸ் என்னும் ஆட்டோ சாரதியை வாடகைக்கு அழைத்துச்சென்று. ரனவிரு காட்டில் வைத்து கொடூரமான முறையில் துண்டம் துண்டமாக வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் கொலை செய்யப்பட்டதிற்கான காரணத்தை அங்கு சென்று கேட்டறிந்தபோது: கடந்த நோன்புக் காலத்தில் புல்னேவ முஸ்லிம் கிராமத்தில் அதிகாரத்திலுள்ள கட்சியொன்றின் ஆதரவாளர்களால் ஒட்டப்பட்ட துண்டுப் பிரசுரங்களைக் கிழித்ததாக அந்தக் கிராமத்தைச் சேர்ந்த இரண்டு ஹஜியார்மார்கள் பக்கத்துக் கிராமமான மகுல்கஸ்வெவ சிங்களவர்களிடம் நமது கிராமத்து இளைஞர்களைக் கொஞ்சம் தட்டி வைக்குமாறு கூறியுள்ளார்கள். இதற்கமைய சிங்களவர்கள் நோன்பு 22இல் கிராமத்துக்குள் நுழைந்து சில இளைஞர்களை அடிக்க முற்பட்டபோது. அனைத்து முஸ்லிம்களும் ஒன்றுசேர்ந்து அவர்களை எதிர்த்தனர். அத்தோடு அவர்கள் சென்று விட்டனர். அதனைத் தொடர்ந்து நோன்பு 27இல் அந்த கிராமத்தினூடாக தமது வீட்டுப் பொருட்களுடன் வந்த கலேவெலயைச் சேர்ந்த ரோகண என்பவரும். அவருடைய சில கையாட்களும் புல்னேவ முஸ்லிம் இளைஞர்களைத் தாக்கியதுடன் 5 பேருக்கு கத்தியாலும் குத்தியுள்ளனர். இதனால் ஆத்திரமுற்ற முஸ்லிம் இளைஞர்கள் கலேவெல சண்டியனைத் தாக்கியதுடன் அவனுடைய லொறியையும் தீக்கிரையாக்கிவிட்டனர்.

இப்பிரச்சினை அரசியல் பிரச்சினையாக இருந்தபோதும் அந்தக் கிராமத்து மக்களால் பிரதேச சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட ஆரி என்னும் உறுப்பினர் மதஸ்தான ஒலிபெருக்கியை வேனில் கட்டிக்கொண்டு "தம்பிலோ அபே சிங்கள மினுஸுன்ட்ட கஹகன. கஹகன எனவா ஒக்கோம தம்பிலாட்ட கஹன்ட தவ வினாடி தஹயகின் எகத்துவென்ன" என்று கூறியவுடன் சில இனவாதிகள் ஒன்றுசேர்ந்து மொத்தமாக முஸ்லிம்களின் 10 வீடுகளையும் ஒரு வியாபார நிலையத்தையும். மகுல்கஸ்வெவ பள்ளிவாசலையும் உடைத்ததுடன் புனித குர்ஆன்களை தீயிட்டுக் கொழுத்தியும் உள்ளனர். ஆனால் இவ்வளவும் நடந்தும் கலேவெல பொலிஸுக்குத் தெரிவிக்கப்பட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனைத் தொடர்ந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜுனைட். ஜனாதிபதி ஆகியோருடன் தொடர்பு கொண்டதற்கிணங்க விசேட இராணுவம் அப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டு அம்மக்கள் காப்பாற்றப்பட்டு விட்டார்கள்.

இதேவேளை அன்றிரவு கொழும்பிலிருந்து கல்னேவையை நோக்கிச் செல்லும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான தனியார் பஸ்ஸில் சென்ற மூன்று முஸ்லிம் பெண்களையும். பஸ் சாரதி. நடத்துனர் உட்பட ஒன்றுமறியாத சுமார் 10க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் தாக்கப்பட்டார்கள். ஆனாலும் முஸ்லிம்கள் பொறுமையுடன் இருந்தார்கள். மேலும். முஸ்லிம்கள் மீது அட்டூழியங்கள் தொடங்கவே முஸ்லிம்கள் கொதித்தெழுந்தனர். அதனைத் தொடர்ந்து அவ்விடத்திற்கு விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிஹார இதற்குப் பிறகு இப்பகுதியில் எந்தப் பிரச்சினையும் வரமாட்டாதென்றும். சமாதானக் குழுவொன்றையும் நிறுவிவிட்டுச் சென்று விட்டார். அதை முஸ்லிம்கள் ஏற்றுத் தமது சொத்திழப்பிற்குக் கூட வழக்குத் தொடராமல் சமாதானத்திற்குச் சென்றார்கள். ஆனால் முஸ்லிம்களை ஏமாற்றிய அவர்கள். கடந்த 11ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் அனீஸ் என்ற ஆட்டோச் சாரதியை வாடகைக்கு அமர்த்த முயற்சித்துள்ளார்கள். ஆனால் அவர் கிடைக்காததால் ஒன்றும் அறியாத ரிகாஸை வாடகைக்கு அழைத்துச் சென்று துண்டம் துண்டமாக வெட்டிக் கொலை செய்துள்ளார்கள்.

இதுபற்றி அங்குள்ள இளைஞர்கள் பலர் இவ்வாறு தெரிவித்தார்கள். ரிகாஸை அழைத்துச் சென்று கடைகளில் தேநீர் அருந்தியும் உள்ளனர். இவர் தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ரணவிரு காட்டில் ஒரு மைல்தூரம் வரை ஓடியுள்ளார். ஆனாலும் இவரை விடாத விரோதிகள் துரத்தித் துரத்தி வெட்டியுள்ளனர். அப்படிக் கொலை செய்யப்பட்டும் கலேவெல பொலிசார் எந்தவிதத் தேடுதல் நடவடிக்கையையும் எடுக்கவில்லை. கல்கிரியாகம பொலிசார் உரிய நடவடிக்கை எடுத்து நான்கு பேர்களைக் கைது செய்துள்ளனர். எம்முடைய குறைகளைப் பல முஸ்லிம் அமைச்சர்களுக்கும் அறிவித்தோம். ஆனால் ரவூப் ஹக்கீமைத் தவிர வேறுயாரும் அந்தப் பகுதிக்குக் கூட வரவில்லை. சமாதானம் பேசிய ரஞ்சித் அலுவிகார எங்கு மறைந்துவிட்டார். அவர்தான் இக்கொலைக்குக் காரணமானவர் என்று அந்த இளைஞர்கள் கூறினர்.

கலேவெல சமாதான இயக்கத்தின் தலைவர். தேவஹூவ சஞ்சானந்த தேரர் கூறும்போது: "50 வருடங்களாக சிங்களவர்களாகிய நாமும். முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றோம். இவ்வளவு காலமும் இப்படியொரு கொடூர சம்பவம் நிகழ்ந்ததில்லை. ஆனால் ஒருசில அரசியல்வாதிகள் எமக்கிடையில் இனவாதத்தைத் தூண்ட முயற்சிக்கின்றனர். நாம் அதற்கு இடம்கொடுக்க மாட்டோம். இக்கொலையைச் செய்தவர்களுக்கு அரசாங்கம் உரிய தண்டனையை வழங்க வேண்டும்" என்று தெரிவித்தார். கொலை செய்யப்பட்ட ரிகாஸின் தாய் கூறும்போது:

"எனது மகன் ரிகாஸ் எதிர்வரும் 25ஆம் திகதி வெளிநாடு செல்வதற்கு ஆயத்தங்கள் செய்துகொண்டிருந்தார். அதற்கு முன் தனது தங்கையின் திருமணம் 20ஆம் திகதி நடைபெற இருப்பதனால் என்னிடம் இவ்வாறு கூறினார்."உம்மா தங்கச்சியுடைய கல்யாணமும் நெருங்கிவிட்டதால் நான் இன்றைக்கு மட்டும் திருவீல் ஓட்டிவிட்டு நாளையிலிருந்து உங்களுக்கு வேலை செய்து தருகிறேன்." என்று கூறிவிட்டுச் சென்ற என்ற மகனுக்கு இப்படியான ஒரு சம்பவம் நடந்து விட்டதே. எங்கட புள்ளய கொலை செய்தவங்கள அல்லாஹ் காட்டிவிடு" என்று ஏங்கி ஏங்கி அழ ஆரம்பித்து விட்டார்.

ரிகாஸைக் கொலை செய்தவர் யார்? நமது சமூகத்தைக் காட்டிக் கொடுக்கும் முனாபிக்குகளுக்கு என்ன செய்வது? கலேவெல முஸ்லிம் இளைஞர்களின் பாதுகாப்பிற்கு யார் பொறுப்பு?

தேர்தல் காலங்களில் மட்டும் வீடு வீடாய் வரும் அமைச்சர்கள் இப்பொழுது எங்கு சென்றுவிட்டார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைச் சோம்பேறிகளா நாம்?

இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு பலவேறு சிறப்புக்கள் பரவியும்-விரவியும் கிடக்கின்றன. இந்த சிறப்புகளுக்கு மத்தியில் "நாம் சிந்தனைச் சோம்பேறிகளும் ஆவர்....." எனக் கூறினால், நமக்கு அதனை ஜீரணிப்பது, சற்று சிரமமாகத்தான் இருக்கும். ஆனால்-எந்த விடயத்திலும் முஸ்லிம்கள் மௌனமாக - ஆர்வமற்று- வாளாவிருப்பதை அவதானித்தால், அவர்கள் சிந்தனைச் சோம்பேறிகள்தான் என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

நாடு போகிற போக்கையும், அரசியல் தலைவர்கள் ஆடும் ஆட்டத்தையும், கட்சிகள் சிதறுண்டு கிடப்பதையும், முஸ்லிம் எம்.பீக்கள்-அமைச்சர்கள் ஒற்றுமை குலைந்து அறிக்கை விடுவதையும் பார்க்கும்போது, நம் முஸ்லிம்கள் எவ்வித பிரதிபலிப்புமின்றி, அவர்கள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் இருப்பதால், முஸ்லிம்கள் எது குறித்தும் சிந்திப்பதே இல்லையோ என்றே எண்ணத் தோன்றுகின்றது.

இரு தசாப்த கால இனப்பிரச்சினைக்கு எப்படியும் முடிவு கண்டு சமாதானத்தை எந்த விலை கொடுத்தேனும், கொண்டுவந்துவிடவேண்டுமென்ற முனைப்புடன், அரசும் புலிகளும் மேற்கொண்டு வந்த பேச்சுவார்த்தை நிகழ்வுகள் தடைப்பட்டு விட்டன. இடைக்கால நிர்வாக சபைக்கான திட்டவரைவினை புலி இயக்கத்தினர் அரசுக்கு சமர்ப்பித்துவிட்டனர். இது குறித்து சாதக - பாதகமான கருத்துக்களை பலரும் விமர்சிக்கின்றனர். இந்த செயற்பாடுகள் யாவும் தத்தம் எதிர்காலம் பற்றிய கவலை - கரிசனையினால் எழுபவையே.

இதில் முஸ்லிம்களின் நிலை என்ன? எந்தளவு இதுகுறித்து உள்வாங்கி - உணர்ந்து தெளிந்து-செயற்படத் துணிந்துள்ளனர்? எதுவும் உருப்படியாக நடந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில்-முஸ்லிம் அரசியல் தலைமைகள் கூறுபட்டும், மாறுபட்டும், வேறுபட்டும் கிடப்பதால், ஏகோபித்த குரலில் சமுதாயத்தின் எதிர்காலம் நோக்கிய எண்ணங்களை இதுவரை முன்வைக்கவில்லை. இது எதைக் காட்டுகிறது?

முஸ்லிம்கள் இனப்பிரச்சினை தொடர்பில், சமாதானம் நோக்கிய தெளிவில் இன்னும் நிறைவாக, சிந்திக்கத் தலைப்படவில்லை. எல்லோருக்கும் ஏனோதானோ மனப்பான்மைதான். சிந்தித்து தெளிந்தாலன்றோ சமுதாய, அரசியல் தலைவர்களுக்கு அழுத்தம் கொடுக்க முடியும். சமுதாயக் கோணத்தில் எந்தவித அழுத்தமோ-கட்டாயமோ-ஆர்ப்பாட்டமோ உண்டாகாத காரணத்தினால்தான், பிரிந்து நிற்கும் கட்சி அணியினர் ஒவ்வொருவரும், பிரியப்பட்ட வழிகளில் எல்லாம் நடந்து வருகின்றனர்?

கல்வித்துறையில் கவனம் செலுத்திப் பார்ப்போம். நம் சமுதாயத்தில் விரல்விட்டு எண்ணிவிடத் தகும் பாடசாலைகள் தவிர, மற்ற எல்லாப் பாடசாலைகளும் தரம் குன்றி, வளம் குறைந்தே காணப்படுகின்றன. ஆசிரியர் பற்றாக்குறை பெரும்பாலான பாடசாலைகளில் நிலவுவதோடு, இன்னும் எத்தனையோ பிரச்சினைகள், குறைபாடுகள், தேவைகள் முஸ்லிம் வித்தியாலயங்களில் நிறைந்து, உறைந்தேயுள்ளன. பொதுவில், முஸ்லிம் பெற்றோர்கள் தத்தம் பிள்ளைகள் பயிலும் பாடசாலைகள் மீது அவ்வளவாக அக்கறை-அபிமானம் கொண்டிருப்பதில்லை. கேட்டால், "இருப்பதாகவே" சொல்வர். பாடசாலை அபிவிருத்தி சங்கக் கூட்டங்களுக்கு அழைப்பு விடுத்தால், ஆயிரத்திற்கு மேல் மாணவர்கள் பயிலும் பாடசாலைகளில் 25-30 வரையான பெற்றோர்களே வருகை தருவது நீண்டகால நிதர்சனக் காட்சி. முஸ்லிம் பாடசாலைகளின் பரிதாபகரமான நிலைமைக்கு, கொழும்பு முஸ்லிம் பாடசாலைகளே நல்ல சாட்சி எனலாம்.




முஸ்லிம்கள் சிந்தனை சோம்பேறிகள்தாம் என்பதற்கு, நாட்டிலுள்ள முஸ்லிம் பள்ளிக்கூடங்களின் வளர்ச்சி இல்லாத தேங்கிய நிலை நல்ல உதாரணமாகும்.

முஸ்லிம் இளைஞர்களின் பிரச்சினையைத் தொட்டுப் பாருங்கள். வேலை வாய்ப்பின்றி வீதியளக்கும் "வேந்தர்"களின் தொகை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போவது பற்றி, எந்த சமுதாய தலைவர்களுக்கும் கவலையுமில்லை. வெட்கமுமில்லை. இளைஞர்களின் படிப்புக்கும்-தகுதிக்கும்-அனுபவத்திற்கும் ஏற்றவிதமான தொழில் வாய்ப்புக்கள் கிடைக்காமையால், சிந்_ைனைகள் சிதறி, செயல்கள் மாறி, வேண்டத்தகாத பழக்க வழக்கங்களுக்கு சமுதாய நம்பிக்கை நட்சத்திரங்கள் பலியாகி வருவதை, நம்மில் எத்தனை பேர் சிந்தித்துப் பார்த்துள்ளோம்? போதை வஸ்துக்கு ஆளாகி, எதிர்காலத்தைத் தொலைத்துவிட்டு தெருவோரங்களில் படுத்துறங்கும் நம் இளைஞர்களின் புள்ளிவிபரங்கள் எத்தனை ஹாஜியார்களுக்கு, உலமாக்களுக்கு, அரசியல் தலைவர்களுக்குத் தெரியும்?

சீதனமாக நம் சமூகத்தில் வீடு கேட்கப்படுகிறது. சீதனப்பிரச்சினை-நகை நட்டு விவகாரம்-இதர செலவினங்கள் என்று, சமாளிக்க முடியாத பணக்கஷ்டத்தினால் பெருமூச்சு விடும் ஏழை பெற்றோரின் நிழலில், இன்னுமே கரைசேர வழியறியாது கம்பிகளை எண்ணும் ஜன்னலோரத்து முதிர்கன்னிகள் நம் சமூகத்தில் ஏராளம், தாராளம்! மஹரை வற்புறுத்தும் ஒரு சமுதாயத்தில் இப்படியொரு நிலை தொடர்வது வேதனையா? வெட்கமா? நம் சமுதாயப் பிரமுகர்கள்-பெருந்தகைகள் எத்தனை பேருக்கு இந்தக் கவலையுண்டு?

முல்லா சமீபத்தில் தினசரியொன்றில் , "காழி மன்றங்களில் பெருகி வரும் விவாக விலக்கு தொடர்பான வழக்குகள்" பற்றி சோகம் சுமந்த செய்தியினை படிக்க நேர்ந்தது. அகதிகள் அன்றாடம் எதிர்நோக்கும் அவலங்கள் குறித்து ஊடகங்களே வருந்துகின்றன. "வெளிநாடுகளுக்கு ஹவுஸ்மெய்ட்" களாகச் செல்லும் நம் சமுதாய சகோதரியர் படும்பாடுகள் ஊமை கண்ட கனவுமாதிரி.

இவ்வாறு முல்லாவினால் சமுதாயப் பிரச்சினைகளை அடுக்கிக் கொண்டே போக முடியும். வாழ்க்கைத் திட்டத்தை நெறியாகக் கொண்ட இஸ்லாத்தின் நெஞ்சங்கள், இப்படி எரியும் பிரச்சினைகளின் நடுவே, தினமும் திணறுவது ஏன்? நம்மவர்கள் நன்மார்க்கத்தின் நல்வழிகளின்படி நடந்து, சமுதாயத்தின் நலன்குறித்து நாட்டம் கொள்ளாததே காரணமாகும்.

சுயநலம் மனச்சிறையில் மண்டியாகப் படிந்து உறைந்து விட்ட அளவுக்கு, நம்மில் பலரிடையே, பொதுநலம்-சமுதாயநலம்-சமய எழுச்சிக்கான எண்ணம் நிறையவில்லை என்ற குற்றச்சாட்டை மறுக்க முடியாது. சமூக நலன் குறித்த சிந்தனை-கவலை-கவனம் நம்மிடையே ஏற்படுமானால், பல பிரச்சினைகள் தானே தீர்ந்துவிடும். பிரச்சினைகள் தீர.. தீர, சமூகத்தின்மீது ஆர்வமும், ஆசையும் ஏற்படும். "சிந்தனைச் சோம்பேறிகள்" என்ற பழிச்சொல் ஒளிமங்கிவிடும். சமூகம் தரும் அழுத்தம்-விழிப்புணர்வு தலைவர்களை வழி நடத்தும் என்பது உறுதி!

## ஆப்கானில் அட்டகாசமான மாற்றம்!



ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதும் காணும் மாற்றங்கள் கணக்கிலடங்காதவை. பெண்கள் பாடசாலைகள், கல்லூரிகளுக்குச் செல்கின்றனர். வானொலி, தொ.கா பெட்டிகள் வீட்டிற்குள்ளே. கார் வாங்க வசதியுள்ளவர்கள் கார்களில் பறப்பு! பிரபலமான காபூல் சாலையில் ஒரு காலை வேளையில் காணப்படும் கார்களின் பவனி 'இங்கே கிளிக்'!

## ஊழலின் ஊற்றுக்கள்!

தேர்தலுக்கு பின் ஒவ்வொரு வேட்பாளரும் தேர்தல் ஆணையத்திற்குக் கணக்குக் காட்ட வேண்டும் என்றெல்லாம் சட்டமிருந்தாலும், சுதந்திரம் பெற்றதிலிருந்து இன்று வரை பெரும்பாலும் பொய்க் கணக்குகள்தான் சமர்ப்பிக்கப்பட்டு வந்திருக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. சொந்த சொத்து சேமிப்பதிலிருந்தோ, கடன் வாங்கியோ தேர்தலுக்காகச் செலவு செய்த பணத்தைத் திருப்பி எப்படியாவது ஈடுகட்டியாக வேண்டுமென்று வரும் போது, ஊ்ழலும் தானாகவே முளைத்து விஜ்ஜ்றது.



## மானா மக்கீன் தருவது

இப்படி கருத்து கூறுபவர், இந்திய நிர்வாகத் தொண்டில் மாநில, மத்திய அரசுகளின் தலைமைப் பதவிகளை வகித்து விட்டு ஓய்வு பெற்ற ஒருவரான திரு. ப. ஸ்ரீ ராகவன், ஐ.நா.வின் ஆலோசகராகவும் அமெரிக்க நாடாளுமன்றச் சிறப்பு அழைப்பாளராகவும் இருந்திருக்கிறார். இலங்கை அரசியல்வாதிகளுக்கும் பொருந்தக்கூடிய கருத்து.

## ஒரு நவீன யுக்தி

தொடர் வண்டி (ரயில்) செலுத்தும் சாரதிகள் குடிபோதையில் இருந்தால் சப்தம் எழுப்பி உசார்படுத்தும் ஒரு நவீன ரயில் எஞ்ஜினை இந்தியாவின் மேற்கு ரயில்வே அறிமுகம் செய்துள்ளது.

## கண்ணீர். கண்ணீர்

மனிதர்களின் கண்ணீர் நூற்றுக் கணக்கான நோய்க் கிருமிகளை கொல்லும் சக்தி கொண்டதாக இருக்கிறது. 'லைனோசம்' என்றொரு வகை இரசாயனச் சத்து கண்ணீரில் ஏராளம். இவை கிருமிகளைக் கொல்கின்றன. இதற்காக எப்பொழுதும் அழுது வடியாதீர்கள்!

## 'கல்யாணந்தான் கட்டிக்கிட்டு' கவிஞர் மன்னிப்பு கேட்டார்!

'கல்யாணந்தான் கட்டிக் கிட்டு ஓடிப்போலாமா, ஓடிப்போய் கல்யாணந்தான் கட்டிக்கலாமா' என்று தவறான வழிகாட்டக் கூடிய கவிதையை எழுதிய கவிஞர் சிநேகன் மக்களிடம் மன்னிப்புக் கேட்டுள்ளார். தேனி மாவட்டம் கம்பம் இலக்கிய விழாவில் பேசிய அவர் "150-க்கும் மேல் தத்துவப்பாடல் பாடியுள்ளேன். அதை யாரும் கண்டு கொள்ளவில்லை" என்று ஆதங்கப்பட்டுள்ளார். 'சாமி படத்தில் 'கல்யாணந்தான் கட்டிக்கிட்டு' பாடல் எழுதியதற்காக உங்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்' என்று கூறியுள்ளார்.

## 'பாய்ஸ்' என்றால் மிருகங்களா?




'பாய்ஸ்' என்ற திரைப்படம் வந்தாலும் வந்தது. சரியான சர்ச்சையில் சிக்கிக் கொண்டது. படத்தில் ஆபாசம் அதிகம் இருக்கிறது என்று புகார் மேல் புகார போக நிறைய 'வெட்டு' விழுந்ததாம். 'சன்' டி.வி.யில் 'பாய்ஸ்' பற்றிய திரை விமர்சனத்தில் காட்டிய ஒரு காட்சி நெஞ்சை உறைய வைப்பதாக இருந்தது. மாணவர்களின் ஒருவனைச் சூழ்ந்து கொண்டு மிருகம் போல் தாக்குவதுதான் அது! ஒருவன் சுவரில் ஏறிக்குதித்துத் தரையில் கிடப்பவனின் வயிற்றில் குதிப்பது நிச்சயம் கொடுமையான காட்சி. அந்தக் காட்சியை நீக்கினார்களா, இல்லையா?

## சூடாக உணவு உண்பது நல்லதா?

உணவு சூடாக இருக்கும் போது உண்பது நல்லதல்ல.

தொடர்ந்து சூடாக உணவை உண்பவர்களுக்கு புற்றுநோய் வரக்கூடும் என மருத்துவ வல்லுநர்கள் கருதுகிறார்கள்.

உணவுக் குழியில் புற்றுநோய் உண்டாகுமாம்.

காற்றில் உள்ள நோய் நுண் கிருமிகள் புகாவண்ணம் மூடி பாதுகாக்கப்பட்ட உணவை ஏறத்தாழ உடல் வெப்ப நிலையில் (37° செ) உண்பதே சிறந்தது ஆனால் ஆறி உலர்ந்து போன உணவும் சிறந்ததல்ல.

## ஆதம் பொருள் என்ன?

ஆதம் என்பது கோதுமை நிறத்தவர் என்ற பொருள் தரும். இது ஆதம் (அலை) அவர்களது உடல் நிறத்தை வெளிப்படுத்துகிறது.

## இப்படியும் ஒருவர்!

பார்வை இல்லாத ஒருவர் வாழ்க்கையில் எந்தளவு சாதிக்க முடியும் என்பதற்கு ஓர் இலக்கணம் - டாக்டர் எப். எஸ். அப்துல் ஸலாம்.

வட இந்தியரான இவர் தமிழ், மலையாளம், கன்னடம், மராத்தி, இந்தி, ஆங்கிலம், ஜெர்மன், அறபி ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்.

'பிரண்டோ' என்ற சர்வதேச மொழியிலும் பயிற்சி பெற்று நாடு முழுவதும் மாவட்ட வாரியாக பார்வையற்றோர் அமைப்புகளை நிறுவி இன்று வரை அவர்கள் நலனுக்காகப் பாடுபட்டு வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அண்மையில் கிண்ணியாவில் முஸ்லிம்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட கோர வன்முறைகள் ஓரளவு வெளி உலகிற்கு வெளிவந்தாலும் மிக மோசமானதும் முக்கியமானதொரு விடயமுமான ஈச்சந்தீவு விவகாரம் வெளி உலகிற்கு வராமல் இருட்டுக்குள் புதையுண்டு போயுள்ளது.

கடந்த 2003.10.08 அன்று கிண்ணியா பைசல் நகர் அல்-இர்பான் வித்தியாலய காணிக்குள் தமிழர்கள் அத்துமீறிக் குடியேறினர். இதன் பிறகு நடந்த நிகழ்வுகள் சகல ஊடகங்களிலும் அச்சுவாகனமேறியிருந்தது. எனவே பைசல் நகர் அல்-இர்பான் வித்தியாலயக்காணியில் தமிழர்கள் அத்துமீறிக்குடியேறியதையும் பின் நடந்த சம்பவங்களையும் இங்கு விளக்க வேண்டிய அவசியமில்லை. எனினும் இந்த அத்துமீறல் தொடர்பில் முஸ்லிம்களுக்கும் - தமிழர்களுக்கும் இடையில் ஏற்பட்ட (அத்துமீறியோரை ஏற்பாடு செய்தவர்கள் புலிகளே) முரண்பாடானது கிண்ணியாவின் ஈச்சந்தீவுப் பிரதேசத்தில் உள்ள முஸ்லிம்களின் உடமைகளுக்கு உலைவைப்பதற்கு வழிகோலியது.

பைசல் நகர் அல்-இர்பான் பாடசாலைக் காணி அத்துமீறப்பட்ட அடுத்த நாளே ஈச்சந்தீவில் உள்ள முஸ்லிம்களின் வீடுகள் தகர்க்கப்பட்டு, பயன்தரு மரங்களான தென்னை, மா, போன்ற மரங்களும் வெட்டப்பட்டு அழிக்கப்பட்டிருந்தன. ஈச்சந்தீவுப் பிரதேசம் தமிழர் குடியிருப்பு பிரதேசமான ஆலங்கேணியை அடுத்துள்ள பிரதேசமாகும். இது முற்றிலும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமுமாகும். இங்கு சுமார் 25 முஸ்லிம் குடும்பங்கள் பரம்பரை பரம்பரையாய் வாழ்ந்து வந்தன.

# இருளுக்குள் புதையுண்டுள்ள ஈச்சந்தீவு

இலங்கையின் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே முஸலிம்களுக்கு இந்தப்பிரதேசத்தில் காணிகள் சொந்தமாக இருந்து வந்துள்ளன. மேலும் இங்குள்ள அனைத்து காணிகளுக்கும் முஸ்லிம்களிடம் உறுதிகள் (Deeds) உள்ளன.

மேலும், இந்த ஈச்சந்தீவு பிரதேசம் தென்னை மரங்கள் நிறைந்த ஒரு வளமான பிரதேசமாகும். அத்தோடு இங்கு வசித்து வந்த பெரும்பாலான முஸ்லிம் குடும்பங்களுக்கு தென்னந்தோட்டங்களுண்டு. எனினும் இந்தப்பிரதேச முஸ்லிம்களின் துயர வாழ்வின் அத்தியாயங்கள் தொடராக நீண்டு கொண்டே வந்திருக்கின்றது.

1988ம் ஆண்டில் வடக்கு கிழக்கில் நிலவிய கடும் உள்நாட்டுப் போர் காரணமாக ஈச்சந்தீவு வாழ் முஸ்லிம்கள் அகதிகளாக்கப்பட்டனர். மீண்டும் எட்டு, ஒன்பது வருடங்களின் பின்னர் அரசாங்க மற்றும் அரசசார்பற்ற நிறுவன உதவியுடன் அவர்கள் மீளக் குடியமர்த்தப்பட்டனர். எனினும் இந்த மீளக்குடியமர்வு முழுமையானதாக இடம்பெறாததால் ஒரு சில குடும்பங்கள் தவிர பல குடும்பங்கள் அகதிகளாகவே தம்மை அடையாளப்படுத்திக் கொண்டனர். மேலும்! மீளக் குடியமர்த்தப்பட்ட நேரம் நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதியில் உக்கிரமான போர் நிகழ்ந்து கொண்டிருந்தது. இதன் காரணமாகவே பலர் தம்மை மீளக்குடியமர தயார்படுத்தியிருக்கவில்லை. எனினும் அரசாங்கம் வழங்கிய உதவித் தொகைகளைக் கொண்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளை திருத்தியும், புதிதாய் வீடுகளை அமைத்தும் கொண்டனர். அத்தோடு பகல் வேளைகளில் தமது சொந்த இடத்துக்கு வந்துவிட்டு இரவுகளில் தாம் அகதிகளாக தங்கியிருக்கும் இடத்துக்கு திரும்பிவிடுவர். எனினும் அரசுக்கும் - புலிகளுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் ஏற்பட்ட சுமுக நிலையின் பின் அகதிகளாயிருந்த ஈச்சந்தீவு முஸ்லிம்கள் தமது சொந்த இருப்பிடங்களில் மீளவும் குடியேறினர். இந்த வேளையில்தான் கடந்த 2003.10.08 அன்றைய பைசல் நகர் அல்-இர்பான் வித்தியாலய தமிழர் ஆக்கிரமிப்பில் முஸ்லிம்களுக்கும் - தமிழர்களுக்கும் ஏற்பட்ட முரண்பாட்டின் விளைவு ஈச்சந்தீவு முஸ்லிம்களின் வீடுகளை பதம்பார்த்தது. இவ்வாறு சேதமாக்கப்பட்ட வேளை முஸ்லிம்கள் அங்கு தங்கியிருக்கவில்லை. ஏனெனில், ஈச்சந்தீவில் முஸ்லிம்கள் மீளக்குடியேறியிருந்தாலும் இரவுவேளைகளில் அங்கு தங்குவது கிடையாது. பகல் வேளைகளில் மாத்திரமே தமது சொந்த இடங்களுக்குச் சென்று தமது தோட்டம், காணிகளை பராமரித்து வந்தனர். இவர்கள் கிண்ணியாவில் அகதிகளாகவே வாழ்ந்து வந்தனர்.

இவர்கள் அகதி முகாம்களில் வசிக்கவில்லையே தவிர, மற்றும் ஒரு அகதிக்குரிய அத்தனை துயரங்களையும் இற்றைவரை அனுபவித்துக் கொண்டுதானிருக்கின்றனர். கிண்ணியாவில் தமது உறவினர்களின் வீடுகளிலும், தெரிந்தவர்களின் வீடுகளிலும் இது வரைகாலமும் கஷ்டங்களுக்கு மத்தியில் காலம் தள்ளிக்கொண்டிருக்கும் இவர்கள் 1988 களின் பின்னர் நிறைய இழப்புகளை சந்தித்தனர். இந்த இழப்புகளோடு அண்மையில் புலிகளால் நிகழ்த்தப்பட்ட இவர்களது சொத்தழிப்புகளும் இப்போது இணைந்து கொண்டிருக்கிறது. உடைத்து சேதமாக்கப்பட்ட, எரிக்கப்பட்ட வீடுகள் ஒரு புறமிருக்க இவர்களுக்கு சொந்தமான ஏராளமான தென்னை மரங்களும் அநியாயமாக வெட்டி வீழ்த்தப்பட்டிருக்கின்றன.

இழப்புகளையே தொடர்ந்தும் ரட்சித்துக்கொண்டிருக்கும் இந்த நீண்டகால அகதிகளுக்கு இதுவரை எவ்வித நிவாரணமும் வழங்கப்படாதது பலத்த ஆச்சர்யத்தை தருவதோடு இருட்டடிப்பு செய்யப்பட்ட ஒரு சமூகத்தின் மீதான பச்சாதாபமே? எழுகின்றது. ஈச்சந்தீவில் வசிக்கையில் தமது தென்னந் தோட்டங்களையும் வேளாண்மையையும், காட்டுத் தொழிலையும், கடற்றொழிலையுமே நம்பி வாழ்ந்த ஓர் சமுகம் இன்று அகதிகளான நிலையில் பல்லாண்டுகளாக எவ்வித உதவியோ, நிவாரணமோ இன்றி உயிரே பொங்கி பீய்ச்சியடிக்கும் துயரங்களுக்கு மத்தியில் உழன்று கொண்டிருக்கின்றது.

மேற்படி சம்பவம் தொடர்பில் கிண்ணியா முஸ்லிம்களின் பாராளுமன்றப் பிரதிநிதிகளோ, ஏனைய சமூக நலன்பேணும் இயக்கங்களோ இதுவரை எவ்வித பிரஙஞையையும் காட்டாததும், ஈச்சந்தீவு சம்பவத்துக்கு கிஞ்சித்தேனும் தமது கவனத்தையோ முக்கியத்துவத்தையோ தராததும், ஏலவே அகதிகளாக்கப்பட்டு மீளக்குடியேற்றம் செய்யப்பட்டு மீண்டும் அண்மைச் சம்பவத்தால் அகதிகளாக மாற்றப்பட்டு அவலங்களோடு ஜீவிக்கும் ஈச்சந்தீவு முஸ்லிம்களுக்கு பெரும் துயரமாகவேயுள்ளது.

-கிண்ணி மைந்தன் -

# கிண்ணியா உலமா சபைத் தலைவர் மரணம்

ஜனாபா பிச்சை உம்மா
கிண்ணியா.

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹ்.

தங்களின் அன்புக் கணவர் அஷ்-ஷைக் இஸ்மாயீல் மௌலானாவின் மரணச் செய்தி கேட்டு பேரதிர்ச்சியும், பெரும் கவலையும் அடைந்தோம். அவர் போன்ற பெருந்தகைகளின் சேவை சமூகத்துக்கு தேவையான நேரத்தில் அன்னார் எம்மை விட்டும் விடைபெற்றுக் கொண்டமை எமது கவலையை இரட்டிப்படையச் செய்கின்றது.

நல்லறிவு புஷ்பமாக புஷ்பித்து, பிறருக்கு முன்மாதிரியான அரும்பணிகள் பலவற்றை முஸ்லிம் சமூகத்துக்கு ஆற்றிவிட்டு அல்லாஹ்வின் பக்கம் திரும்பிக்கொண்ட தங்கள் கணவர் என்றும் எம் இதயங்களில் வாழ்பவர். தொடர்ந்து சுமார் 12 ஆண்டுகள் எமது ஜம்இய்யாவின் கிண்ணியா கிளையின் தலைவராகப் பணியாற்றியவர். ஜம்இய்யாவின் மத்திய சபை உறுப்பினரான அவரின் முன்னேற்ற கரமான ஆலோசனைகள் எப்போதும் அதன் வளர்ச்சிக்கு பெரிதும் உதவின. சுமய்யா பெண்கள் அரபுக் கல்லூரியை கிண்ணியாவில் நிறுவி, இறுதிவரை அதன் அதிபராகவிருந்து பெண்கள் கல்விக்கு உரம் ஊட்டியவர். கிண்ணியாவில் அமையப்பெற்றுள்ள ரஹ்மானிய்யா அரபுக் கல்லூரியின் பாடவிதானத்துக்குப் பொறுப்பாயிருந்து அக்கல்லூரியின் வளர்ச்சிக்கு துணைநின்றவர். கபூரி பட்டதாரியான அவர் பயிற்றப்பட்ட அரபு ஆசிரியராக கடமையாற்றி ஈழத்தில் அரபு மொழி உயர்வுக்கு உழைத்தவர்.

உங்கள் மண்ணில் அண்மையில் நடந்த அசம்பாவிதங்களின் போது ஜம்இய்யாவின் கிண்ணியா கிளை மேற்கொண்ட அபார அமைதி முயற்சிகளுக்கும் தங்கள் பாசத்திற்குரிய கணவர் வழங்கிய தலைமைத்துவத்தையும், வழிகாட்டலையும் எண்ணி நாம் அகமகிழ்ந்து கொண்டிருந்த வேளையில் தான் அவரது மறைவுச் செய்தி எம் கண்களைப் பனிக்கச் செய்தது.

இத்தகைய பெரியார் உங்களுக்கு வாழ்க்கைத் துணைவராகக் கிடைக்கப் பெற்றமை உண்மையில் தங்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் தான். ஒரு நல்ல வாழ்க்கைத் துணைவரை இழந்த துயரத்தில் நீங்களிருக்க, நாமுமோ ஒரு சிறந்த உறுப்பினரை இழந்த துக்கத்தில் இருக்கின்றோம்.

அவரின் சமய, சமூகத் தொண்டுகளை அசைபோட்டுப் பார்க்கின்ற இத்தருணத்தில் அன்னார் ஜம்இய்யாவுக்கு புரிந்த சேவைகளை நன்றிப்பெருக்கோடு நினைவு கூர்கின்றோம். ஜம்இய்யா நடவடிக்கைகள் உள்ளிட்ட பரந்துபட்ட அவரது பணிகளுக்கு உங்களின் ஒத்திசைவும், ஒத்துழைப்பும் நிச்சயம் இருந்திருக்கவே வேண்டும். அதற்காக ஜம்இய்யா என்றும் உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கின்றது.

வல்லவன் அல்லாஹ் அவரின் மறு உலக வாழ்வை எல்லா வகையிலும் சிறப்பாக்கி வைப்பானாக! தனது மிகவும் அன்புக்குரிய ஒருவரை பிரிந்த துயரில் ஆழ்ந்துள்ள உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், ஏனைய உற்றார் உறவினர்களுக்கும் மனோதிடத்தையும் அவன் நல்குவானாக!

வஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹ்:

அஷ்-ஷைக் எச். அப்துல் நாசர்
தேசிய பொதுச் செயலாளர்., அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை

# வாரமொரு உரைகல்

"அல்லாஹ் எந்த ஓர் ஆத்மாவிற்கும் அதன் சக்திக்குட்பட்டதைத் தவிர சிரமம் கொடுப்பதில்லை....."
(குர்ஆன் 2:286)

நடைமுறைக்கேற்ற அறநெறிகளைக் கொண்டிலங்கும் ஓர் இலகுவான மார்க்கம் இஸ்லாம் என்பதில் மாற்றுக்கருத்துக்கள் நம்மிடையே இல்லை. எனினும் "இலகுவானது" என்பதற்கு நம்மவர்கள் வெவ்வேறான அளவு கோல்களையும், வரையறைகளையும் கொண்டிருக்கின்றனர்.

நாம் ஒவ்வொருவரும் எவ்வாறு வாழ வேண்டும் என தன்னிச்சையாக எண்ணுகின்றோமோ அதற்கேற்ப மாறாக இஸ்லாம் கட்டாயம் கடைப்பிடித்தொழுக வேண்டும் எனச்சுட்டும் கடமைகளும், ஏனைய உபரி வணக்கங்களும் அக புறச் சூழலில் சாத்தியமானதும் மனிதனுக்கு நலவளிப்பதாகவுமே காணப்படுகின்றது.

மனிதனைப்படைத்த அல்லாஹ் அவனுக்கு வழங்கியிருக்கும் ஆற்றல், புறநடை இயல்புகளை நன்கறிந்தோன். அ(வ்விறை)வனே மனிதன் கடைப்பிடித்து பேண

## இஸ்லாம் இலகுவான வழிமுறைகளைக் கொண்டது! அது மனித சக்திக்கு அப்பாலானதல்ல!

இந்த "இலகுவானது" இருக்க வேண்டுமென்று புரிகின்றோம். அதேவேளை "மனித சக்திக்குட்பட்ட வழிமுறைகளைக் கொண்டது இஸ்லாம்" என்பதனையும் நமது விருப்புக்குரியதாக இருக்க வேண்டும் என்கின்ற கருத்துக்குள் கட்டுப்படுத்த முனைகின்றோம்.

இதனை வேறு வார்த்தையில் கூறுவதாயின் நமது சுய விருப்பிற்கும், வெறுப்பிற்கும் வழிவிடக்கூடியதாக இஸ்லாமிய அறநெறிகள் இருக்க வேண்டும் என்கின்ற மனோ நிலையில் நம்மவர்கள் பலரின் தேடல்களும், ஆர்வங்களும் இருந்து வருகின்றன.

இவ்வாறான போக்கின் மூலம் "இலகுவான மார்க்கம் இஸ்லாம்," என்பதனையும் "மனித சக்திக்கு அப்பாலான எவற்றினையும் அது கொண்டில்லை" என்பதனையும் சரிவர விளங்குவதில் பின்னடைவு காணப்படும்.

வேண்டிய நெறிமுறைகளையும் காட்டியருளியுள்ளான்.

ஆகவே, சாத்தியம், சாத்தியமற்ற நிலைகளையும், சில புற நடை இயல்புகளையும் கவனத்திற் கொண்டே விதிவிலக்கான வழி முறைகளையும் இஸ்லாத்தின் அறவழிகாட்டல்கள் கொண்டிருக்கின்றன.

எனின், நமது சுயவிருப்பு, வெறுப்புக்கு அப்பால் நாம் எதனைச் செய்ய முற்பட்டாலும் அவற்றினை இஸ்லாத்தின் வழிகாட்டலில் உரசிப்பார்த்து தொழிற்பட வேண்டும். அது கூறும் வழிமுறைமைகள் மனிதசக்திக்கு இயலாத ஒன்றாக இராது என்பதினால்தான் இஸ்லாம் ஒரு இலகு மார்க்கமாகவும் மிளிர்கின்றது. இதனையே மேற்படி குர்ஆன் வசனம் சந்தேகமின்றி நமக்குச் சொல்கின்றது. உணர்வு பெறுவோமாக!

- மருதூர் மெய்யொளி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மாவட்ட அரசியல்வாதிகள் முஸ்லிம்களுக்கு என்ன செய்தார்கள்?

2001ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் அடிப்படையில் திருகோணமலை மாவட்டம் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு மாவட்டமாகும். ஆனால் இங்கு முஸ்லிம்கள் பெரும்பான்மை என்பதற்கான எந்த அரசியல் ரீதியான மற்றும், அரசாங்க திணைக்களங்கள் அலுவலகம் ரீதியான எந்த அத்தாட்சியும் கிடையாது. இம்மாவட்டத்தில் மொத்தம் 11 பிரதேச செயலகங்கள் உள்ளன. அவை

சிங்களப் பிரிவு
1. கோமரன்கடவலை
2. மொறவல
3. பதவிசிறிப்புற
4. சேறுவில
5. கந்தளாய்

தமிழ்ப் பிரிவு
1. குச்சை வேலி
2. மூதூர்
3. தம்பளகாமம்
4. வெறுகள்
5. திருகோணமலை (பட்டணமும், சூழலும்)

முஸ்லிம் பிரிவு
1. கிண்ணியா

என்பவையாகும். 2001ஆம் ஆண்டு நடைபெற்ற குடிசன மதிப்பீட்டின் அடிப்படையில் அட்டவணை 1இன் படி 40.19 வீதமானவர்கள் முஸ்லிம் என்றும் 32.50 வீதம் தமிழர் என்றும் 26.50 வீதம் சிங்களவர்கள் என்றும் புள்ளிவிபரவியல் திணைக் களத்தினால் வெளியிட்ட அறிக்கைக் கமைய உள்ளது இதன் அடிப்படையில் பார்த்தால்.

முஸ்லிம் பிரதேச செயலகங்கள் - 5உம் சிங்களம் - 3உம் தமிழ் - 3 பிரதேச செயலகங்களும் அமைய வேண்டியதாகும். ஆனால் முஸ்லிம்களை திட்டமிட்டு அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஒடுக்கப்பட்டுள்ளதை உணர முடிகின்றது. அத்துடன் முஸ்லிம் அரசியல்வாதிகள், தலைவர்கள் தனது வயிறு நிரப்புவதில் ஆர்வம் காட்டுகின்றனர். சமூகத்தைப் பற்றி சிந்திப்பதில்லை என்பதும் இதன் மூலம் புலனாகின்றது.

அத்துடன் 2001ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின் படி அட்டவணை 2ஐப் பார்த்தால் பிரதேச செயலகங்களில் தம்பளகாமம், குச்சைவேலி, மூதூர் என்ற செயலகங்களில் முஸ்லிம்களின் தொகை அதிகமாகவே உள்ளது. காலத்திற்கு காலம் தேர்தலில் வாக்குகள் எவ்வாறு அதிகம் பெற்றுக் கொள்ள முடியும் என்று ஆராயும் நமது அரசியல் தலைவர்கள் குறித்த தம்பலகாமம், மூதூர், குச்சைவேலி பிரிவு முஸ்லிம் மக்களையும் தனிப் பிரதேச செயலகங்கள் ஆக்க வேண்டும்.

இவ்வாறு முஸ்லிம்கள் அதிகம் வாழும் பிரதேச செயலகப் பிரிவுகளில் முஸ்லிம்களுக்கான எந்த அதிகாரமும், செல்வாக்கும் முஸ்லிம்களிடம் இல்லை. காரணம் குறித்த பிரதேச செயலகப்பிரிவுகளில்

கிராம சேவையாளர் பிரிவு, முஸ்லிம் பிரிவை விட தமிழர் கிராம சேவையாளர் பிரிவுகள் அதிகமாம். ஆதலால் குச்சைவெலி, தம்பலகாமம், மூதூர் போன்ற பிரதேச செயலகப் பகுதிகளும் தமிழ் பிரதேச செயலாளர் பிரிவு என்று திட்டமிட்டு மாவட்டத்தில் முஸ்லிம்கள் ஓரங்கட்டப்பட்டுள்ளார்கள். இதை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் அரசியல்வாதிகளும், தலைவர்களும் இன்று வரை சிந்திக்கவும் இல்லை, சிந்திக்கப்போவதுமில்லை.

காரணம் அரசியல்வாதிகளுக்கும், தலைவர்களுக்கும் தேவை தனது நலன் தனது எதிர்காலம். அதற்கு சமூகம் பழிபோனால் பரவாயில்லை என்ற சிந்தனைதான் என்பது எமக்கு இதன் மூலம் தெளிவாகின்றது. ஆகவே மக்கள் இனியும் இப்படிப்பட்டவர்களை இனங்கண்டு செயல் பட வேண்டிய நேரம் வந்து விட்டது என்பதை உணர வேண்டும்.

அத்துடன் அட்டவணை 2இன் படி மொறவல மக்கள் தொகை 4824 பேருக்கு ஒரு பிரதேச செயலகப் பிரிவு. அத்துடன் கோமன்கடவல மக்கள் தொகை 5106 பேருக்கு ஒரு பிரதேச செயலகப் பிரிவு, வெருகல் மக்கள் தொகை 8250 பேருக்கு ஒரு பிரதேச செயலகப் பிரிவு கிண்ணியா மக்கள் தொகை 55628 பேருக்கு ஒரு பிரதேச செயலகப் பிரிவு ஆக பிரிக்கப்பட்டுள்ளது. இதை பார்க்கும் போது எமக்கு புலனாகும் விடயம் முஸ்லிம்களை திட்டமிட்டு தமிழ், சிங்கள, தலைவர்கள் புறந்தள்ளியுள்ளார்கள் என்பது தெளிவு.

எனவேதான் திருகோணமலை மாவட்ட முஸ்லிம்களின் எதிர்காலத்தை இனியும் எல்.ரி.ரி.ஈ யின் நகல்வு (அதிகார நகல்வு) மூலம் ஓரம் கட்டி விட முடியாதவாறு எமது தலைவர்களும் மக்களும், புத்திஜீவிகளும் விழித்தெழுந்து முயற்சி செய்ய வேண்டும் என்று அனைவரையும் வேண்டுகிறேன்.

'திருகோணமலை மாவட்டம் முஸ்லிம்களின் தாயகம்'

என்.எம். நிப்ஹான்

## பிரதேச செயலாளர் பிரிவின்படி பால், வயது, இன அடிப்படையில் சனத்தொகை 1981 - 2001ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டம்

அட்டவணை - 02

| பிரதேச செயலகப் பிரிவு | குடித்தொகை | | பால் ஆண் | | பால் பெண் | | வயது 18 வயதிற்கு கீழ்ப்பட்டவர் | | வயது 18 வயதும் அதற்கு மேற்பட்டோரும் | | இனம் சிங்களவர் | | இலங்கைத் தமிழர் | | இந்தியத் தமிழர் | | இலங்கைச் சோனகர் | | பறங்கியர் | | மலாயர் | | இலங்கை செட்டி | | பரதர | | பிறர் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1981 | 2001 | 1981 | 2001 | 1981 | 2001 | 1981 | 2001 | 1981 | 2001 | 1981 | 2001 | 1981 | 2001 | 1981 | 2001 | 1981 | 2001 | 1981 | 2001 | 1981 | 2001 | 1981 | 2001 | 1981 | 2001 | 1981 | 2001 |
| கோமரன்கடவெல | 7076 | 5106 | 3714 | 2615 | 3362 | 2491 | 3670 | 1859 | 3406 | 3247 | 7038 | 5082 | 23 | 18 | 5 | 0 | 9 | 5 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 |
| கந்தளாய் | 38137 | 40815 | 21529 | 20563 | 16608 | 20252 | 16991 | 15442 | 21146 | 25273 | 31406 | 32129 | 1922 | 1641 | 199 | 106 | 4540 | 6905 | 1 | 16 | 66 | 15 | 0 | 0 | 0 | 0 | 3 | 3 |
| கிண்ணியா | 31142 | 55628 | 15877 | 29136 | 15265 | 26492 | 17625 | 26278 | 13517 | 29250 | 146 | 6 | 2165 | 2120 | 110 | 35 | 28714 | 53647 | 1 | 0 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 4 | 0 |
| குச்சைவேலி | 17695 | 23140 | 9757 | 12412 | 7938 | 10728 | 8406 | 9613 | 9289 | 13527 | 2467 | 1151 | 8601 | 6073 | 1183 | 524 | 5401 | 15366 | 36 | 8 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 6 | 17 |
| மொறவல | 9359 | 4324 | 5147 | 2264 | 4212 | 2060 | 4560 | 1698 | 4799 | 2626 | 5181 | 3581 | 1945 | 46 | 1405 | 697 | 823 | 0 | 0 | 0 | 5 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| மூதூர் | 39992 | 52656 | 20755 | 25429 | 19237 | 27227 | 20701 | 16428 | 19291 | 36228 | 960 | 128 | 19275 | 23710 | 599 | 246 | 19135 | 28524 | 13 | 38 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 8 | 10 |
| பதவி சிறிப்புற | | 10915 | | 5409 | | 5506 | | 4176 | | 6739 | | 10915 | | 0 | | 0 | | 0 | | 0 | | 0 | | 0 | | 0 | | 0 |
| சேறுவில | 20168 | 11591 | 10945 | 5914 | 9223 | 5677 | 9853 | 4452 | 10315 | 7139 | 11655 | 6885 | 7251 | 3089 | 19 | 22 | 1241 | 1595 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 |
| தம்பளகாமம் | 20770 | 24808 | 10896 | 12576 | 9874 | 12232 | 10907 | 10711 | 9863 | 14097 | 6526 | 5829 | 6013 | 4878 | 260 | 3 | 7960 | 14092 | 0 | 0 | 10 | 2 | 0 | 0 | 0 | 0 | 1 | 4 |
| நகரம் | 71609 | 93748 | 38776 | 45472 | 32833 | 48276 | 31431 | 32406 | 40178 | 61342 | 20568 | 22014 | 39013 | 57798 | 3006 | 102 | 6804 | 13054 | 1159 | 253 | 648 | 519 | 0 | 0 | 0 | 0 | 411 | 8 |
| வெறுகள் | | 8250 | | 3940 | | 4310 | | 3055 | | 5195 | | 0 | | 8186 | | 64 | | 0 | | 0 | | 0 | | 0 | | 0 | | 0 |
| மொத்தம் | 255,948 | 330,981 | 137,369 | 165,730 | 118,552 | 165,251 | 124,144 | 126,118 | 131,804 | 204,863 | 85,947 | 87,720 | 86,208 | 107,559 | 6,786 | 1,799 | 74,627 | 133,008 | 1,211 | 315 | 735 | 537 | 0 | 1 | 0 | 0 | 434 | 42 |

## திருகோணமலைப் பிரிவு

அட்டவணை - 01

| தொகை மதிப்பு ஆண்டு | சிங்களவர் இலக்கம் | சிங்களவர் வீதம் | தமிழ் இலக்கம் | தமிழ் வீதம் | முஸ்லிம் இலக்கம் | முஸ்லிம் வீதம் | பிற இலக்கம் | பிற வீதம் | மொத்தம் இலக்கம் | மொத்தம் வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1871 | 804 | 4.13 | 12,581 | 64.59 | 4,916 | 25.28 | 1,148 | 5.90 | 19,449 | 100.00 |
| 1881 | 935 | 4.21 | 14,394 | 64.85 | 5,746 | 25.89 | 1,122 | 5.05 | 22,197 | 100.00 |
| 1891 | 1,109 | 4.31 | 17,117 | 66.49 | 6,426 | 24.96 | 1,093 | 4.25 | 25,745 | 100.00 |
| 1901 | 1,293 | 4.23 | 17,059 | 60.02 | 8,258 | 29.04 | 1,911 | 6.72 | 28,441 | 100.00 |
| 1911 | 1,138 | 3.82 | 17,233 | 57.92 | 9,714 | 32.65 | 1,670 | 5.61 | 29,755 | 100.00 |
| 1921 | 1,501 | 4.40 | 18,586 | 54.49 | 12,846 | 37.66 | 1,179 | 3.46 | 34,112 | 100.00 |
| 1931 | 2,218 | 5.92 | 20,247 | 54.00 | 13,905 | 37.09 | 1,122 | 2.99 | 37,492 | 100.00 |
| 1946 | 15,706 | 20.69 | 33,795 | 44.51 | 23,219 | 30.58 | 3,206 | 4.22 | 75,926 | 100.00 |
| 1953 | 15,296 | 18.23 | 37,517 | 44.71 | 28,616 | 34.10 | 2,483 | 2.96 | 83,917 | 100.00 |
| 1963 | 39,899 | 28.87 | 54,199 | 39.12 | 42,662 | 30.79 | 1,693 | 1.22 | 138,553 | 100.00 |
| 1971 | 54,744 | 29.08 | 71,749 | 38.11 | 59,924 | 31.83 | 1,828 | 0.97 | 188,245 | 100.00 |
| 1981 | 85,947 | 33.58 | 92,994 | 36.33 | 75,838 | 29.63 | 1,169 | 0.46 | 255,948 | 100.00 |
| 2001 | 87,720 | 26.50 | 107,559 | 32.50 | 133,008 | 40.19 | 2,694 | 0.81 | 330,981 | 100.00 |

## பத்திரிகை



பணங்கொடுத்து ஒரு
பத்திரிகை வாங்கினேன்
பற்றி எரிந்த
என் ஊர்பற்றி
பத்துவரியும் இல்லை.
பற்றிக் கொண்டுவந்தது
பத்தாக நூறாக
கிழித்தெறிந்தேன்.

மற்றுமோர் பத்திரிகை
மறுநாளும் வாங்கினேன்
கைகலப்பு ஏற்பட்டு
பின்
கருத்தொருமித்தவிடயத்தை
உருத்திரித்து
கொட்டெழுத்தாக்கி
கொதித்தெழவைத்தார்கள்
பத்திரிகையை
கொழுத்திவிட்டேன்.

வாசிப்பை
சுவாசமாய்
சுகவாசமாய்
சுகிப்பதால்
சும்மா இருக்கப்பிடிக்காமல்
சுத்தமாக இருக்குமென்று
ஓர் பத்திரிகை வாங்கினேன்
அறிக்கைகளின் தொகுப்பாக
அது விளங்கக் கண்டு
மடித்ததைத்
தூக்கித்
துப்பையில் போட்டேன்.

தூய்மையாய்
துணிச்சலாய்
பத்தினித்தனமாக
ஓர்
பத்திரிகை வருமளவும்
தாகத்தோடு
நான்
தவமிருந்து வந்தேன்.

-ஹாலித் இப்னு வலீத்-

ஒருவர் ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா?

நாம் எழுதுவதற்கும், நமது மக்களுக்குள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் விவாதங்களைத் தொடங்கவும், தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களை சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# M.O.U. என்ற பெயரினிலே - எங்கள் உரிமை பறிபோகுது தீவினிலே

மூதூர் முகம்மதலி ஜின்னாஹ் ஜே.பி.

### 01. யுத்த நிறுத்தமும் மீறலும்.

இலங்கைத்தீவின் இனப்பிரச்சினை வரலாற்றில் பலதடவைகளில் சமாதானப் பேச்சும். மோதல்தவிர்ப்பும் ஏற்பட்டு வந்தாலும் அவற்றின் ஆயுள் அற்ப ஆயுளாகவே முடிந்துள்ளன. இதற்குக் காரணம் 'நீதான்....நீதான்....' என்று ஆளையாள் குற்றம் சுமத்திவந்துள்ளதையும் கண்டுவந்துள்ளோம். எனினும் உண்மையான காரணங்களாக இரண்டைக் குறிப்பிடலாம். ஒன்று யுத்த நிறுத்தம் என்ற பெயரில் இருதரப்பும் இன்னுமோர் யுத்தத்துக்கு தம்மை தயார்படுத்தியமை. மற்றொன்று யுத்த நிறுத்த ஒப்பந்தம், சமாதான உடன்படிக்கை என்பனவற்றுக்கு சர்வதேச நாடொன்றின் மத்தியஸ்தமும், கண்காணிப்பும் இல்லாமல் போனமையுமாகும். இவ்வாறான தவறுகளின் மூலமாகக்கற்ற பாடங்களின் பேறாக உருவானது தான் 22.02.2002ல் உருவான M.O.U ஆகும். இதுவரை எந்த நாட்டிலும் சமாதானத்தை உருவாக்காவிட்டாலும் சமாதானத்தில் நாட்டமுள்ள நாடென்ற போர்வையில் நோர்வேயின் மத்தியஸ்தத்தின் கீழும் சர்வதேச நாடுகளின் கண்காணிப்பின் கீழும் M.O.U நடைமுறைக்கு வந்தது. பொருளாதார சரிவை ஈடுகட்ட அரசும், 20 ஆண்டுகாலமாகியும் தம்மக்களுக்கு ஒரு சுமுக நிலையைக் கொண்டு வரமுடியாமல்போன புலிகளும் M.O.U க்கு உடன்பட்டனர். ஆனாலும் இதற்குப் பின்னாலும் யுத்த ஆயத்த நோக்கங்கள் இருக்குமோ என்ற சந்தேகம் எழாமல் இல்லை. புலிகள் புதிய (மஜீட்புரம்) முகாம்களை அமைத்தமை, கப்பல்களில் ஆயுதங்களைக் கடத்திவந்தமை போன்ற M.O.U மீறல்கள் அவ்வாறான நியாயமான சந்தேகங்களை மெய்ப்படுத்தின. முஸ்லிம்களைப் பற்றி M.O.U கண்டு கொள்ளாதபடியால் முஸ்லிம்கள் மீது புலிகள் புரிந்த அட்டூழியங்கள் எது வும் யுத்த நிறுத்த மீறல்களாகக் கணிப்பிடப்பட வில்லை. என்பது குறிப்பிடத்தக்கது.



### 02. தமிழ்ப் பேரின வாதத்தின் கோர முகம்.

இலங்கை இனப்பிரச்சினையின் ஆரம்பகாரணம் சிங்களப்பேரினவாதம்தான் என்பது அனைவரும் அறிந்ததே இப்பேரின வாதத்தால் பாதிக்கப்பட்டது தமிழ் இனம் மட்டுமல்ல முஸ்லிம் இனமும்தான் என் பது மறுக்க முடியாத உண்மை. எனவே தங்களைப் பாதுகாக்கப் புறப்பட்ட ஆயுதப் போராட்டத்தின் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் முஸ்லிம்கள் தங்கள் பங்களிப்பை வழங்கிவந்துள்ளனர். அப்படியிருந்தும் சிங்களப் பேரினவாதம் சிறுபான்மை மக்களுக்குச் செய்த அனைத்துக் கொடுமைகளையும் தமிழ்ப்பேரினவாதம் ஒன்று திரட்டி பன்மடங்காகப் பெருக்கி முஸ்லிம்கள்மீது கட்டவிழ்த்து வருகிறது. இங்குதான் சிங்களப்பேரினவாதத்திலும் மகாதீங்கான தமிழ்பேரினவாதம் தன் கோரமுகத்தைக் காட்டியது. யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு லட்சம் முஸ்லிம்களை உடுத்திய உடையை தவிர அனைத்து உடமைகளையும் பறித்தெடுத்துக் கொண்டு இரண்டு மணிநேர அவகாசத்தில் புலிகள் வெளியேற்றினர். முஸ்லிம் கர்ப்பிணியின் வயிற்றைக் கீறி சிசுவை எடுத்து அம்மியில் அடித்தனர். தூக்கத்தில் இருந்தவரின் தலையைத் துண்டித்தனர். முஸ்லிம் பாலகரைத் தூக்கித் தென்னையில் அடித்தனர். வாப்பாவைப் பார்க்கவைத்து மகன்களின் ஜனாசாவை சாம்பலாக்கினர். ஹாஜிகளை உயிருடன் புதைத்தனர். அடாவடித்தனமாக முஸ்லிம்களின் காணிகளை ஆக்கிரமிக்கின்றனர். (இவை பதச்சோறாகவே கூறப்பட்டுள்ளன) இவ்வாறான பலநூறு அநியாயச் செயல்களை தமிழ்ப் பேரினவாதம் தான் புரிந்துகொண் டிருக்கிறது. இவ்வாறு இருபேரினவா தங்களினாலும் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் (தமிழர் போராட்டம் துரோகம் செய்யத் துணிந்ததனால் அதனை விட்டுவிலகி) அரசியல் ரீதியாகப் போராடப் புறப்பட்டனர்.

### 03. முஸ்லிம்களின் அரசியலும் அதன் இலக்கும்.

'முஸ்லிம்களின் அரசியல்' என்பதால் குறிக்கப்படுவது, முஸ்லிம் காங்கிரஸின் அரசியலேயன்றி, (ஐக்கியம், சுதந்திரம் என்ற அடைமொழிகளைச் சேர்த்துக் கொண்ட) சிங்களக்கட்சிகளுக்காக வாக்குக் கேட்பதும் வாக்களிப்பதுமல்ல. முஸ்லிம் காங்கிரஸின் தேவைப்பாடு உணரப்படும்வரையில் முஸ்லிம்கள், அபிவிருத்தி. மற்றும் வேலைவாய்ப்பு என்பனவற்றை இலக்காகக் கொண்டே பேரினவாதக் கட்சிகளுக்கு வாக்களித்து வந்தனர். (ஏனெனில் அக்கட்சிகள் சிறுபான்மை மக்களின் உரிமைகளை வென்றெடுக்கப் புறப்பட்டவையல்ல) எப்போது சிங்கள மற்றும் தமிழ்ப் பேரினப் பயங்கரவாதங்களால் தம் பாதுகாப்பு அந்தஸ்த்து, சுயநிர்ணயம், இனத்துவ அடையாளம் என்பன அழிவுக்குட்படத் தொடங்கியதோ அப்போதே முஸ்லிம்களின் அரசியல் இலக்கு அபிவிருத்தியோ. வேலைவாய்ப்போ அல்ல என்றாகி விட்டது. மாறாக முஸ்லிம்களின் அரசியல் இலக்கு உரிமைகளை வென்றெடுப்பதே என்றாகிவிட்டது. ஏனெனில், நிலம் பறிபோய்க் கொண்டிருக்கின்ற நிலையில் அதற்குமேல் கட்டப்போகின்ற கட்டடத்தைப் பற்றிச்சிந்திப்பது மடமை யானது. இதனைச் சரியாகப் புரிந்து கொண்டு முஸ்லிம்களின் உரிமைகளை மாத்திரம் வென்றெடுக்க உருவானது தான் மு.கா.

தொடரும்.....




**முஸ்லிம்குரல் பத்திரிகை நமது மக்களின் இழப்புகளை ஆவணப்படுத்தி, இழப்புகளுக்கு நீதி வேண்டிப் போராடும் பணியை, முஸ்லிம் தேச ஆவணக் காப்பகத்தினூடாக முன்னெடுத்து வருவதை அறிந்திருப்பீர்கள். எமது இந்த முயற்சிக்கு நமது மக்கள் மத்தியிலிருந்து பெருமளவு ஆதரவும், ஆவணங்களும் வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன.**

**இத்தகவல்களை நமது மக்களுக்கு பகிரங்கப்படுத்தும் நோக்கில் மக்கள் பத்திரிகை என்ற வகையில் இத்தொடர் எழுதப்படுகிறது. எமக்கு கிடைத்த விபரங்களின் எண்வரிசைப்படி பட்டியல்படுத்தப்பட்டுள்ளது.**

58
முகைதீன் பாவா ஆதம் பாவா
ஏ.பி.எச். வீதி, காத்தான்குடி 06.
சம்பவம் இடம் பெற்ற இடமும் திகதியும் : களுதாவளை.
21.04.1985. மரணம் இனந்தெரியாதோரால் நிகழ்த்தப்பட்டது.
மரண அத்தாட்சிப்பத்திர இல: 2623

59
அப்துல் கரீம் அப்துல் மஜீத். சாவியா வீதி.
காத்தான்குடி 1.
பிறந்த திகதி : 1969.3.28.
சம்பவம் இடம் பெற்ற இடமும் திகதியும்:
குருக்கல் மடம். 1990.6.12. மரணம் பயங்கரவாதிகளால் நிகழ்த்தப்பட்டது.
மரண அத்தாட்சிப்பத்திர இல: 620

60
சம்சுதீன் சபியுதீன். சின்னக் கபுறடி வீதி. காத்தான்குடி 2.
பிறந்த திகதி : 1969.11.3. சம்பவம் இடம் பெற்ற இடமும் திகதியும்: குருக்கல் மடம். மரணம் விடுதலைப் புலிகளினால் நடத்தப்பட்டுள்ளது.



61
சம்சுதீன் அப்துல் சலாம். சின்னக் கபுறடி வீதி.
காத்தான்குடி 2. பிறந்த ஆண்டு: 1967.1.20 சம்பவம் இடம் பெற்ற இடமும் திகதியும் : குருக்கல் மடம். பயங்கரவாதிகளால் மரணம் நிகழத்தப்பட்டுள்ளது.
மரண அத்தாட்சிப்பத்திர இல: 8625



62

வரிசை முகம்மது முகம்மது இஸ்மாயில்.
மோதினார் லேன், சாவியா வீதி காத்தான்குடி 1
பிறந்த திகதி : 1950.06.26 சம்பவம் இடம்பெற்ற இடமும் திகதியும் : மீரா ஜும்ஆ பள்ளிவாயலில் புலிகளினால் 03.08.90.ல் நடத்தப்பட்ட தாக்குதலில் மரணமானார்.
மரண அத்தாட்சிப் பத்திர இல : 5621

63
அபுல்ஹசன் சாஹுல் ஹமீட். பெரிய கடை, மன்னார்.
பிறந்த திகதி: 14.05.1974.
சம்பவம் இடம் பெற்ற இடமும்
திகதியும் : பெரியகடை மன்னார் 1990.08.20.
இனந்தெரியாத நபர்களால் மரணம் நிகழ்த்தப்பட்டுள்ளது.
மரண அத்தாட்சிப் பத்திர இல : 364

64
அபூபக்கர் சாஹுல் ஹமீட் . பெரியகடை மன்னார்.
பிறந்த திகதி : 1945.03.07
சம்பவம் இடம் பெற்ற
இடமும் திகதியும் : பெரிய கடை மன்னார். 14.4.1993
அங்கவீனம், வன்செயல்.

## இஸ்ரேலில் நிர்மாணிக்கப்படுகின்ற பாதுகாப்பு மதில் சர்வதேச நீதிமன்றத்தில்!

பலஸ்தீன மேற்குக்கரைப் பிரதேசத்தின் ஊடாக இஸ்ரேலினால் கட்டப்படுகின்ற பாதுகாப்பு மதில் குறித்த நியாயத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கான இந்தப் பிரச்சினையை சர்வதேச நீதிமன்றத்திடம் எடுத்துச் சொல்வதற்கு ஐ.நா. சபை அங்கீகாரம் அளித்துள்ளது. இந்த யோசனைக்கு 90 நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ளன. 74 நாடுகள் வாக்களிப்பதை பகிஷ்கரித்துள்ளன. எதிராக வாக்களித்த நாடுகளுள் அமெரிக்காவும், இஸ்ரேலும் முக்கியமானவையாகும்.

நெதர்லாந்தின் ஹேக் நகரில் அமைந்துள்ள சர்வதேச நீதிமன்றத்திற்கு. இந்த பாதுகாப்பு மதில் கட்டுமானப் பணிகளுக்கான காரணத்தைத் தாம் முன்வைக்கப் போவதாக இஸ்ரேலிய தூதுவர் இது தொடர்பில் தனது கருத்தைத் தெரிவிக்கும்போது கூறினார்.

## பரிசு பெற்றோர் விபரம்

### படியுங்கள் வெல்லுங்கள் - 2003

போட்டி பெறுபேறுகள்

புனித ரமழானை முன்னிட்டு வெலிகம. அல் - இஹ்ஸான் நலன்புரிச் சங்கம் தென்மாகாண மற்றும் மொனராகலை மாவட்ட ரீதியில் நடாத்திய "படியுங்கள் வெல்லுங்கள் - 2003" போட்டிப் பரீட்சையில் வெற்றிபெற்றோர் விபரம் பின்வருமாறு:
1ஆம் இடம் : எம்.டீ.எம். ரியாஸ் - ஹம்பாந்தோட்டை. 2ஆம் இடம்: எம்.ஏ.எம். அர்சத். ஹம்பாந்தோட்டை. 3ஆம் இடம்: எம்.ஏ.எப். பாயிகா. காலி

ஆறுதல் பரிசு பெறுவோர்:
1) எம்.எல்.எச்.எம். அஸ்ஹர் - வெலிகம. 2) எம்.என்.எப். ஸுஹ்ரியா - காலி. 3) எம்.எஸ்.எப். பஸ்மியா - வெலிகம. 4) மொஹமட் ஆஸிர் - கிந்தோட்டை. 5) எம்.எச்.எம். பாஸில் - காலி. 6) பக்ருத்தீன் - காலி. 7) அசாபா மன்ஸூர் - ஹக்மன. 8) ஏ.ஸீ.எம். முபாரக் - காலி., 9) எம்.என்.எப். நஸ்லா. 10) நூருன் நஜ்மியா - ஹம்பாந்தோட்டை.

இவர்களுடன் மேலும் 35 போட்டியாளர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசும் வழங்கப்படவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிச்ச வாசல்

அபூ அஸ்ரான்

## பத்வா துகான்

பிரபல பலஸ்தீனப் பெண் கவிஞர் பத்வா துகான் கடந்த 12ம் திகதி காலமானார். மேற்குக் கரையில் அவர் வசித்து வந்தார். இறக்கும் போது அவருக்கு வயது 86. பலஸ்தீனின் நப்லஸ் நகரில் பிறந்த இவர் பலஸ்தீனம் பறிபோவதை தன் வாழ்நாளில் கண்கூடாகக் கண்ட கவிஞர். அதி முக்கியத்துவம் வாய்ந்த அறபுப் பெண் கவிஞராக விளங்கிய பத்வா துகான் பலஸ்தீனம் சம்பந்தப்பட்ட பேச்சு வார்த்தைகளிலும் பங்கு பற்றியுள்ளார். எட்டுக் கவிதை நூல்களையும், சுயசரிதை நூலையும் எழுதியவர். இவரது சகோதரரான இப்றாகிம் துகான் ஒரு பிரபல கவிஞராவார்.

பத்வா துகானின் கவிதையொன்றைப் படித்த இஸ்ரேலின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் மோஷே தயான் 'இது இருபது கொமாண்டோக்களுக்குச் சமமானது ' என்று சொன்னதாக எம்.ஏ.நுஃமான் மொழி பெயர்த்த 'பலஸ்தீனக் கவிதைகள்' தொகுப்பில் கவிஞர் பற்றிய குறிப்பில் தெரிவித்துள்ளார். அவரது மரணம் பலஸ்தீனக் கவிதைகளுக்கு மாத்திரமன்றி அடக்கு முறைக்குட்பட்ட உலகளாவிய மக்களுக்கும் பேரிழப்பாகும். இங்கு எம்.ஏ.நுஃமான் அவர்கள் மொழிபெயர்த்த அவரது கவிதையைத் தருகிறேன். காலத்துக்கும் பொருத்தமானது.

### போதும் எனக்கு

எனது தேசத்து மண்ணில்
சாவதே
எனக்குப்போதும்
அதற்குள் புதைக்கப்படுவது
எனக்குப் போதும்
உருகி
அந்த மண்ணுடன் கலந்து
மறைந்து போவது
எனக்குப் போதும்

பின்
ஒரு பூவாக மலர்ந்து
என் நாட்டின் குழந்தை ஒன்றினால்
விளையாடப்படுவது
எனக்குப் போதும்
என் நாட்டின் அணைப்பில் இருப்பது
எனக்குப் போதும்
எனது தேசத்தின் புனித முற்றத்தில்
ஒரு கைப்பிடியளவு புழுதியாய்
ஒரு புல்லின் இதழாய்
ஒரு பூவாய் இருப்பது
எனக்குப் போதும்

YAZRIK WATER MART SYSTEMS
Tube well fittings, water pump, water tap, and all kind of tube well equipment suppliers

உங்கள் வீடுகளில் கிணறு இல்லையா கவலை வேண்டாம். மிகக்குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் குழாய்க் கிணறுகள், அமைத்துக் கொள்ளவும், கிணறு திருத்த வேலைகள் செய்யவும் அனைத்து உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரே இடம்.

குழாய்க் கிணறுகள், பைப்லைன் பொருட்கள், வயரிங் பொருட்கள், இரும்புப் பொருட்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

Yazrik Water Mart Systems
Beach Road, New Kattankudy - 03.
Mobile: 077-6126666, 077-6152444
Advt.

## கடுகு சிறிதாயினும் காரம் பெரிது

வட அமெரிக்காவில் வாழ்கின்ற வுல்வரின் (wolverine) எனும் பிராணியின் எடை 18கி.கிராம்தான் (40 இறாத்தல்) தனது உடல் நிறையைக் காட்டிலும் 07 மடங்கு எடை கூடிய காரிபூ (Caribou) எனும் பிராணியை உணவாகக் கொள்ளும் வல்லமை இதற்குண்டு. அதேவேளை நிலத்தில் குழிகளைத் தோண்டும் திறமையும் இந்த வுல்வரினுக்குண்டு. அணிலைப் போன்று மரத்திற்கு மரம் தாவிச் செல்லவும், தண்ணீரில் நன்கு நீந்தவும் மற்றும் நிலத்திலிருந்து அதிக உயரத்திற்கு குதிக்கவும் இதனால் இயலும். அதிஷ்டவசமாக மனிதருக்கு இதனால் எவ்வித கெடுதியுமில்லை.

## உலக நன்னீர்த் தொகுதியில் 1/5 பாகம் நிறைந்துள்ள ஐம்பெரும் வாவிகள்.




உலக நன்னீர்த் தொகுதியில் 1/5 பாகம் நிறைந்துள்ள 94000 சதுரமைல்கள் நிலப்பரப்பைக் கொண்ட ஐம்பெரும் வாவிகள் அமெரிக்காவில் அமைந்துள்ளன. சுபீரியர், மிச்சிகன், ஹியுரன், ஈரி, ஒன் டாரியோ ஆகிய இந்த ஐந்து வாவிகளும் காணபோர் கண்களைக் கவரும். உள்ளத்தை நிறைக்கும் இயற்கையின் அருட் கொடையாகும்.

அமெரிக்க ஆதிகுடிகள் 13000 ஆண்டுகளுக்கு முன்பிருந்து இந்த வாவிகளின் கரைகளில் வசிக்கின்றனர். 1634ம் ஆண்டு சாமுவெல் டீ சாம்ப் ளேன் என்பவர் ஜோர்ஜிய விரி குடாவைக் கடந்து வந்து ஹியுரன் வாவியின் கிழக்கு மூலையால் உள் நுழைந்து இந்த ஐந்து வாவிகளையும் கண்டுபிடித்தார். அவர் வந்த நோக்கம் வேறாக இருப்பினும் அவரின் இந்தக் கண்டுபிடிப்பு உலகையே ஆனந்தப்படுத்தியது.

இந்த ஐம்பெரும் வாவிகளைக் கொண்ட பிரதேசம் பல்வேறு பிராணி இனங்களையும், இயற்கை வளங்களையும் கொண்டது மட்டுமல்லாமல் இயற்கை அழகு மிளிரும் இடமாகவும் உள்ளது.

தற்போது இந்த ஐம்பெரும் வாவிகளை கனடாவும், அமெரிக்காவும் இணைந்து பாதுகாக்கின்றன.

## நாம் வாசிக்காதவை

ரீ.ஜே. அகமட் ஜான்

### சர்வாதிகாரி ஹிட்லர்

1940ஆம் ஆண்டு ஜேர்மனியில் பிறந்த ஹிட்லர் எனும் நாஸி சர்வாதிகாரி, அந்நாட்டு மக்களைக் கீழ்வருமாறு எச்சரித்தான்.

"சிந்திக்க வேண்டாம். சிந்தித்தாலும் அது பற்றிக் கூற வேண்டாம். சிந்தித்துக் கூறினாலும் அது பற்றி எழுத வேண்டாம். சிந்தித்துக் கூறி எழுதினாலும் அதில் கையொப்பமிட வேண்டாம். சிந்தித்துக் கூறி, எழுதி, கையொப்பமிட்டாலும் அதன் பின் விளைவுகளையிட்டு ஆச்சரியப்படவும் வேண்டாம்."

இது வெறும் சொற்குவியலல்ல. மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்த நாஸித் தலைவனால் பறிபோன உயிர்களின் எண்ணிக்கையே இதற்குத் தக்க சாட்சி.

### அதிசயப் பறவை

அதிசயமான பறவையொன்றைக் கண்டு பிடிக்கும் பாக்கியம் பஜு தீவைச் சேர்ந்த ஆய்வாளர்களுக்குக் கிட்டியுள்ளது. இப்பறவை பல காலத்திற்கு முன் இறந்து அழிவுக்குள்ளாகி விட்டதாக நம்பியிருந்தனர். ஆனால், அது மீண்டும் தென்பட்டுள்ளது. வர்பிமில்லர் எனும் பெயருடைய இவ்வழகான பறவை இனம் பாபு எனும் வனத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# முஸ்லிம் குரல்

புதிர்ப் போட்டி இல - 07

அகழ்வு : நிஷாத் கரீம்

## போட்டி நிபந்தனைகள்

✔ உங்கள் விடைகள் தெளிவான எழுத்துக்களில் எழுதி அனுப்பப்படல் வேண்டும். (விடைத்தாளை நீங்கள் தயாரித்துக் கொள்ளவும்)

✔ சகல வினாக்களுக்கும் சரியான விடையை எழுதி அனுப்பிய அதிஷ்டசாலிக்கு பெறுமதியானதும், அறிவு ரீதியானதுமான நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

✔ ஒன்றுக்கு மேலானவர்கள் சரியான விடையை எழுதி அனுப்பும் பட்சத்தில் குலுக்கல் முறையில் அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார்.

✔ ஏனைய 10 முதல் தர விடைதாரர்களின் பெயர் பிரசுரிக்கப்பட்டு பாராட்டுப் பெறுவர்.

✔ நிரப்பப்பட்ட விடைத்தாள் 03.01.2004 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாய் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

✔ விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி

முஸ்லிம் குரல்,
புதிர்ப் போட்டி இல - 07
181/1 மாளிகாகந்த வீதி,
(வைட் பார்க்)
கொழும்பு - 10

இந்தப் பகுதியின் மாதிரி விடைத்தாளில் புதிர் எண்களும் அதற்கான விடை எழுதும் பகுதியும் தரப்பட்டுள்ளன. (காண்க விடைத்தாள் - 07)

### புதிர்கள் :-

01. இந்தியாவின் எந்த மாநிலத்தின் மாதிரியை கிழக்கு, வடக்கு முஸ்லிம்களுக்கு தீர்வாக முன்வைப்பதாக றவூப் ஹக்கீம் கூறுகிறார்?

02. இலங்கையின் முதன் முதல் அமைச்சராக இருந்த முஸ்லிம் பெண்மணி யார்?

03. புலிகளால் படுகொலை செய்யப்பட்ட மூதூர் உதவி அரசாங்க அதிபர் யார்?

04. ஈராக்கிற்கு பயத்தின் காரணமாக திருட்டுத்தனமாக சென்று வந்த வல்லரசு என்று கூறும் நாட்டின் தலைவர் யார்?

05. மகாவலி கங்கை கடலோடு கலக்கும் முஸ்லிம் தேச குடா எது?

06. வட, மாகாண முஸ்லிம்களை பலாத்காரமாக வெளியேற்றுவதற்கு பிரபாகரனின் உத்தரவின் பேரில் களத்தில் நின்ற புலிகளின் அன்றைய மட்டக்களப்பு பிரதேச அரசியல் பொறுப்பாளர் யார்?

07. புளொட் என்ற தமிழர் இயக்கம் கைப்பற்ற முயன்ற தென்கிழக்காசிய முஸ்லிம் நாடு எது?

08. 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மாகாண சபைக்கு கவர்ண (ஆளுநர்) ராக நியமிக்கப்பட்ட முதல் முஸ்லிம் யார்?

09. மூதூர், கிண்ணியா, வாழைச்சேனை, சம்மாந்துறை படுகொலைகளை புலிகள் புரிவதற்கும் முஸ்லிம்களை அடிமைப்படுத்தவும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திய UNP அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் எத்தனையாம் திகதி செய்யப்பட்டது?

10. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர் மர்ஹூம் அஷ்ரஃப் அவர்கள் கொல்லப்பட்டபோது கூடச் சென்ற நுஆ தமிழ் வேட்பாளர் யார்?

முஸ்லிம் குரல்
புதிர்ப் போட்டி இல- 07

| புதிர் இல. | |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| 9 | |
| 10 | |

பெயர் : ..........

முகவரி : ..........

கையொப்பம் : ..........

### முஸ்லிம் மீனவர்கள் ஐவரும், 24 மீன்பிடிப் படகுகளும் புலிகளினால் கடத்தல்

முஸ்லிம் மீனவர்கள் ஐவருடன் அவர்களுக்குரிய 24 மீன்பிடிப் படகுகளை 06ஆம் திகதி அதிகாலை வாகனேரி பிரதேசத்தில் வைத்து புலிகளின் குழுவினர் கடத்திக் கொண்டு போயுள்ளனர்.

முஸ்லிம் மீனவர்களும், மீன்பிடிப் படகுகளும் முல்லிவட்டுவான் பிரதேசத்தில் அமைந்துள்ள புலி முகாமொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளைத்தம்பி ஹோட்டல்

காத்தான்குடி வாழ் சுவை உணவுப் பிரியர்களின் நாவுக்கு ஓர் இனிப்பான செய்தி....

காலையோ, மாலையோ, இரவோ எந்நேரமாகிலும் நீங்கள் விரும்பும் உணவை உண்டு மகிழ...

உங்கள் விருந்தினர்களுக்கு அவர்கள் அதிசயிக்கும் சுவையுடன் சிற்றுண்டி வகைகளை வழங்கி வியப்பில் ஆழ்த்த திருமண, பிறந்தநாள் போன்ற விஷேட வைபவங்களைச் சிறப்பிக்க

நாங்கள் சுவையான, சுத்தமான உணவு வகைகளை வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

சம்சா, கட்லட், றோல்ஸ் போன்றவை ஓடர்களுக்காக விஷேடமாக தயாரித்து வழங்கப்படும்.

காத்தான்குடி குட்வின் சந்தியில் நீங்கள் விஜயம் செய்ய வேண்டிய ஒரே இடம்

வெள்ளைத்தம்பி ஹோட்டல்
Advt.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலங்க சுமதிபால; அதிர்ச்சியைத் தரும் நிகழ்வுகள்!



கிரிக்கட் 'கனவான்களின் விளையாட்டு' என்று பெயர் பெற்றது. இப்போது கிரிக்கட் உலக சூதாட்டக் காரர்களின் கூடாரமாயிற்றா என்கிற வினாக்கள் உலகளவில் பல்வேறு சம்பவங்களினால் எழுந்து விட்டது. இக்குற்றச்சாட்டுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் இலங்கை கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் திலங்க மீதான நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

பெருமளவு ஆங்கில ஊடகங்களினதும், அரசியல் விளையாட்டுத்துறை மட்டத்தினதும் ஆர்வத்தை அதிகரித்திருக்கும் திலங்க மீதான நீதிமன்ற நடவடிக்கைகள் - வெறுமனே சம்பவங்கள் மட்டுமல்ல: அதிகாரத்தின் பின் மறைந்துள்ள பல்வேறு நிகழ்வுகளை அம்பலப்படுத்தும் விடயமாகவும் வெடிக்கக் காத்திருக்கும் வெடி குண்டின் நிலையை ஒத்ததாகவும் உள்ளன.

திலங்க மீதான குற்றச் சாட்டு

கொழும்பின் பாதாள உலகத் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்ததும்; அவர்களை பாவித்து பல்வேறு சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டமை, பாதாள உலகத்தின் தலைவரான தம்மிக பெரேரா அல்லது தம்பிக அமரசிங்க என்பவருக்கு புத்திக பிரியந்த கொடகே எனும் பொய்ப்பெயரில் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொடுத்து உலகக் கோப்பை கிரிக்கட் போட்டித் தொடரின் போது இங்கிலாந்துக்கு சட்ட விரோதமாகக் கூட்டிச் சென்றமை.

**பணம், பாதாளம் வரையும் பாயும் என்பார்கள். கடந்த கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் தேர்தலில் - இலங்கைக்கு உலகக் கிண்ணத்தை பெற்றுக் கொடுத்த, முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவர் அர்ஜுனா ரணதுங்காவையே பெருமளவு வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்த - கோடீஸ்வரக் குதிரை இவர்.**

இத்தகைய சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையின் பெருமளவிலான பணத்தை செலவிட்டமை.

நீதிமன்றமே சூதாட்டக்களம்தானா?

இக்குற்றச் சாட்டுக்களை அடுத்து நீதிமன்ற உத்தரவுக்கு அமைய திலங்க நீதிவான் முன் செல்ல வேண்டியதாயிற்று. ஆச்சரியம் என்னவெனில் நீதி பெறுவதிலும் கூட திலங்க தனது அதிகாரத்தையும் செல்வாக்கையும் பணத்தையும் பெருமளவில் வாரி இறைக்க முற்பட்டுள்ளார் என்பது தற்போது ஆச்சரியம் தரும் வகையில் வெளிவந்து கொண்டிருக்கிறது. சட்டப்பிரச்சினையான திலங்க மீதான குற்றச்சாட்டுக்கள் இப்போது "நீதிமன்றங்கள்" தொடர்பான பிரச்சினையாகவும் விஸ்வரூபமெடுத்துள்ளன.



நீதவானை திலங்க பணம் கொடுத்து வாங்கினாரா?

கடந்த போயா தினத்தன்று திலங்க மீதான குடிவரவு, குடியகல்வு பிடியாணையை நீக்கக் கோரி திலங்க தரப்பில் முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்ட நீதிமன்ற நாடகம் நன்கு அரங்கேற்றப்பட்டது.

விடுமுறை தினத்தன்று தானே ஏற்பாடு செய்த நீதவான்முன் தோன்றி தனக்கான விடுவிப்பு உத்தரவை திலங்க எடுத்தது இலங்கையின் நீதித்துறையை அதிக நகைப்பிற்கிடமாக்கியுள்ளது.

சூதாட்டத்தில் பெருமளவு ஆர்வம் கொண்ருந்தவரும் தனக்கு நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந் தவருமான மேலதிக நீதவான் ஆனந்த சம்பத் ஆராய்ச்சி முன் ஆஜரானதன் ஊடாக மேலதிக நிபந்தனைகளுடன் திலங்க உடனடியாக விடுவிக்கப்பட்டார்! இச்செய்கையானது இலங்கை நீதித்துறையை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

ஏன் இந்த அதிர்ச்சி?

குற்றம் சாட்டப்பட்ட திலங்க நேரடிப்பிரசன்னமாகாமல் இப்பிரேரணை மனு நீதவானால் ஏற்கப்பட்டமை.

இதுவரை சனி, ஞாயிறு ஏனைய விடுமுறை நாட்களில் நீதிமன்றமானது கோரிக்கைகளையும் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளையும் மட்டுமே ஏற்பது வழக்கமாக இருந்தது. அத்துடன் குற்றம்சாட்டப்படுபவர்களை விடுதலை செய்வது இத்தினங்களில் நடைபெறுவதில்லை. ஒன்று விளக்க மறியலில் வைக்கப்படுவதற்கு அல்லது பிணை வழங்கப்படுவதற்கு மட்டுமே இத்தினங்களில் முடியும்.

வழக்குப்பற்றிய கோவைகளோ, சுருக்கெழுத் தாளரோ இல்லாத நிலையில் பதில் நீதவான் 42 பக்க விபர, விடுவிப்பு அறிக்கையை தனது கையினாலேயே எழுதியமை.

காலை 10 மணிக்குப் பிறகு எந்த மனுவும் சமர்ப்பிக்க முடியாது - (இது உலகளாவிய நீதிமன்ற நடவடிக் கையாகும்) ஆனால் இத்தினத்தில் மதியம் 1 மணிக்கு மனு சமர்ப்பிக்கப்பட்டுள்து.

நீதிபதிக்கு நடந்தது என்ன?

இன்று முக்கியமான பார்வைக்குரியவராகிவிட்ட திலங்கவை விடுவித்த நீதிபதி குற்றவாளியை பிணையில் விடுவித்திருக்க முடியும் - அப்படிச் செய்யாது திலங்கவை விடுதலை செய்தது குற்றமாக கருதப்பட்டு இப்போது இந்த நீதிபதியை பிரதம நீதியரசர் அவர்கள் - தீர்ப்பு வழங்கப்பட்ட 48 மணி நேரத்துக்குள் இடை நிறுத்தம் செய்துள்ளார். இத்துடன் இவர் நீதிச் சேவையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட வேண்டுமெனவும் கோரிக்கைகள் எழுந்துள்ளன.

இந்த நீதிபதி பெரும் சூதாட்டப்பிரியர் எனவும் காமினி குணரத்ன எனும் பெயரில் இரகசியமான முறையில் பல்வேறு இரவுக் களியாட்ட விடுதிகளுக்கு சென்று வருபவர் எனவும் இப்போது ஆங்கில ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இவர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு நீதித்துறை தயாராகி வருவதாகவும் தெரிகிறது.

பத்திரிகையாளர் மாநாடு

போயா தினத்தன்று மாலை தான் விடுவிக்கப்பட்ட உத்தரவை நீதவானிடமிருந்து பெற்றுக் கொண்ட திலங்கா அன்று மாலை 7 மணிக்கு கிரிக்கட் கட்டுப்பாட்டுத் தலைமையகத்தில் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் - தன் மீதான குற்றச்சாட்டுக்கள் ஊடகங்களால் குறிப்பாக கொழும்பிலிருந்து வெளிவரும் வாராந்த ஆங்கில ஊடகமொன்றினால் சோடிக்கப்பட்டது என்றும் - இப்போது நீதிமன்றம் தன்னை குற்றமற்றவர் என விடுதலை செய்துள்ளது எனவும் கூறினார். ஆனால் பின்பு நடந்தவை திலங்காவை உலுப்பி விட்டிருக்கிறது.

விசாரணை தொடர்கிறது.

திலங்க வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட வில்லை எனவும் குற்றப்புலன் விசாரணைப் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனவும் கொழும்பு மேலதிக நீதவான் தெரிவித்துள்ளார். சட்டமா அதிபர் திணைக்களம் திலங்க மீது அழைப்பாணை பிறப்பித்துள்ளது. ஜனவரி 08ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பணம், பாதாளம் வரையும் பாயும் என்பார்கள், திலங்க டெலிகொம், மொபிடெல் போன்ற பெரும் நிறுவனங்களின் தலைவரும் முக்கிய அரசியல் தலைவர்களின் நெருங்கிய சகாவாகவும் இருந்து வருகிறவர் - கடந்த கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் தேர்தலில் - இலங்கைக்கு உலகக் கிண்ணத்தை பெற்றுக் கொடுத்த, முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவர் அர்ஜுனா ரணதுங்காவையே பெருமளவு வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்த - கோடீஸ்வரக் குதிரை இவர்.

பணமா, சட்டமா இதில் எது வெற்றி பெறும் என்பதை இன்னும் நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் - ஏனெனில் இப்போதுதான் ஆட்டம் தொடங்கியுள்ளது.

- பாதுஷா -

## மாண்புமிகு முன்னாள் அமைச்சர்

(2001.12.05ம் திகதி மடவளைப் பிரதேசத்தில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட 10 முஸ்லிம் வாலிபர்களின் ஈராண்டுச் சோகமாக....)

சுட்டுக்கொல்ல பதவிக்கு வந்தவன் நான்
என் அமைச்சரவை மேசை லாச்சுக்குள்
சட்டமும் நீதியும்
நிம்மதியாகத் தூங்குகையில்
மூட்டைப் பூச்சிகளைச் சாகடிப்பது போல
மனிதர்களைக் கொல்ல
தைரியம் இருக்கிறதெனக்கு

அதிகாரம் என்னிடம்
வாக்குப் பெட்டிகளைக் கடத்தி வந்து
நீல நிறத்தில் செய்து முடிப்பேன்
225 எம்.பி கதிரைகளையும்.
எனக்கென்ன பயம்?
முப்படைகளும் எனது பக்கட்டுக்குள்
மூச்சுவிட்டுக் கொண்டிருக்கையில்

என் ராஜாங்கம் இத்தேசத்தில்
என் மூதாதையரின் அத்தாட்சி ஸ்ரீலங்கா.
அரச மர நடுகை விழாவை மட்டுமே
ஆண்டு தோறும் நடத்துவேன்
22 மாவட்டங்கள் முழுவதும்

இன்னும் கேள்
சிங்களத்தின் முன்னால் உங்கள் மொழி
கைகட்டி வாய்பொத்தி அடங்கி நிற்க வேண்டும்
என் வார்த்தையை மட்டும்
அரசாள அங்கீகரிப்பேன்
உங்கள் மதத்தை அறுத்துக் கறிசமைத்து
பௌத்த தர்மத்துக்கு 'தன்ஸல' விருந்தளிப்பேன்

என் சுட்டு விரல் அசைந்தால்
கண்டிமா புனித நகரம், நில நடுக்கம் கொள்ளும்
உங்களின் பல்லாயிரக்கணக்கான
வாக்குப் புள்ளடிகளை
அரசாங்க ஆயுதத்தின் மேற்பார்வையில்
கள்ள வோட்டுப் போட்டு
பெட்டி நிறைப்பார்கள்
என் அருமைப் புதல்வர்கள்

கொலைகுத்து வெட்டு மோசடிகளை
என் பணி முடிக்கும் தொண்டர்கள்
காத்து நிற்கிறார்கள் கால் வலிக்க
நீங்கள் தனித்துவமாக வளர்க்கும்
மரங்களை வெட்டிச்
சாய்த்து
சொகுசான நாற்காலிகள் செய்து
அமரக் கொடுப்பேன் அவர்களுக்கு

உங்கள் அரசியலை
மலைகளை விலக்கி ஓடும் ஏதோவோர் ஆற்றில்
கரைத்துவிட்டுக் கைகழுவிச் சென்றுவிடுங்கள்
மடவளையில்
10 முஸ்லிம்களை வேட்டையாடித் தின்றது
போதவில்லையென்ற
பசி பட்டினியோடிருக்கும் என் குண்டர்கள்
இன்னுமொரு உங்கள் ஊரில்
இன்னும் பல பேரைக் கொன்றுவிட்டு
இரத்தம் பட்ட கொலைக் கரங்களைக் கழுவ
உங்கள் ஹவுழுகளை தேடியே வருவார்கள்.

அவர்களுக்கு ஆயுதம் வழங்கவும்
அகப்பட்டால் வெளியே எடுத்து விடவும்
இன்னும் மீதமாய் என்னிடம் இருக்கிறது
அரச செல்வாக்கும் அபகரித்த பணமும்

- எம்.எல்.எம். அன்ஸார் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழத்தில் பிறந்தது...

# பொது உலகின் மனசாட்சி



எட்வர்ட் சயீத் என்ற அறிவு ஜீவி, இலக்கியச் சிந்தனையாளர், அரசியல் அறிவின் மனசாட்சி, பல்மொழி வல்லுனர், மேற்கத்திய இசை ஆராய்ச்சியாளர் இறந்துவிட்டார். 20க்கும் மேற்பட்ட புத்தகங்களையும் நூற்றுக் கணக்கான கட்டுரைகளையும் இயற்றிய சயீத் இன்று மரணத்தால் எழுதப்பட்டார். 10 வருடங்களுக்கும் மேலாக நிவாரணமில்லாத புற்றுநோயால் பாதிக்கப்பட்டு ஒவ்வொரு கணமும் இறந்துகொண்டிருந்த சயீத் இறப்பையே ஒரு அணுகுமுறையாகக் கண்டு வாழ்க்கையைத் தொடர்ந்தார். மூர்ச்சைகளுக்கு இடையே எழுதிக் குவித்தார். உலகெங்கும் சென்று சொற்பொழிவாற்றினார். சமாதானத் தூதுவராக இஸ்ரேலிய இசை நடத்துனர்களையும் பலஸ்தீனிய இசைக் கலைஞர்களையும், ஒருங்கிணைத்துப் பல கச்சேரிகளை அரங்கேற்றினார். அரசாங்கங்களாலும், அரசியல் தலைவர்களாலும் கட்சிகளாலும் அமைக்கப்படாத மனித நேயம் என்ற பாலத்தைப் பல தனி மனிதர்களுடன் சேர்ந்து உருவாக்க நினைத்தார். எனக்கு வீடு என்று ஒன்றுமே கிடையாது: அகதியாக எல்லைப்புறங்களிலும் இடைவெளிகளிலும் வாழக் கற்றுக்கொண்டவன் என்று அறிவித்த எட்வர்ட் சயீத், இன்று இடைவெளியாகவே மறைந்துவிட்டார். அவர் என் ஆசான், தோழர், வழிகாட்டி, முன்னோடி.

ஜெருசலத்தில் பிறந்து எகிப்தின் கைரோவில் வளர்ந்து, பின் உயர்நிலைப் பள்ளிப் படிப்புக்காக அமெரிக்கா சென்ற சயீத் அங்கேயே தங்கி மேலே படித்து, பி.எச்டி பட்டம் பெற்றார். கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம் மற்றும் ஒப்பியல் இலக்கியத்திலும் பேராசிரியராக இருந்த சயீதுக்குப் பல புகழ்பெற்ற மாணவர்கள்.

மேற்கின் அறிவுத்தள அச்சுறுத்தல்களைத் தாண்டி அதன் சிந்தனைப் போக்குகளையும் சாசனாமுறைகளையும் தாண்டி 'கிழக்கு' எப்படிப் பேசும், எப்படிப் பேச வேண்டும், எப்படித் தன் சுயப்பிரதிநிதித்துவத்தை நிலை நாட்ட வேண்டும் என்பதுதான் பிரச்சினை. அமெரிக்காவில் இருக்க இருக்க, தான் இரு கலாச்சாரங்களுக்கு நடுவே இருக்கும் நிலைமையும் அந்த நிலைமையின் தர்மசங்கடங்களும் சயீதுக்குப் புலப்படலாயின. எந்த அளவிற்கு அறிவு நீதி என்ற பெயரால் அரேபிய, இஸ்லாமியக் கலாச்சாரம் ஓரியண்டலிஸம் என்ற அமைப்பால் பாதிக்கப்பட்டு, சிறுமைப்படுத்தப்பட்டுக் கேவல உதாரணமாக்கப்பட்டிருக்கிறது என்பதை முற்றிலும் அறிந்திருந்த சயீத் தன்னுடைய அறிவுலகச் செயல்பாடுகளின் நிகழ்ச்சி நிரலை மாற்றி அமைத்துக்கொண்டார். இந்த அவல நிலையை மாற்றி அமைக்க, அமெரிக்காவிற்குப் புத்தி புகட்ட, மேற்கத்திய கிழக்கித்தியக் கலாச்சாரங்களுக்கிடையே பாலம் அமைக்க, உண்மையான பேச்சுவார்த்தைகளை, கருத்துப் பரிமாற்றங்களை வளர்த்தெடுக்க முனைந்தார்.

பல வருடங்கள் மேற்கில் வாழ்ந்துவந்த சயீத் தன அரேபியப் பூர்வீகத்தை அங்கீகரித்து, மேற்கிற்கும் கிழக்கிற்கும் நடுவே கலாச்சாரத் தூதுவராகப் பணிபுரியத் தொடங்கினார். மற்றொரு பக்கம் அரசியல் தளத்தில் பலஸ்தீனியரின் அகதி நிலைமைக்கு நிவாரணம் காண சயீத் பலஸ்தீனியத் தேசியக் கவுன்சிலிலும் உடல் நிலை குலையும்வரை பணி புரிந்துவந்தார். இஸ்ரேல் அரசாங்கத்தைக் கண்டனம் செய்த சயீத் PLO வையும் அதன் தலைவர் யாசீர் அரபாத்தையும் கண்டனம் செய்ய மறக்கவில்லை.

அவருடைய புற்றுநோய் தீவிரம் அடைய அடைய அவருடைய வாழ்க்கைப் பற்று மேலும் தீவிரமடைந்து கொண்டிருந்தது. நான் கடைசியாக எட்வர்டைச் சந்தித்தது இரண்டு வருடங்களுக்கு முன் எனக்கோ என்னைப் போன்ற பலருக்கோ அவரிடம் கேட்க வேண்டிய கேள்விகள் நிறையவே உள்ளன. அவரிடம் எல்லாக் கேள்விகளுக்கும் பதிலில்லை. இருக்காது என்று எனக்குத் தெரியும். பதில்கள் சொல்லி, வாழ்க்கையைக் கௌரவிக்க நீங்கள் இன்னும் சில காலம் தங்கியிருக்கலாம் என்று சொல்லவில்லை. பதில்களே பொய்யாக மாறும் நேரத்தில் யாருக்கு வேண்டும் சாசுவத பதில்கள்?

மறைந்து விட்ட ஆசான், தோழர், வழிகாட்டி எட்வர்ட் சயீத் அவர்களே நன்றி. உங்களுக்கு என் இறுதிப் பிரியாவிடை.

நன்றி: ரா. ராதாகிருஷ்ணன் - காலச்சுவடு

# கவிக்கோவுக்கு ஒரு கடிதம் - 4



உஸ்மான் மரிக்கார்

இங்கே நான் சிங்கள இனவெறியர்களால் அப்பாவித் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அவலங்களை, ஆக்கினைகளை, இன்னல்களை ஒரு போதும் குறைத்து எடைபோடவில்லை. அவர்களுக்கு ஆதரவாக நாமும் குரல் கொடுக்கின்றோம். அதே போல் தமிழ் வெறியர்களான புலிகளால் அப்பாவி முஸ்லிம்களும், சிங்களவர்களும் கொலை செய்யப்பட்ட போது, கொடூரங்களுக்காளான போது மட்டும் அதற்காக ஏன் நீ குரல் கொடுக்கவில்லை அதன்மூலம் இஸ்லாமியர்களான எமது உணர்வுகளை இழிவுபடுத்துகிறாயே. அதைத்தான் கண்டிக்கிறேன்.

பூவிழந்த நமது தமிழ்ச் சகோதரிகளுக்காக நீ புலம்புவது நியாயம்தான். மறுக்கமாட்டேன். ஆயினும் புலிகள் செய்த புண்ணியத்தால் "இத்தா" இருக்கும் எமது இளைய முக்காடுகளை நீ நினைத்துப் பார்த்ததுண்டா?

நிஜமாகவே நீ மனிதம் போற்றுபவனாக இருந்திருந்தால் பாதிக்கப்பட்டவர்கள் - தமிழரோ, இஸ்லாமியரோ , ஏன் சிங்களவர்களாயிருந்தாலும் கூட - நீ குரல் கொடுத்திருக்க வேண்டும். அதே போல் அந்தக் கொடூரங்களைச் செய்தவன் - சிங்களவனோ, தமிழனோ,ஏன் இஸ்லாமியனாக இருந்தாலும் கூட நீ அதைக் கண்டித்திருக்க வேண்டும்.

சகோதரா! உண்மையிலேயே நான் புலிகளை மனமாரப் பாராட்டுவேன். அவர்கள் அற்புதமான ராஜதந்திரிகள். பாராட்டுகிறேன். எம்மைப் போன்ற முஸ்லிம்களை அழித்தொழிப்பதற்காக உன்னைப் போன்ற கோடாரிக் காம்புகளை அற்புதமாக உபயோகித்திருக்கிறார்கள்.

சகோதரா! நான் மிகவும் வெறுக்கின்ற பேர்வழிகளுள் ஒருவனாக நீ இருக்கின்ற போதிலுங் கூட நான் மிகவும் விரும்புகின்ற கவிஞர்களில் நீயும் ஒருவன்.

உண்மையில் இங்கே இலங்கையில் ஜிஹாத், ஹமாஸ், ஹிஸ்புல்லா, அல்கைதா, கத்தரிக்கா, புடலங்கா என்று ஒன்றுமே கிடையாது. அப்படி இருந்திருந்தால் அவர்களுக்கு இலங்கையில் இருக்கும் சுய நலவாதிகளான முஸ்லிம் அரசியல்வாதிகளைச் சுட்டுத்தள்ளவோ நேரம் போதாது போகும்.

இறுதி நேரத்தில் உங்கள் மரணப் படுக்கையில் வைத்து இலங்கை, இந்தியா உலக முஸ்லிம்களுக்கு நீங்க செய்த மௌனத் துரோகம் உன் ஞாபகத்துக்கு வரும் (But it will be too late) அது கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதற்கு ஒப்பாகும். ஆயினும் சகோதரா! ஒன்றை மட்டும் ஒரு போதும் மறந்து விடாதே. நாளை மறுமையில் நீ அல்லாஹ்வுக்குப் பதில் சொல்லியாக வேண்டும்.

சகோதரா! இறுதித் தடவையாக இலங்கை வந்த போது, வெறிச்சோடிப் போன யாழ் வீதிகளைப்பார்த்துவிட்டு "விழுப் புண் சுமந்த வீரனைப் போலிருக்குது" என்று நீ வியந்துரைத்தாய். ஆனந்த விகடனில் 'நரம்பறுந்த யாழ்' மீட்டுகிறாய்.

தமிழகத்து வணிக சஞ்சிகைகளுக்கு இப்போதெல்லாம் புலம் பெயர்ந்து செல்வம் செழிக்கும் மேற்கில் வாழும் ஈழத்தமிழர் மீது பாசம் பொத்துக் கொண்டு கொட்டுகிறது. அதனால்தான் "யாழ்" .மீட்டுகிறார்கள். சும்மா ரூபா சதமா? டொலர் என்றும் பவுண் என்றும் கொட்டோ கொட்டென்று கொட்டுகிறதே. ஈழத்தமிழர் வறுமையில் வாடும் கீழை நாடுகளுக்குப் புலம் பெயர்ந்திருந்தால் அவர்களது கண்ணீருக்கு இந்தக் கீர்த்தி கிட்டியிருக்காது. எல்லாம் மூர்த்தி (டொலர்)யின் காரணமாகத்தான் "யாழ்" மீட்டுவதன் மூலம் சங்கீத வித்துவான் காட்டிலும் சாபக்காரர்கள் காட்டிலும் நல்ல மழைதான்.

அதே போல் கருணாநிதி போன்ற அரசியல் சாணாக்கியர்களுக்கு ஈழத் தமிழர் பிரச்சினையென்பது வாக்கு வேட்டை நிலம். தமது முதல்வர் பதவிக்கான படிக்கட்டாகப் பயன்படுகிறது.

ஆக ஒரு புறமாகப் பார்த்தால் அது தமிழகத்தின் கலா - வாணிகருக்கு அலிபாபாவின் தங்கச் சுரங்கம். மறுபுறமாக தமிழகத்து அரசியல்வாதிகளுக்குக் கிட்டிய அலாவுதீனின் அற்புத விளக்கு.

# யாத்ரா கவிதைப் போட்டி பரிசளிப்பு விழா

புத்தாயிரத்தில் இலங்கையின் முதல் தமிழ்க் கவிதை இதழான "யாத்ரா" 2002ஆம் ஆண்டு நடாத்திய கவிதைப் போட்டிப் பரிசளிப்பு விழா, எதிர்வரும் ஜனவரி 03ம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு கொழும்பு-10, டவர் ஹோல் அரங்கில் நடைபெறவுள்ளது.

விழா ஞாபகார்த்தமாக "யாத்ரா" 12வது இதழும் "யாத்ரா"வின் ஒன்பதாவது வெளியீடான வாழைச்சேனை அமர் எழுதிய "நீ வரும் காலைப் பொழுது" கவிதைத் தொகுதியும் வெளியிட்டு வைக்கப்படும். கவிதைப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்கள் முறையே தங்க ரோஜா, வெள்ளி ரோஜா, வெண்கல ரோஜாக் கிண்ணங்கள் வழங்கி கௌரவிக்கப்படுவதோடு, பணப்பரிசில்களும் வழங்கப்படும். முதல் பத்து இடங்களையும் பெற்றவர்களுக்கு சான்றிதழ், யாத்ரா நினைவுக் கேடயம், கவிஞர் ஏ.எம். அபூபக்கர் அன்பளிப்புச் செய்துள்ள புத்தகப்பொதி ஆகியன வழங்கப்படவுள்ளன. முதல் பத்து இடங்களையும் பெற்றவர்களில் இந்தியக் கவிஞர்களும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல்: அஷ்ரப் சிஹாப்தீன்

## ஹைக்கூக்கள்

பூனையின்சாயல் கொண்ட உனக்கு
புனைப் பெயருண்டு
இனந்தெரியாத நபர்களென்று!

சைவச்சிற்றுண்டிச்சாலையில்
அசைவமாய்
'லேடீஸ் பிங்கர்'

அம்மணமாய் அரங்கேறிய அம்மணிக்கு
கிடைத்தது பட்டம்
அழகு ராணியென்று!

ஆலயங்கள் ஏன்
அதிவிசாலமாய்?
அகதியாய் வருவோருக்கு
அடைக்கலம் புகத்தானோ?




நூல் : நூலறுந்த பட்டம் (சிறுகதைகள்)
நூலாசிரியர் : ஒலுவில் அமுதன
வெளியீடு : ரக்ஷானா வெளியீட்டகம் அக்கரைப்பற்று - 05
பக்கங்கள் 102, விலை 120/-

இலக்கியச் சுடர்மணி ஒலுவில் அமுதன் (ஆ.அலாவுதீன்) அண்மையில் "நூலறுந்த பட்டம்" எனும் தலைப்பில் தனது எட்டாவது நூலினை வெளிக்கொணர்ந்திருக்கின்றார். இந்நூல் இவரின் மூன்றாவது சிறுகதைத் தொகுதியாகும்.

இந்த நூலில் பதின்மூன்று சிறுகதைகள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் இன்றைய மக்களின் வாழ்க்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற யதார்த்தபூர்வமான நிகழ்வுகளை சித்தரிக்கும் வகையிலும், அவற்றிலிருந்து பெற வேண்டிய "படிப்பினை" போதனைகளை முதன்மைப்படுத்தியும் எழுதப்பட்டிருக்கின்றன.



கருப்பொருள்களில் செலுத்தப்பட்ட கவனம், சிறுகதை வடிவத்திற்கான இலட்சணங்கள் - வரையறைகளில் செலுத்தப்படவில்லை என்பதற்கு இந்நூலில் இடம் பெற்றிருக்கும் அத்தனை சிறுகதைகளும் சான்றுபகர்கின்றன.

நூலாசிரியர் "மனம் திறந்து..." என்ற மகுடத்தின் கீழ் தன்னைப்பற்றி மிகவும் அழுத்தமாகவே அறிமுகஞ் செய்கின்றார். அதேநேரம் கடினமான கோப உணர்வு மேலீடும் வகையில் சவால்களையும் விட்டிருக்கின்றார். இதன் மூலம் இலக்கிய உலகில் இந்நூலாசிரியர் எதிர் கொண்டிருக்கும் கோணங்களை தரிசிக்கலாம்.

நூலாசிரியர் பற்றி தனது பார்வையினை கலாபூஷணம் கவிஞர் ஏ. இக்பால் எழுதியிருக்கின்றார். அவற்றில் "முன்னேறி வரும் படைப்பாளியான இவர் இலக்கியத்தில் நிச்சயம் முதிர்ச்சி பெறுவர்" எனச் சுட்டுகின்றார்.

பன்நூலாசிரியரான இவர், தனது வாழ்விலும், எழுத்திலும் "நல்லதையும் நல்லவரையும் வார்த்தையில் வாழ்த்துவேன், தீயதையும், தீயவரையும் எழுத்தால் எரிப்பேன்" என்ற கோஷத்திற்கு கட்டுண்டு இருக்கின்றார் என்பதையும் இந்நூல் மூலம் நுகர்ந்து கொள்ள முடிகின்றது.

அபூ பாத்திமா பர்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தை தேனகம் 20-09-2003

கருணா அம்மான்
மட்டு அம்பாறை சிறப்புத் தளபதி
தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம்
கரடியனாறு.

கல்குடா முஸ்லிம் பிரதேசத்தில் கீழ்வரும் நிகழ்வுகளை சமாதான, இயல்பு வாழ்க்கைக்கு இடையூறான விடயங்களாக குறுகிய கால அவகாசத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

## 01. சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டிய நிகழ்வுகள் :

1. 2003-06-09 அன்று பொத்தானை வயல் பிரதேசத்தில் வைத்து முகம்மட் கஸ்ஸாலி என்பவரைக் கடத்தியவர்கள்.
2. 2003-06-12 அன்று வாழைச்சேனை சந்தையில் "கிறனைட்" குண்டு வீசி 4 பேரைக் காயப்படுத்தியவர்கள்.
3. 2003-06-15ஆம் திகதி மீண்டும் வாழைச்சேனை சந்தையில் "கிறனைட் குண்டு" வீசி 7 பேரைக் காயப்படுத்தியவர்கள்.
4. 2003-09-13 அன்று கோரகல்லிமடுவில் வைத்து மீன் வாங்கச் சென்ற எம்.பீ.எம். உசனார் என்பவர் மூன்று தமிழ் இளைஞர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டு, மரத்தில் கட்டி வைத்துவிட்டு அவரிடம் இருந்த ரூபா 3,000 பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். இவர் காலை 7.30 முதல் மாலை 7.15 வரை கட்டப்பட்டிருந்துள்ளார். இச்செய்கைக்கு காரணமாக இருந்தவர்கள்.
5. 2003-01-04 அன்று கல்லிமடுவில் வைத்து ஆட்டோ சாரதி ஹுசைன் கழுத்து வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டமை.

## 02. கடத்தப்பட்ட வண்டிகளையும், மாடுகளையும் மீள ஒப்படைத்தல் :

1. 2003 ஜுன் இல் இஸ்மாயில், சுபைர், புகாரி, மஃரூப் ஆகியோரது வண்டில் மாடுகள் நான்கு ஜெயந்தியாய காட்டில் வைத்துக் கடத்தப்பட்டுள்ளது.

2. 2003-07-21 அன்று (1) எம். உதுமாலெப்பை, (2) அபுசாலி சின்னவர், (3) எம்.எச். றம்ளார், (4) ஐ. சரீப், (5) எம். முஸ்தபா ஆகியோரது வண்டில் மாடுகள் ஜெயந்தியாய காட்டில் வைத்து புலிகளால் (தாமரை, வின்சன், மூர்த்தி, சிவா அடங்கலாக 9 பேர்) கொண்டு செல்லப்பட்டுள்ளது. இவ்வண்டி மாட்டு உரிமையாளர்கள் யாவரும் 20-07-2003, 21-07-2003 ஆகிய இரு தினங்களுக்கும் புலிகள் வனவளத்துறையினரிடம் தலா ரூபா 500 வீதம் செலுத்திப் பற்றுச்சீட்டும் பெற்றுள்ளர்.

இதில் உதுமாலெப்பை என்பவருக்குச் சொந்தமான வண்டில்கள் மூன்று கடத்திச் செல்லப்பட்டுள்ளது. சின்னவர், றம்ளார் ஆகியோரது இரண்டு வண்டில்களும் இதுவரை பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

3. 2003-07-27ல் யூசுப் லெப்பை ஹயாத்து முகம்மது, சீனி முகம்மது முஸ்தபா ஆகியோரது இரு வண்டில்களும், மாடுகளும் மீயாங்குளத்தில் வைத்து புலி இயக்கத்தினரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளன.

இதன் உடமையாளர்கள் கரடியனாற்றில் 2003-08-08 அன்று விசு அவர்களைச் சந்தித்தபோது, குகநாதன் அவர்களுக்கு இது விடயமாகப் பார்க்கச் சொல்லிக் கட்டளை இடப்பட்டது. இதுவரை எதுவும் நடக்கவில்லை.

## 03. கடத்திச் செல்லப்பட்ட கால்நடைகளை மீள ஒப்படைத்தல் :

1. 2003-08-19 அன்று நாவலடிச் சந்தியில் அலியுதுமாலெப்பை நளீம் என்பவரது 31 எருமை மாடுகள் கடத்திச் செல்லப்பட்டுள்ளன.

இதில் கணிசமான மாடுகள் புலிகள் இயக்கத்துக்கு ஒவ்வொன்றுக்கும் ரூபா 1,000 செலுத்திக் கொண்டுவரப்பட்டதாகும்.

2. 2003-09-05 அன்று மயிலந்தனை கிராமத்தில் வைத்து இஸ்மாலெப்பை முஸ்தபா என்பவருக்குச் சொந்தமான 60 எருமை மாடுகள் சந்திரா, ரூபன் ஆகிய தமிழ் இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளன.

3. 2003-09-05 அன்று முகம்மது சரீப் ஆதம்பாவா என்பவருக்குச் சொந்தமான இரண்டு வண்டில் கட்டும் மாடுகள் புணானையில் வைத்துக் கடத்தப்பட்டுள்ளன.

மேலும் இவருக்குச் சொந்தமான இரண்டு வண்டிகளும், மாடுகளும் 1995ம் ஆண்டும் புலிகள் இயக்கத்தினரால் கடத்திச் செல்லப்பட்டு, ரூபா 20,000 கொடுத்தால் மீளளிப்புச் செய்வதாக பணத்தைப் பெற்றுக்கொண்டு பின்னர் எதுவும் கொடுக்காது விடப்பட்டுள்ளதையும் உரிமையாளர் மனவேதனையோடு தான் வசிக்கும் ஓலைக்குடிசையில் இருந்து கொண்டு கூறினார்.




## 04. கடத்தப்பட்ட வாகனங்கள் :

1. 2003-06-27 அன்று கிடச்சிமடுவில் வைத்து முஸ்லிம் விவசாயி ஒருவருக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள் ஒன்று கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

2. 2003-08-04 அன்று மீராவோடையில் வசிக்கும் எம்.எம். பாரூக் என்பவரது 37-7669ம் இலக்க பேகுசன் (Ferguson) - 240 உழவு இயந்திரம் ஒன்று கடத்திச் செல்லப்பட்டுள்ளது. இந்த மெசின் தற்பொழுது புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் பொத்தானைப் பிரதேசத்தில் காணப்படுகின்றது. இது விடயமாக ஏற்கனவே புலிகள் இயக்க அதிகாரிகளிடம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இதன் உரிமையாளர் வயதுக்கு வந்த இரண்டு பெண் பிள்ளைகளையும், வயதுக்கு வந்த தங்கை ஒருவரையும் பராமரித்து வருபவராகும்.

3. 2003-08-10 அன்று எச்.எம். சுபைர் என்பவருக்குச் சொந்தமான 36 சிறி 2277ம் இலக்க இன்டர் நேசனல் (International) உழவு இயந்திரம் ஒன்று காணிக்கைவேப்பையடியில் வைத்து புலிகள் இயக்கத்தினால் கடத்திச் செல்லப்பட்டது. இதனை மீளப் பெற்றுக் கொள்ள ரூபா 50,000 புலிகள் இயக்கத்திற்கு செலுத்தப்பட்டது. ஆனால் மெசின் மாத்திரம் திருப்பிக்கொடுக்கப்பட்டது. பெட்டி திருப்பித் தரப்படவில்லை.

## 05. கடத்தப்பட்ட மீன்பிடிப்படகும், தோணிகளும்:

1. 2003-09-18 அன்று வாழைச்சேனை கடற்பரப்பிற்கு அண்மித்த பகுதியான இறால் ஓடைக்கு நேராக வைத்து சீனி முகம்மது ஐயூப்கான் என்பவரது "நூல் மெரின்" பிளாஸ்டிக் படகு ஒன்றும், பொருட்களும் ஆயுதம் தாங்கிய புலிகள் இயக்கத்தினரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

2. 2003-08-09 அன்று புணானை அணைக்கட்டில் வைத்து புலிகள் இயக்க உறுப்பினர்களால் எஸ்.ஏ. கபூர், ஹயாத்துமுகம்மது, ரி.எம். நஜிமுதீன், யு. யூசுப் லெப்பை ஆகியோருக்குச் சொந்தமான தோணிகளும்,வலைகளும் கடத்திச் செல்லப்பட்டுள்ளன. இவர்கள் தற்பொழுது தொழில் ஏதும் செய்ய முடியாது மிக வறுமையில் வாடுகின்றனர்.

அதே தினத்தில் ஆதம்பாவா சின்னவர் என்பவரது கட்டுவலையும் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

## 06. விவசாயப் பயிர்ச்செய்கை, காணி விடயம் :

1. வாகரைப் பிரதேசம் உட்பட மீதமாகவுள்ள சுமார் 10,000 ஏக்கர் காணியைச் செய்கை பண்ண முஸ்லிம்களுக்கு அனுமதியளித்தல்.
2. விவசாயிகளிடம் அறவிடும் வரிமுறையை நிறுத்துதல்.
3. விவசாயப் பிரதேசத்தில் இடம்பெறும் ஆட்கடத்தல், வாகனக் கடத்தல், அவதூறான வெறுக்கத்தக்க சொற்களால் முஸ்லிம் விவசாயிகளை அவமானப்படுத்துதல், மத கலாசார விடயங்களுக்குத் தடைவிதித்தல் போன்ற விடயங்களைத் தவிர்த்தல் வேண்டும்.

## 07. மீள் குடியேற்றம் :

| *கிராமங்கள்* | *இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை* |
|---|---|
| கள்ளிச்சை | 450 குடும்பங்கள் |
| பாலை நகர் | 216 குடும்பங்கள் |
| ஹிஜ்றா நகர் (நாவலடிச் சந்தி) | 126 குடும்பங்கள் |
| மதுரங்கேணிக்குளம் | 160 குடும்பங்கள் |
| புணானை | 134 குடும்பங்கள் |

மற்றும் கிரிமிச்சை, வாகனேரி, மாங்கேணி, காரமுனை போன்ற கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்தவர்களும் சுமார் 200 பேர் உள்ளனர்.

மேற்படி குடும்பங்களில் மீளக்குடியேற விரும்புகின்றவர்கள் 65சதவீதம் பேர். இவர்களை மீளக் குடியமர்த்த அனுமதி வழங்கப்பட வேண்டும்.

## 08. காணி விடயம் :

1. தொடர்ந்தும் சர்ச்சைக்குள்ளாகி வரும் பிறைந்துரைச்சேனை, காவத்தமுனை, தியாவட்டவான், புணானை (கிழக்கு) போன்ற விடயங்களை இப்பகுதி முஸ்லிம் குழுவினர் ஒன்றுடன் பேசித் தீர்த்துக் கொள்ளல்.

2. மீராவோடை தமிழ் பிரதேசத்தில் இடம்பெறும் எல்லைக் காணிப்பிரச்சினையை விரைவாக முடிவெடுக்க உதவுதல்.

3. காரமுனை, மதுரங்கேணிக்குளம், கிரிமிச்சை, புணானை, கள்ளிச்சை போன்ற பிரதேசங்களில் முஸ்லிம்களின் காணிகளுக்குச் சென்று வரவும், பயன்படுத்தவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளல்.

4. தமிழ் மக்களை முஸ்லிம்களின் வயல்களில் வேலை செய்யக்கூடாது என்ற தடையை நீக்குதல்.


எம்.எச்.எம். ஹக்கீம்
கல்குடா முஸ்லிம் பிரதேச பிரதிநிதி.
20-09-20003.

---

இஸ்லாம் என்பது நாகரிக வளர்ச்சியின் உயிர் நாடி. "எத்தனைதான் சிந்தனைகள், கோட்பாடுகள், நாகரிகங்கள் தோன்றியும் மனித வாழ்வியல் துறைகளில் இஸ்லாம்தான் மிகப்பெரும் தாக்கம் செலுத்தியது". என்பது மறுக்க முடியாத சத்தியமாகும். இஸ்லாம் வந்ததும் உப்பில்லாத நாகரிகங்கள் உடைந்து தீர்ந்தன. இதனால்தான் அல்-குர்ஆன் "கூறுவீராக! சத்தியம் வந்தது, அசத்தியம் அழிந்தது, நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும்." என்று பிரஸ்தாபிக்கிறது.

இந்தவகையில், இஸ்லாமிய அரசியல் நாகரிகமென்பது, நீதி, நியாயம், சமத்துவம், சகோதரத்துவம், சாந்தி, சமாதானம் ஆகியன உறுதிப்படுத்தப்பட மிகப்பெரும் பங்காற்றியது. வரலாற்றில், பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் படுகிறது. இது இவ்வாறிருக்க, இஸ்லாமிய வரலாற்றில் ஏற்பட்ட ஒரு சில அரசியல் கருத்து முரண்பாடுகளையே அதன் அரசியல் நாகரிக வரலாறாக விளக்கப்படுவதும், போதிக்கப்படுவதும் திட்டமிட்டு "சத்தியம்" மறைக்கப்படும் செய்கையாகும்.

இந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தால் அலி (ரழி), முஆவியா (ரழி) ஆகிய நபித்தோழர்களுக்கிடையே நடைபெற்ற "சத்தியப் போராட்டம்" இந்த ரீதியில் கையாளப்பட்டு, "முஸ்லிம் உம்மத்" என்பது அதிகாரப் போட்டிகள் நிறைந்ததாகக் காட்டுவதும்




உமையா, அப்பாஸிய ஆட்சியாளர்களில் சிலரது சுகபோக வாழ்க்கைகளை மட்டுமே விமர்சித்து இஸ்லாமிய தூய அரசியல் தலைவர்களான "அல்-குலபாவுர் ராஷிதூன்" எனப்படும் நேர்வழி சென்ற ஸஹாபாக்கள், இன்னும் பல ஆட்சிப் பீடமேறிய தூய தபசிகளான இறைநேசர்கள் போன்றோரது பண்புகள், இலட்சணங்கள் மறைக்கப்பட்டிருப்பதும் உண்மைக்குப் புறம்பான அநியாயமும், விசனிக்கத் தக்கதுமாகும். நபி நாயகம் (ஸல்) அவர்கள் தொடக்கம் தூய இஸ்லாமிய அரசியல் நடத்திய அனைவர்களும் இன்றைய சமூக அரசியல் அரங்கில் கோடிட்டுக்காட்டப்பட வேண்டியவர்களாவர். அவர்களது ஜனநாயக அரசியல் பண்புகள், சாணக்கியங்கள், சமூகத்துக்கான அர்ப்பணிப்புக்கள் போன்றன முஸ்லிம் உம்மத்தை வழி நடாத்த எத்தனிப்பவர்களுக்கு கட்டாயம் தெரிவிக்கப்பட வேண்டியவை.

எனவே தான், சமூகத் தலைமைத் துவத்திற்கும், பொறுப்புகளுக்கும் பாடுபடுவோர்களே! நீங்கள்தான் இஸ்லாமிய அரசியல் நாகரிகத்தை அதன் தூய வடிவில் விளங்கி, உங்களது பாதைகளை மீள்பார்வை செய்து கொள்ளுங்கள். நீங்கள் பயணிப்பது எதை நோக்கி? எதன் ஒளியில்? எவ்வுணர்வுடன்? என்பதை ஒரு கணம் திரும்பிப்பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைமுறைக் கோலங்களை உணர்தல்

*முஸ்லிம் குரல் வாசகர்களுக்கு இனிதன்பான ஸலாம்*

நடைமுறைக்கோலங்களை உணர்தல் எனும் கட்டுரையைச் சமர்ப்பிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். எமது சமூகம் நடைமுறைகளைக் கொண்டு செல்கின்ற விதம், எமது சட்டதிட்டங்களுக்குள் நுழைந்துள்ள புதிய அனுஷ்டானங்கள், காலமாற்றத்திற்கேற்பமாறுகின்ற போது நழுவிப்போகின்ற உண்மைகள் மாற்றுச் சமூகம் நம்மை நோக்கும் விதம்; நம் மாற்றங்களுக்குள் எமது வேர்களைத் தக்கவைக்க வேண்டுமென்ற உணர்வு. காலம் மாற்றினாலும் யதார்த்தத்தையும் பழமைகளையும் சமப்படுத்தல் நிலையிலே வாழவேண்டுமென்ற நிர்ப்பந்தப்பக்குவம், எமது சிந்தனைகளை உயர்வு கொள்ளல், எமது சுயப்பண்பாடு பழக்க வழங்கங்கள் நழுவாதிருத்தல் என்பன போன்ற சமூகக் கட்டுப் பாட்டுணர்வுகளின் ஒட்டு மொத்தமாக இக்கட்டுரையைத் தொடர்கிறேன்.

ஒவ்வொரு தனிமனிதனுடைய மன நிலையும் வித்தியாசமானது. இந்த உணர்தலைக் குறைந்தபட்சம் சிந்திக்கின்ற போது கூட எமது மாற்றங்களுக்குள் விடுகின்ற தவறுகளை மாற்றியமைக்கும் மனநிலையை உருவாக்கலாம்.

காலம் எம்முள் விளைவிக்கும் தடுமாற்றங்கள் மீது நிதானம் கொள்ள வேண்டியவர்களாக ஒவ்வொருவரும் இருக்கிறோம். நம்மால் ஜீரணிக்கமுடியாத நடைமுறைகளை தெரிந்து கொண்டே ஏற்றுக்கொள்ளும் மனநிலை எம்முள் விளைந்து விட்டது. தரிசாகிக் கிடந்த நமது மனங்களிலே, போட்டி, பொறாமை பொருளீட்டம் மீதான ஆசைகள். நவீன போக்குகள் என்பன வரையறையாமைக்குள் குடிகொண்டது என்றாலும் மிகையாகாது.

கால மாற்றங்களுக்கேற்ப நடைமுறைக்கோலங்களைச் செயற்படுத்தினாலும் எண்ணங்களின் உயர்வும் நாளைய உலகின் பரிதாப நிலைகளையும் இன்றைய நாட்களில் சிந்திக்காமல் இருக்கமுடியாது. தூய்மை எனும் மனோ நிலையிலே நடைமுறைக் கோலங்களை எமது சட்டதிட்டங்களுக்கேற்ப நெறிப்படுத்துவோமானால் எமக்கெழும் பிரச்சினைகள் சிலவற்றை தவிர்த்தும் கொள்ளலாம் .



இஸ்லாம் எமக்களித்துள்ள இதர கடமைகளைச் செவ்வனே செயற்படுத்துவோர் யார் இருக்கிறார்கள் என்று தேடுமளவிற்கு நமது சமூகம்மாறிக் கொண்டிருக்கிறது. பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள், நடைமுறைகள் புதிய பெயர்களுடன் (Fashion) என்ற வடிவமைப்பிலே எம்முள் நுழைந்திருப்பதை தவிர்க்கமுடியாவிட்டாலும் கூட மாற்றங்கள் மீதான தனித்துவத்தைத் தக்கவைத்துக் கொள்ளாமல் போவது நம்மில் எழும் இயலாமைகளையும் நமது சிந்தனைகளின் குறுகிய தளங்களையும் படம் பிடித்த வண்ணமாகிக் காட்டுகிறது.

எம்மில் வாழும் மற்ற சமூகங்களைப்பார்க்கின்றபோது எமது சிந்தனைகள், நடைமுறைக் கோலங்கள் யாவற்றையும் நவீனத்துவமான ஆளுமைக்குள் கட்டியெழுப்ப வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறோம். பூரணப் படுத்தப்படாமல் எம்மை நாம் இனங்காட்டுகின்ற நடத்தைக் கோலங்கள், எங்களை நாங்கள் புதிய பரிமாணத்திற்குள் மாற்றிக் கொள்ள வேண்டுமென்ற கடப்பாடுகளை உணர்த்தி நிற்கின்றதென்றாலும் மிகையாகாது.

எமது யதார்த்தங்களிலே காண்கின்ற தவறுகளும் பரிகாரங்களும் எம் எண்ணங்களைத் தொடாதவரை சிறப்பான சமூக வளர்ச்சியைக் கட்டியெழுப்ப முடியாது. அறிவியல் ரீதியான மட்டங்களில் கூட நாளாந்த செயற்பாடுகள் செவ்வைப் படுத்தப் படாமல் ஓடிக்கொண்டிருக்கும் போது சிந்தனைக் குறைவு மட்டங்களில் சிந்தனை நெறிப்படுத்துவது ஒரு கணம் எப்படி என்ற வினாவைக் கூட எழுப்புகிறது.

ஒவ்வொரு தனிமனிதனும் எந்தோர் விடயத்தின் பாலும் சிறப்பாகச் சிந்தித்து நடைமுறைக் கோலங்களை மாற்ற வேண்டிய தேவைப் பாடுகளை உணர வேண்டும். புரிந்து கொள்ளல், உண்மைச் செயற்பாடுகள், கடமைகளைத் தவற விடாதிருத்தல் என்பவற்றினூடாக நமது சமூக சிந்தனை உள்வாங்கல்கள் மற்றக்கலாச் சாரங்களின் தொற்றுதல்களிலிருந்து தவிர்ந்து கொள்ள வழி கோலும்.

சூழ்நிலைகள் எம்மைப்பக்குவப்படுத்தாதவரை நம்மால் மாற முடியாது. எங்கிருந்தாலும் எமதிஸ்லாமிய பூரணத்துவத்தை எம்மில் விதைப்போமானால் எந்த மாற்று கலாசாரமும் எம்மைத்தொற்றாது. நமது அறிவும் உணர்தலும் உச்சநிலையை அடைய ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.

முஹம்மட் இஸ்மாயீல்
சித்தி றபீக்கா
சம்மாந்துறை.

## தீய சொற்கள்

எமது வாயினால் வெளிப்பட்ட சொற்களை மீண்டும் எம்மால் அள்ளியெடுக்க முடியாது. தூர நோக்கு இன்மை காரணமாக தீய வார்த்தை ஒன்றை கூறிவிட்டு "நான் ஏன் அப்படிக் கூறினேன்" என்று கைசேதப்படுவோர் அநேகர். அதேவேளை "எனக்கு இருந்த ஆத்திரத்தில் முகத்திற்கு நேரே கூறிவிட்டேன்" என்று மகிழ்ச்சியடைபவர்களும் உண்டு. தீய சொற்களை நல்லவை என்று கூற முடியாது.

துக்கம் காரணமாக கண்ணீர் பெருக்கெடுக்கிறது. அந்தக் கண்ணீரால் மனச்சுமை குறைகிறது. அதுபோல் தான் தீய சொற்களும் என்றும் கூறலாம். ஏனெனில், மனதில் ஏற்படும் ஒருவித ஆவேஷத்தை அல்லது கோபத்தை ஒரு கெட்ட அல்லது தீய வார்த்தையின் மூலம் ஆற்றிக் கொள்பவர்களும் உண்டு. அப்படி அல்லாதவிடத்து, அந்தக் கோபம் அல்லது ஆவேஷம் காரணமாக பாரதூரமான தாக்குதல்களும், கொலைகளும் இடம்பெற ஏது உண்டு. அந்த வகையில் தீயவார்த்தையானது ஒரு நிவாரணமாகும்.

தீய எண்ணங்களிலிருந்தே, தீய சொற்கள் உருவாகின்றன. மனித மனங்களில் நல்ல எண்ணங்களும், தீய எண்ணங்களும் உருவாகின்றன. அவை சந்தர்ப்பத்திற்கு ஏற்ப வெளியாகும்போது நல்ல சொற்களாகவோ தீய சொற்களாகவோ வெளிப்படுகின்றன.

தீய எண்ணங்களிலிருந்தும், தீய சொற்களிலிருந்தும் நாம் மீள வேண்டுமானால் எமக்குத் தேவை உளக்கட்டுப்பாடாகும். தீய சொற்களைப் பாவிப்போரில் பெரும்பாலானோர் அநியாயத்திற்கு உட்பட்டோரும், வறியவர்களாகவுமே உள்ளனர். இவர்களின் உள்ளங்களில் எப்போதும் தீய எண்ணங்களே சுற்றிக் கொண்டுள்ளன. சொகுசு வாழ்க்கையை வாழ்பவர்களையும், பெரும் அதிகாரிகளையும் கண்டால் இவர்களுக்குள் பலி தீர்க்கும் எண்ணமும், பொறாமையும் ஏற்படுகின்றன.

மிருகங்களுக்குக் கூட கோபமும், ஆவேசமும் ஏற்படுகின்றது. ஆனால், அவற்றால் எம்மைப் போன்று தீய வார்த்தைகளை உதிர்க்க முடியாது. சப்தமிட மட்டுமே முடியும்.



## பட்ஜெட்டு போடுங்கள் 07

**இல்லறத்தில் நுழையும் நம்மவர்கள் எல்லோரும் அது பற்றிய எல்லா வகையான அறிவுகளுடனும் இருப்பதில்லை. இதனால் சிற்சில இடறல்கள் தலைகாட்டவே செய்யும். அவ்வாறானவற்றைக் களைந்து நல்லறமாக மாற்றுவதற்கும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து இணைபிரியாத் தம்பதிகளாகத் திகழவதற்கும் ஆலோசனைகளை பன்னூல் ஆசிரியர் 'கையேடு கலைஞர்' டாக்டர் அப்துல் பாரி 'புதுமணத் தம்பதிகள் கையேடு' என்ற தலைப்பிலான நூலில் முன்வைத்துள்ளார். அவற்றிலிருந்து சில பகுதிகள் இங்கு இடம்பெறுகின்றன. நமது மக்களும் இவ்வாறான இடறல்களை சந்திக்கும் போது அவற்றிலிருந்து விடுதலை பெறுவதற்கு இத்தொடர் வழிகாட்டும் என்று நம்புகின்றோம்.**

எதிலும் குற்றம் மட்டுமே பார்க்காதீர்கள். குற்றம் பார்க்கின் சுற்றமில்லை. நல்லதைப் பார்க்கப் பழகுங்கள். நல்லதைப் பார்த்தால், நல்லதே நடக்கும்.

நல்ல பண்டமா? எல்லோருக்கும் சமமாகப் பகிர்ந்து கொடுங்கள். யாருக்கும் வஞ்சம் வேண்டாம்.

### தொலைக்காட்சி பார்க்கக் கூடாது!

வீட்டில் வேலை இருக்கும் போது பெண்கள் தொலைக்காட்சி பார்க்க உட்கார்ந்து விடக் கூடாது. மாமன் – மாமி, கணவனுக்குச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்து விட்டுப் பிறகு தொலைக்காட்சி பார்க்கலாம்.

வீட்டுக்கு வரும் விருந்தாளிகளைக் கூடக் கவனிக்காமல் சில பெண்கள் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருப்பார்கள். இது பெருந்தவறு. வந்தவர்களை வரவேற்று உபசரிக்க வேண்டும். தொலைக்காட்சியை நிறுத்திவிட்டு அவர்களுடன் உட்கார்ந்து பேச வேண்டும்.

### அன்பு செலுத்துங்கள்!

ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்துங்கள். அதிகாரம் வேண்டாம். அதிகாரம் ஒரு போதும் ஜெயிக்காது.

கோபம் வரும் போது விலகிப் போய் விடுங்கள். அது பால் பொங்கும் போது நெருப்பை இழுப்பது போலக் கோபத்தைக் குறைக்கும்.

புறம் பேசக் கூடாது. எதையும் நேருக்கு நேர் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும். ஊரார் பேச்சைக் கேட்டு நடக்கக் கூடாது. ஊரார். எரிகிற தீயை அணைக்க மாட்டார்கள்; எரிகிற தீயில் எண்ணெய் வார்ப்பார்கள். அது 'தகதக' என்று எரிவதை வேடிக்கை பார்ப்பார்கள். அந்த நெருப்பில் ஆனந்தமாகக் குளிர் காய்கிறவர்களும் இருக்கிறார்கள்.



வீட்டு வேலைக்காரர்களிடம் எச்சரிக்கையாக இருங்கள். பல குடும்பங்களில் பிரச்சினை தோன்றுவதும், மனக் கசப்பு ஏற்படுவதும் வேலைக்காரர்களால்தான். அவர்களிடம் குடும்ப விஷயம் பேசவே கூடாது.

நல்ல நகைச்சுவை உணர்வு வேண்டும். எப்போதும் சிரித்த முகத்துடன் இருங்கள். எதையும் வேடிக்கையாக எடுத்துக் கொண்டால், எந்தப் பிரச்சினையும் ஏற்படாது.

### பட்ஜெட் போடுங்கள்!

உங்கள் கனவுகளை எழுதிப் பாருங்கள். அப்போதுதான் கனவுகளை நனவாக்க வழி தெரியும்.

குடும்ப பட்ஜெட்டு போடுங்கள். வரவுக்குள் செலவு செய்யுங்கள். கடன் வாங்காதீர்கள். கடன் என்பது உங்கள் முன்னேற்றத்துக்குப் பெரிய முட்டுக்கட்டை.

'உன் வீட்டுக்குப் போய்ப் பணம் வாங்கி வா' என்று மனைவியை அனுப்பாதீர்கள். இப்போது அவள் உங்கள் வீட்டுப் பெண். உங்களால் சம்பாதிக்க முடியாதா? ஆண் பிள்ளையாக நடந்து கொள்ளுங்கள்.

மாதாந்திர பட்ஜெட்டு போடுவது போல, ஐந்தாண்டு பட்ஜெட்டு ஒன்றும் போடுங்கள். உங்கள் குடும்பம் பொருளாதாரத்தில் வளர்ந்து செழிக்க இது வழி செய்யும்.

சேமிக்கப் பழகுங்கள். சேமிப்புதான் உங்களைப் பணக்காரர் ஆக்கும்.

எல்லாவற்றுக்கும் கணக்கு எழுதுங்கள். குடும்ப ஒற்றுமைக்குக் கணக்கு அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சாறு

எழுதுவது: லைலா அஷ்ராவி

## படைப்பாக்கத்திறனும், நீதிக்கான போராட்டத்தில் இன்றியமையாத ஒன்று

-கலாநிதி சந்த்ரா முஸாபர்

கலாநிதி சந்த்ரா முஸாபர் மலேசியாவின் பிரபல்யம் வாய்ந்த முக்கிய புத்தி ஜீவிகளில் ஒருவர். கூடவே மனித உரிமைகள் செயற்பாட்டாளர். இலங்கை மத்திய வங்கி வெளியீடாக வந்த "பொருளியல் நோக்கு" சஞ்சிகையில் (இப்போதும் இச்சஞ்சிகை வெளிவருகிறதா என்பது தெரியாது!) இவரது பல கட்டுரைகள் பிரசுரமாயிருக்கின்றன. அக்கட்டுரைகளும், அவரது முன்னைய செயற்பாடுகளும் அவரைத் தீவிர இடது சாரியாகவே வெளிக்காண்பித்திருந்தன. தற்போது, பல இடதுசாரிகளைப் போலவே, சிந்தனா மாற்றம் பெற்று, "அடிப்படைகளுக்கு" நகர்ந்திருக்கும் இவர், "International Movement for a just World" என்ற அமைப்பை நிறுவி, அதன் தலைவராகவும் செயற்பட்டு வருகின்றார். இவ்வமைப்பின் சில வெளியீடுகள், வெள்ளவத்தை CIS ல் விற்பனைக்காக இருந்தன. தற்போதும் இருக்கலாம். பாரிசவாத நோயினால் பீடிக்கப்பட்ட நிலையிலிருக்கும் இவர், தனது "வேர்களைத்" தேடி இந்திய கேரள மாநிலத்திற்கு விஜயம் செய்தபோது, சஞ்சிகையொன்றுக்கு அளித்த பேட்டியின் ஆரம்பப் பகுதிகள் இவ்விதழிலும், எஞ்சியவை வரும் இதழ்களிலும் இன்ஷா அல்லாஹ்...

பூகோள மயமாக்கம், பொதுவாகவே, ஓர் ஆக்கிரமிப்பு முறைமையாகவே பார்க்கப்படுகிறது. ஆனாலும் சிலர், அது முன்வைக்கும், தொழில்நுட்ப விருத்திகள், மனித இன நலன்களுக்காகப் பயன்படுத்த முடியுமானவை என வாதிடுகின்றனர். இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? "பூகோளமயம்", மானுட எதிர்க்குணாம்சங்களைக் கொண்டதும், ஆக்கிரமிப்புத் தன்மை கொண்டதுமான ஒன்றா... அல்லது சில நல்ல அளவீடுகளையும் கொண்ட ஒன்றா!?

பதில்:

பூகோளமயமாக்கம், நல்லவற்றைவிட தீங்கானவற்றையே அதிகம் தந்துள்ளது. அதன் நவீன தொழில்நுட்ப கண்டுபிடிப்புக்கள் - உதாரணத்திற்கு இன்டர்நெட் - கல்வி, மருத்துவத்துறைசார் வளர்ச்சிகளுக்கு பயனளித்திருக்கின்றனதான். அத்துடன் அது தொடர்புத்துறை, போக்குவரத்து ரீதியான சிரமங்களையும் குறைத்தும் உள்ளது. ஆனாலும் இவற்றை விட பிரதானமானது அல்லது ஒவ்வொருவரும் கேள்வியெழுப்ப வேண்டிய முக்கிய விடயம் என்னவென்றால், இந்த பூகோளமயச் சிந்தைக்கான அதன் உருவாக்கத்திற்கான காரணம் என்ன என்பதுதான்! உண்மையில் பூகோளமயமாக்கலின் நோக்கங்கள் என்னவென்றால், புதிய சந்தைகளைத் தேடுவது, அதீத லாபங்களுக்கான சந்தர்ப்பங்களைக் கண்டு கொள்வது, அதற்கான நிறுவனங்களை அமைத்துக் கொள்வது. அதாவது சுருக்கமாகச் சொன்னால் பாரிய இலாபங்களை ஈட்டிக் கொள்வதே பூகோளமயமாக்கலின் நோக்கும், போக்கும்! மாறாக சொல்லப்படுவதைப் போல, சௌபாக்கியம் மிக்க உலகை நோக்கிய நகர்வு அல்ல! அடுத்து இன்னுமொரு முக்கியமான விடயத்தையும் நோக்க வேண்டும். இந்த பூகோளமயமாக்கலை நோக்கித் தள்ளும் ஆதிக்க சக்தி(கள்) வோஷிங்டனும், தொடர்புற்றவையாக இருப்பதுதான் அது. அவர்களின், பூகோளப் பரப்பினைத் தங்கள் கட்டுக்குள் கொண்டுவருவதும், அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதும் கூட இந்த பூகோளமயமாக்கலின் நோக்கங்கள்தான். ஆட்சியதிகாரம் (அல்லது இறையாண்மை) நலன்களுக்கான சந்தைகள் என எல்லாவற்றையுமே அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர விளைகிறார்கள்.

இன்னொன்று, அதாவது இந்த பூகோளமயக்கருத்தாக்கம் என்பது ஒரு புதிதான விடயமல்ல. காலனித்துவக் காலங்களிலும் இருந்த ஒன்றுதான். இஸ்லாமிய வரலாற்றிலும் கூட, அறிவைத் தேடியும், வணிக நோக்கங்களுக்காகவும் தேசாந்திரங்களைத் தாண்டிச் சென்ற மனிதர்களைச் காண்பீர்கள். ஆனால் அப்போதெல்லாம் அவர்களிடம் ஏனைய மனிதர்களைத் தங்கள் கட்டுக்குள் கொண்டுவரும் ஆதிக்க மனோபாவமோ, அல்லது புலமைத்துவச் சொத்துக்களை உரிமையாக்கும் எண்ணமோ இருக்கவில்லை. ஆனால் இப்போது என்ன நடக்கிறது? பூகோள மயமாக்கம் ஏனைய அனைத்துக் கலாசாரங்களையும் கொல்கிறது. கலாசாரங்களைச் சீரழித்து இல்லாமலாக்கும் திட்டங்கள் திணிக்கப்படுகின்றன. அடிப்படைத் தேவைகளான உணவு, உறையுள் என்பன அருந்தலாக்கப்பட்ட அக்கறையற்ற விடயங்களாகியிருக்கின்றன!

"பூகோளமயமாக்கலின் மனித உரிமை மீறல்கள்" பாரிய அளவில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் அவற்றை "பெரும் ஊடகங்கள்' பிரதான ஊடகங்கள் வெளிக்கொணர்வதில்லை. அப்படிக் கொண்டுவந்தாலும் அவற்றை மூடி மறைக்கப்பார்க்கின்றனவே...

ஊடகம் எப்போதும் உண்மைக்கு அர்ப்பணமானதாகவே இருக்க வேண்டும். ஆனால் பூகோளமயமாக்கலுடன் தொடர்புற்ற விடயங்களுடன் நோக்கும்போது, ஊடகம் ஆக்கபூர்வமானதாக இல்லை. மாறாக மிகப் பயங்கரமாயிருக்கிறது. பாரிய இடப்பெயர்வுகள், சூறையாடல்கள் என்பன பூகோளமயம் செய்கிற மனித உரிமை மீறல்களால் உருவாகிய சமூகப் பிரச்சினைகளாகிவிட்டன. இடப்பெயர்வு என்பது மேற்கத்தேய சமூகத்திலும் நடைபெறுகிற சாதாரண விடயமாயிற்று! வேலையின்மையும் பூகோளமயமாக்கல் உருவாக்கிவிட்டது.! (மேற்கிலும் கூட!) நாம் பூகோளமயம் தந்த தொழில்நுட்ப அபிவிருத்தி பற்றி கதைக்கும் போது இன்னொன்றையும் பார்க்க வேண்டும். அதாவது, தொழில்நுட்பவாக்கம் பலதுறைகளில் மனிதர்களை இயந்திரங்களால் பிரதியீடு செய்கிறது. இவ்விடயங்கள் எல்லாம் கூட ஊடகங்களில் பேசப்பட வேண்டும். பூகோளமயமாக்கல் பிரச்சினைகளைப் பேசுகிற, விவாதிக்கிற பல பத்திரிகைகள், சஞ்சிகைகள் மேற்கில் இருக்கின்றன. ஆனால் இது விடயத்தில் "கிழக்கு" ஊடகங்கள் அதன் பங்கைச் செய்யவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்

தொடரும்...

## "காழி" - நீதவான்களின் பண்புகளும் முஸ்லிம், தேசத்தின் "நியாய சபை"யும் சிலகுறிப்புகள்

முஸ்லிம் சமூகத்தின் ஷரிஆ கட்டமைப்பில் இயங்கும் காழிகள் பற்றி சில குறிப்புகளை பகிர்ந்து கொள்ள விழைகின்றேன்.

இஸ்லாத்திலே 'காழிகள்' அல்லது காழி நீதவான்கள் எனப்படுவோருக்கு 'ஷரிஆ' பல நிபந்தனைகளை விதிக்கின்றது. முஸ்லிம்களிடையே ஏற்படும், விவகாரங்களைக் கவனமாக பரிசீலித்து, அவர்கள் மிக கண்டிப்புடனும், பொறுப்புடனும் தீர்ப்பளிக்க வேண்டும். இப்னு தைமியா (ரஹ்) அவர்களின் கூற்றுப்படி காழிகள் தீன்பற்றுடையவர்களாகவும், தீர்ப்பின் வலிமையை உணர்ந்தவர்களாகவும் நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் தீமைக்கோ, பணத்திற்கோ அடிபணியக் கூடாது.

நபி (ஸல்) அவர்கள் தம் ஆட்சிக்காலத்தில் இறையச்சத்திலும், உயர் குணத்திலும், மக்களின் சிறந்த அபிமானத்தைப் பெற்ற நம்பிக்கையாளர்களையே மாகாணங்களுக்கு நீதிபதிகளாக நியமித்து அனுப்பினார்கள். ஏனெனில் இஸ்லாமிய கிலாபத்தில் சட்டங்களை குர்ஆன், சுன்னாவின் அடிப்படையில் அமுல் நடாத்தும் தகுதியை இத்தகைய காழிகள் பெற்றிருக்கின்றார்கள் என்பது தெளிவு.

நீதமான தீர்ப்பு சொல்லும் ஒருவரை நியமிப்பது கட்டாயக் கடமையாகும்.

"தமது உரிமைகளை தக்கவைத்துக்கொள்ள ஒரு காழியை நியமிப்பது முஸ்லிம்களின் தலையாய கடமையாகும்" என இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். இதனால்தான் நபியவர்கள், இரண்டுக்கு மேற்பட்டோர் பயணம் செய்யும் போது, தமக்குள் சிறந்தவரை அமீராக (தலைவராக) ஏற்படுத்திக் கொள்ளும்படி ஏவினார்கள். அவர் நல்லனவற்றில் தீர்ப்புச் சொல்லும் அதிகாரத்தை இதன் மூலம் பெறுகின்றார்.

எனவே முஸ்லிம் தேசத்தை ஆள்கின்ற ஆட்சித் தலைவர், மக்களின் உரிமைகளை ஸ்தாபிக்கவும், நீதி நிலை நிறுத்தப்படவுமான முற்பணியாக ஒரு காழியை நியமிக்க வேண்டும். இத்தேர்வு அரசியல் செல்வாக்கு, பணபல, ஆள்புல செல்வாக்கின் அடிப்படையின்றி, அறிவு, பணிவு, ஷரிஆவில் ஆழ்ந்த ஞானம் என்ற அடிப்படையில் நிகழ வேண்டும்.

இஸ்லாமிய அரசியல் சாசனங்களை கற்றவராகவும், குற்றவியல் சட்டங்களில் நிபுணராகவும், சம கால நவீன பிரச்சினைகளுக்கு, குர்ஆன், சுன்னா அடிப்படையில் தீர்ப்பு வழங்குபவராகவும், முஸ்லிம் தேசத்தின் காழி திகழ்வார்.

இத்தெரிவு ஒரு சமூகக்கட்டமைப்பை அவாவி, அல்லாஹ்வின் சட்டங்களை நிலைநிறுத்தவுமான தெரிவாக இருக்கவேண்டும்.

இன்றைய முஸ்லிம் காழிகள் பெரும்பாலும், மேற்படி தகுதியின்படி தெரிவு செய்யப்படுவதை விடுத்து அரசியல் செல்வாக்கு, பணபலம் ஆகிய இழி நிலையிலிருந்தே வருகின்றனர் இலஞ்சம் பெற்றுக்கொண்டு விவாகரத்து வழக்குகளில் ஒருபக்கச்சார்பான தீர்ப்புக்கள் வழங்குவதும், சொந்த விருப்பு, வெறுப்பின்படி தீர்ப்புகள் எழுதுவதும் இதற்கோர் சான்றாகும்.

'ஷரிஆ' வைப்பற்றி எதுவுமே தெரியாத இஸ்லாத்தில் பிரத்தியேக சட்டங்கள் என்னென்ன அமுலில் உள்ளது என்ற நடைமுறைகள் தெரியாத காழிமாரும் நம்மிடையே உள்ளனர். இலங்கை சிவில் சட்டங்களுடன், முஸ்லிம்களுக்கு சார்பானதும், பாதகமானதுமான அம்சங்கள் எவை என்ற அறிவுகூட காழிமார்களிடத்தில் இல்லை. நவீன இஸ்லாமிய சிந்தனையாளர்களில் ஒருவரான அஷ்ஷெய்க் ஸாலிஹ் அல்பௌஸான் பின் அப்துல்லாஹ் ஆலபௌஸான் அவர்கள் முஸ்லிம் காழிகளுக்கு இருக்கவேண்டிய சில முக்கிய கூறுகளை இனங்காட்டுகின்றார்கள்.

- ஓட்டமாவடி அறபாத் -

★ காழி புத்திசுவாதீனம் உள்ளவனாகவும், பிறருக்கு அடிமையல்லாத சுதந்திரவாதியாகவும், சுயமாக தீர்ப்புச் சொல்பவனாகவும் இருக்க வேண்டும்.

★ நினைவாற்றல் உடையவராக இருத்தல்.

★ முஸ்லிம் தேசத்தின் காழி முஸ்லிமாகவே இருக்கவேண்டும். இது இஸ்லாத்தின் கண்டிப்பான நிபந்தனைகளில் ஒன்றாகும்.

★ "குர்ஆனின் கூற்றுப்படி ஒரு தீயவன் செய்தியொன்றைச் சொன்னால் அதைத் தீர விசாரித்து தெளிவு பெற வேண்டும்". என்பதற்கொப்ப காழியானவர், ஒருபக்கவாதங்களை மட்டும் செவியுறாமல் இருதரப் புவாதங்களை அவதானமாக செவி யுற்று தீர்ப்பளிக்க வேண்டும்.

தொடரும்....

## திலங்க - எஸ்.பி. மோதல்



பாதாள உலகத்துடன் தொடர்பு வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள டெலிகொம் தலைவரும் கிரிக்கட்சபைத் தலைவருமான திலங்க சுமதிபாலவைக் கொலை செய்வதற்காக அமைச்சர் S.B திசாநாயக்க எடுத்த திட்டம் ஒன்றை இரகசியப் பொலிசார் கண்டு பிடித்துள்ளனர். திலங்க சுமதிபால பணங்கொடுத்து நிறைவேற்றிய

பெத்தகான சஞ்சீவ, சடன பத்திரிகை ஆசிரியர் ரோஹணகுமார என்போரின் கொலைகளின் பின்னணியிலும்

சன்டேலீடர் ஆசிரியர் வலந்த விக்கிரமசிங்கவின் வீட்டுக்குத் துப்பாக்கிச்சூடு போட்டமையிலும்

ரூகாந்த, சந்திரலேக தம்பதியினரைத் தாக்கியதிலும் அனோஜா, வீரசிங்காவின் வீட்டுக்குத் தீவைத்தமையிலும் ரவி கருணாநாயக்காவின் வீட்டுக்கு மனிதத் தலை அனுப்பியமையிலும்

பின்னணியில் S.B.D. உள்ளதால், திலங்கவினது செயல்பாட்டில் இவை வெளிவரும் என எண்ணிய S.B.D அதற்கு முன்னர் திலங்கவைக் கொலை செய்ய ஏற்பாடு செய்துள்ளார். இவை யாவும் வெளிவந்த பின்னர் திலங்கவும், S.B யும் தமது வாழ்க்கைக்காக ஒருவரையொருவர் தாக்கிக் கொலை செய்து கொள்ளும் நிலை ஏற்பட்டது.

S.B திசாநாயக்க, திடீர் என வெளிநாடு செல்ல முன்னர், சனத் குணதிலகவுடன் பொரண, வனாத்தமுல்லையில் வசிக்கும், பாதாள உலக ஒருவருடன், திலங்கவைக் கொலை செய்வதுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அதற்காகப் பாதாள உலக உறுப்பினரிடம் ரூபா 75 இலட்சம் செலுத்தியுள்ளார்.

திலங்க நீதிமன்றின்முன் ஆஜரான பின்னர், திலங்கவும் S.B யும் ஒன்றிணைந்து செய்த பல குற்றச் செயல்கள் பற்றிய விவரங்கள் எதிர்வரும் நாட்களில் வெளிவர முடியும் என இரகசியப் பொலிஸ் ஒருவர் லக்மினைக்குத் தெரிவித்துள்ளார்.

ஞாயிறு லக்மின
2003.12.07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராயச்சித்தம் தேடும் அரச தனியார் ஊடகங்கள்

இன்றைக்கு 18 வருடங்களாக நாங்கள் செய்து வந்த பாவங்களை எங்கும் நிறைந்த பரம்பொருளான ஏக இறைவனே மன்னிப்பாயாக. அதற்காக வேண்டி நாங்கள் பாவமன்னிப்பு எனும் காரியத்தில் இறங்கியுள்ளோம். நாங்கள் செய்தது ஒன்றா இரண்டா எல்லாவற்றையும் சொல்லி மாழாது என்பதற்காக ஒன்றிரண்டைச் சொல்லி பிராயச்சித்தம் தேடுகிறோம்.


அன்று வீதியோரம் காலணி தைத்து தன் சீவியத்தை ஓட்டிக்கொண்டிருந்த அப்பாவி ஒருவரை சுட்டபொழுது நாங்கள் எழுதிய, சொன்ன செய்திகள் பிராந்திய பொறுப்பாளர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரிடம் இரண்டு கைக்குண்டுகளும் ஒருதொடர்பு சாதனக் கருவியும் கைப்பற்றப்பட்டது. இவரின் உதவியாளர் சிறிய காயத்துடன் தப்பிச் சென்று விட்டார் என்று செய்தி சொன்னோம் எழுதினோம்.

அன்றாடம் வெற்றிலையைக் கைப்பெட்டியில் வைத்து மார்க்கட்டில் வருவோர் போவோரிடம் அன்றாடம் வாங்கல்லயா? ஐயா "வெற்றிலை வாங்கல்லையா" என்று இறைஞ்சி தன் வயிற்றுக்காக கஞ்சியாவது குடிக்கப் போராடிய ஒரு கைம்பெண் அவள் சுடப்பட்ட பொழுது மகளிர் அணி நிர்வாகியான பெண்புலி மாறுவேடம் தரித்து நின்ற பொழுது சுடப்பட்டார் என்றும் அவர் சுட்டுக்கொல்லப்பட்ட பொழுது வெற்றிலைப் பெட்டியில் 9mm கைத்துப்பாக்கியும், ஒரு கைக்குண்டும், முக்கிய கடிதங்களும் அதனுடன் நிதி வழங்கும் நபர்களின் பெயர்ப்பட்டியலும் கைப்பற்றப்பட்டதாக செய்தி சொன்னோம் எழுதினோம்.

ஏறாவூரைச் சேர்ந்த ஒரு புத்திபேதலித்த அப்பாவித் தமிழர் ஒருவர் தன்பாட்டில் சென்றியைக் கடந்த போது சுட்டுக்கொல்லப்பட்டார். எழுதிய செய்தி என்னவென்று தெரியுமா? புலனாய்வுத்துறைத் தலைவர் பொட்டு அம்மானின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் செயல்படும் ஒரு முக்கிய நபர் ஆயுதங்களுடன் சுடப்பட்டார் என்று சொன்னோம் எழுதினோம்.

இன்று அதற்காக வேண்டி பிராயச்சித்தம் தேடும் படலத்தில் இறங்கியுள்ளோம். அதன்படியாக நாங்கள் செய்திகளை உங்களுக்கு உண்மையாக எழுதுவதும் சொல்லுவதும் என்ற தீர்மானத்தின்படி அண்மையில் நடந்த சம்பவங்களை நீதி வழி நின்று நெறி தவறாமல் சொல்லியும் எழுதியும் வருகின்றோம். அதற்குச்சான்றாக இரண்டு அப்பாவிகள் சுட்டுக்கொல்லப்பட்ட பொழுது நாங்கள் மிகவும் தீவிரமாக எமது செய்தி ஆய்வாளர்கள் மூலமாக மிகவும் நுணுக்கமாக

ஆராய்ந்து பெற்ற செய்திகளை மக்களுக்கு தெரியப்படுத்தினோம். இதுதான் அந்தச் செய்தி 'இந்தக் கொலை இனந்தெரியாத நபர்களின் செயலென்றும்' இது இனமுறுகலை ஏற்படுத்தி நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பும் சதிநாச வேலை என்றும், சில அரசியல் வாதிகளின் செயலென்றும் பிந்திக் கிடைத்த செய்திகளின் படி கொல்லப்பட்ட நபர்களின் கொடுக்கல் வாங்கல் அல்லது உள்வீட்டுப் பிரச்சினைகளால் இந்த நபர்களின் எதிரிகள் இதைச் செய்திருக்கலாம் என்றும், இல்லாத பட்சத்தில் இந்த நபர்கள் இருவரும் தங்களுக்குள் உள்ளபணக்கஷ்டம்



காரணமாக தற்கொலையும் செய்து கொண்டிருக்கலாம். இதை ஆற அமர யோசித்து ஒரு முடிவுக்கு மக்கள் வர வேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பும் மூன்றாம் சக்திகளின் சதிவலையில் சிக்கி சமாதானப் போச்சுவார்த்தையைக் குழப்பாமல் அமைதியாக இருங்கள் என்று சொல்லியும் எழுதியும் உள்ளோம்.

காணாமல் போன சாய்ந்தமருது இளைஞர்களின் ஆத்ம சாந்திக்காக வேண்டி எமது செய்தியாளர்களும் எமது செய்தி ஆய்வாளர்களும் இரவு பகலாய் ஊரூராய்ச் சேகரித்த செய்திகளை உடனுக்குடன் தெரியப்படுத்தினோம். காணாமல்போன இரண்டு நபர்களும் கடத்தப்படவில்லை என்று சொன்னோம். பின் அவர்கள் ஆயுத வியாபாரம் செய்பவர்கள் என்று சொன்னோம் பின் இது சம்பந்தமாக இரண்டு முஸ்லிம்கள் கைது என்ற செய்தியை தொடர்ந்து நான்கு நாட்களாக எழுதியும் சொல்லியும் வந்தோம். பின் இது ஒரு சமாதானத்தைக் குழப்பும் சக்திகளின் வேலை இவர்கள் இருவரும் எங்கோ தலைமறைவாக உள்ளார்கள் என்றோம். பின் இவர்கள் கொழும்பில் இயங்கும் பாதாள உலகக் கோஷ்டியுடன் தொடர்புடையவர்கள் என்று சொன்னோம். இதைவிட எம்மால் என்ன பிராயச்சித்தம் தேடமுடியும். முடியுமானால் என்னென்ன செய்ய வேண்டும் என்று எமது நிறுவனங்களுக்கு எழுதினால் நாங்கள் உடன் செய்யத்தயாராக இருக்கிறோம். எல்லோரையும் இறைவன் மன்னிப்பானாக.

கர்னைன் அக்கரைப்பற்று

# புத்தளத்தில் 186 பாடசாலைகளில் 843 ஆசிரியர் வெற்றிடங்கள்!

புத்தளம் கல்வி வலயத்திலுள்ள 186 பாடசாலைகளில் 843 ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதில் தமிழ் மொழி ஆசிரியர்களின் தொகை 403 ஆகும்.

மேற்படி பாடசாலைகளுள் ஆங்கில மொழி ஆசிரியர்கள் அற்ற பாடசாலைகள் 59 ஆகும். கணித ஆசிரியர்களற்ற பாடசாலைகள் 31 ஆகும். ஆரம்பப் பிரிவிற்கு 160 ஆசிரியர்கள் இல்லை. விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய பாடங்களுக்குப் பட்டதாரி ஆசிரியர்களின் குறைபாடு 09 ஆகும். புதிய பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிப்பதன் மூலம் ஆசிரியர் பற்றாக்குறை சிறிதளவேனும் நிவர்த்தியாகுமென்று வலயக் கல்விப் பணிப்பாளர் டீ. சலமோன் தெரிவித்தார்.

# சிரமதானம்

புத்தளம் பகுதியில் கரம்பையிலிருந்து கொத்தான் தீவு செல்லும் "மணியக்காரன்" பவுன் வீதி புனரமைப்பு வேலைகள் கற்பிட்டி மற்றும் முந்தல் பிரதேச செயலாளர்களின் ஏற்பாட்டில் கடந்த 8 தினங்களாக தொடர்ச்சியாக இடம்பெற்றது.

புழுதிவயல் கிராம சேவையாளருக்கு உட்பட்ட பகுதிகளில் இருந்து 50க்கும் மேற்பட்ட நலன் விரும்பிகள் மேற்படி சிரமதான நிகழ்வில் கலந்து பணிகளில் ஈடுபட்டனர். முந்தல் ப.நோ.கூ. சங்கத்தின் புழுதிவயல் கிளை சிறமாதான பணிகளில் ஈடுபட்டவர்களுக்கு உணவு வழங்கியுதவியது.

இதன் மூலம் இப்பகுதி மக்களின் போக்குவரத்து கஷ்டங்கள் ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டதாக கிராமமக்கள் மேற்படி சிரமதானத்தில் ஈடுபட்ட அனைத்து தரப்பினருக்கும் நன்றி தெரிவிக்கின்றனர்.

எஸ்.அப்துல் ஜாஹிர்
பாலாவி.

# இந்த வரவு செலவுத் திட்டத்தில் எவ்வித நிவாரணமும் கிடைக்கவில்லை!

**-தொழிற்சங்கங்கள் குற்றச்சாட்டு- -சம்பள உயர்வும் போதுமானதாக இல்லை!-**

அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் எதிர்பார்த்த அளவிற்கு நாட்டு மக்களுக்கு நிவாரணங்களைக் கொண்டு வரவில்லை. மாறாக அதிகமான சுமைகளை மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் சுமத்தியுள்ளன என இலங்கை வர்த்தக, தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த மூத்த தொழிற்சங்கவாதி பாலதம்பு தெரிவித்துள்ளார்.

சகல நிலைமைகளையும் பற்றி யோசித்ததன் பின்பே நாம் இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி விமர்சிக்க வேண்டும். ஏழை நடுத்தர மக்களால் வாழமுடியாத அளவிற்குப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. அதற்குக் காரணம் இந்த வரவு செலவுத் திட்டம் மட்டுமல்ல, ஆனால் இந்த வரவு செலவுத் திட்டத்தினால் அதற்குக் குறைந்தளவிலான நிவாரணமும் கிடைக்கவில்லை என்பதே எமது கருத்தாகும். தொழிலாளர், அரச ஊழியர்களுக்குப் போதிய சம்பளம் வழங்கப்படவில்லை. இவற்றுக்கு நீதி வேண்டிப் போராடப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# ஆதி நபி ஆதம் [அலை] அவர்கள் தோற்றம் இப்பூவுலகில் அல்ல!

## ஆரம்ப மனிதப் பெருக்கம் கண்டது லெமூரியாக் கண்டமுமல்ல!!

04

"இன்று உலகில் பல்வேறு இனங்கள் காணப்படுகின்றன. அவை அனைத்தும் ஆரம்பத்தில் தோன்றிய ஒரே இனத்தின் கிளையிலிருந்து பரவின. அந்த ஓரினமும் ஒரே தந்தை, தாயிலிருந்தே தோன்றியதாகும்" (நன்றி : திருக்குர்ஆன் அத் 17 முதல் 144 வரை- மௌலானா அபுல் அஃலா மௌதூதி.)

"உலகில் வாழும் அனைத்து மனிதர் களும் ஒரே தாய் தந்தையின் வழித்தோன்றல்களே" எனவும், "உலகில் வாழும் எல்லா மனிதர்களின் மரப ணுக்களும் (டி.என்.ஏ) ஆப்ரிக்காவில் அறுபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரேயொரு மூதாதையரின் மரபணுவுடன் ஒத்துப்போகின்றன" எனவும் பரிணாம வளர்ச்சி உயிரியல் துறை நிபுணர் டாக்டர் ஸ்பென்சர் வெல்ஸ் தெரிவிப்பதாக "திடெலி கிராப்" நாளிதழ் பிரசுரித்துள்ளது. (நன்றி ஒற்றுமை - தொகுப்பு 2 இதழ் 19 ஜனவரி 16 - 31 2003)

### மனித குலத்தின் இன்னொரு பூர்வீகப்பரம்பரை

"மேலும் (நபி நூஹ்) அவருடைய சந்ததியைத்தான் (பின்னர்) நாம் மிஞ்சியுள்ளோராய் ஆக்கினோம்." (குர்ஆன் 37 : 77)

"பிறகு (நபி நூஹ் அவர்களைப் பின் பற்றியவர்களைத் தவிர) மற்றவர்களை நாம் மூழ்கடித்தோம்." (குர்ஆன் 37 : 82)

"(பிரளயம் நின்றதும்) நூஹ் (அலை) கப்பலைவிட்டு வெளியேறினார்கள். அவர்குடும்பத்தினரைத்தவிர அவருடன் சென்ற ஆண், பெண்கள் மரித்துவிட்டனர்." என்று அப்பாஸ் (ரழி) அவர்கள் கூறுகின்றனர். (நன்றி : குர்ஆன் தர்ஜமா)

> "முதல் மனிதரும், முதல் நபியுமான ஆதம் (அலை) அவர்களோ, மனித உற்பத்திப் பெருக்கத்தின் ஆரம்பமோ லெமூரியாக்கண்டத்தில் நிகழவில்லை என்பதும், மனிதகுலத்தின் தந்தையான நபி ஆதம் (அலை) அவர்களின் தோற்ற ஆரம்பம் இம்மையில் நிகழவில்லை என்பதும், மிகத் தெளிவான, உறுதியான வரலாறாகும்."

ஸயீதிப்னு முஸையிப் கூறுகின்றார்கள் : "நபி நூஹ் (அலை) அவர்களுக்கு ஷாம், ஹாம் யாபிது என்று புதல்வர்கள் மூவர் இருந்தனர். மனித குலம் முழுவதும் இம்மூவரில் இருந்துதான் பெருகிற்று. இவர்கள் பரம்பரையினரை பின்வருமாறு வகைப்படுத்திக் கொள்ளலாம்."

01. ஷாமின் வழித்தோன்றலே அரபுகள், பார்ஸீகள், ரோமனியர்கள், யஹூதிகள், நஸாராக்கள் ஆகும்.
02. ஹாமின் வழித்தோன்றலே ஸூதானியர், இந்தியர், நூபியர், ஸன்ஜியர், ஹபஷியர், கிப்தியர், பரபரி ஆகும்.
03. யாபித்தின் வழித்தோன்றலே துருக்கியர், ஸகாலியர், கிஸ்ரு கூட்டத்தார் ஆகும். இம்மூவரும் தாம் உலக மக்களின் தந்தையர் என்று இமாம் குர்துபீ குறிப்பிடுகின்றார்.
(நன்றி : அல்-ஜாமிஉல் அஹ்காமுல் குர்ஆன் பாகம் 15, பக்கம் 88 பதிப்பு 1965 -1384ஹி)

எனவே முதல் மனிதரும், முதல் நபியுமான ஆதம் (அலை) அவர்களோ, மனித உற்பத்திப் பெருக்கத்தின் ஆரம்பமோ லெமூரியாக்கண்டத்தில் நிகழவில்லை என்பதும், மனிதகுலத்தின் தந்தையான நபி ஆதம் (அலை) அவர்களின் தோற்ற ஆரம்பம் இம்மையில் நிகழவில்லை என்பதும், மிகத் தெளிவான, உறுதியான வரலாறாகும்.

அனைத்தையும் நன்கறிந்தோன் அல்லாஹ் ஒருவனே!.

(முற்றும்)

- எம்.எம்.எம். நூறுல்ஹக் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களும் பொதுஜன ஊடகங்களும்

இன்றைய உலகில் பொதுஜன ஊடகங்களின் பங்களிப்பு மிகமிக அத்தியாவசியமான தொன்றாகக் கருதப் படுகின்றது. எந்தவொரு துறைக்கும் அதன் சேவை இன்றியமையாத தொன்றாகும். ஒரு கட்சி பதவிக்கு வருவதற்கும், அக்கட்சி பதவியைவிட்டு ஓரங்கட்டப் படுவதற்கும் மட்டுமல்ல, தனிமனித வளர்ச்சிக்கும், சமூக நல மேம்பாடுகளுக்கும் பொதுஜன ஊடகங்களின் பங்களிப்புத் தேவைப்படும் சேவையாகக் கொள்ளப்படு கின்றது. பொதுஜன ஊடகங்கள் பல்வேறு தரப்பட்ட வகையில் வெவ்வேறாகச் செயல்பட்டபோதினிலும் அவை ஒவ்வொன்றும் தனித்தனியே தமது தேவைதனை மக்களுக்கு உணர்த்துகின்றன.

அந்த வகையில் ஸ்ரீலங்காவில் இன்று மக்கள் மயப்படுத்தப்பட்ட ஊடகங்களில் டி.வி, வானொலி, பத்திரிகை போன்றவை மிக முக்கியத்துவம் பெறுகின்றன. இம்மூன்றும் இங்கு வாழும் மக்களை ஆக்கிரமித்திருக்கின்றன. இதில் இலங்கை வாழ் முஸ்லிம்களும் அடங்குவார்கள். எனினும் நமது ஸ்ரீலங்காத்தீவில் சிங்கள மக்களுக்கென தனி டி.வி. சணல்கள், வானொலிச்சேவைகள், தேசியப் பத்திரிகைகள், இன்னும் ஏராளமான சஞ்சிகைகள் என வெளிவந்த வண்ணமிருக்கின்றன. அதேபோல் தமிழ் சமூகத்தின ருக்கும் சில வருடங்களுக்கு முன் ரீ.வி. சனல் உருவானது, வானொலியைப் பொறுத்தவரை தமிழ் பேசும் மக்களுக்கான சேவை அரசாங்கத்தால் நடாத்தப்பட்ட போதிலும் தமிழ்ச் சகோதரர்களின் அதிகாரங்களுக்குள்ளேயே பலவரு டங்களாக இருந்து வருகின்றன. இப்போது சக்தி வானொலியும் இவற்றோடு இணைந்துள்ளது.

*மருதமுனை எம்.எல்.எம். முஸ்தபா*

இதுதவிர தமிழ் மக்களுக்கென பத்திரிகைகளை எடுத்துக் கொண்டால் பல பத்திரிகைகள் தேசிய ரீதியாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவைகளில் மிக மிக பழமை வாய்ந்த பத்திரிகை வீரகேசரியாகுமென்பது குறிப்பிடத்தக் கது. இந்தவரிசையில் இலங்கை முஸ்லிம் மக்களை எடுத்துக் கொண்டால் நம்பமுடியாத வகையில் கடந்த காலங்கள் கழிந்துள்ளன. டி.வி.யை எடுத்துக்கொண்டால் நோன்பு, பெருநாள் விஷேட கால் மணி அரைமணி நிகழ்ச்சியோடு முஸ்லிம் நிகழ்ச்சி முடிவு பெற்று முற்றுப் பெறும்; வானொலியை எடுத்துக் கொண்டால் ஒரு நாளைக்கு ஒரு மணித்தியாலம் முன்பிருந்து பின்னர் இரண்டு மூன்று மணித்தியால முஸ்லிம் நிகழ்ச்சியை மட்டும் கொண்டு மட்டுப்படுத்தப்பட்டது.

எனினும் முஸ்லிம்கள் தமிழ்த் தேசியப் பத்திரிகைகளான வீரகேசரி, தினகரன் போன்ற பத்திரிகைகளைக் கூடுதலாக வாங்கி வாசித்ததுடன் அப்பத்திரிகைகளில் எழுதவும் செய்தனர். இதில் வேடிக்கை என்னவெனில் மிகப்பழமை வாய்ந்த பத்திரிகையான வீரகேசரியில் இன்றுவரை ஒரு பக்கத்தை ஒரு வாரத்திற்கு ஒருமுறையாவது முஸ்லிம் களுக்காக ஒதுக்க மனமின்றி இருக்கின்றனர். அப்பத்திரி கையை வெளியிடும் தமிழ் நிறுவனத்தார்.

இருந்தும் இவைகளையெல்லாம் கவனிக்காமல் தமிழ்பேசும் இனம் என்ற வகையில் தமிழ் வெளியீடுகளை முஸ்லிம் மக்கள் வாங்கிப்படித்து வந்தனர். எனினும் வடக்கு கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கேற்பட்ட வரலாற்று முக்கியமான செய்திகளும் இன்னும் முஸ்லிம் நாடுகளில் நடைபெறும் செய்திகளும் இத்தமிழ்ப் பத்திரிகைகளில் தமதிஷ்டப்பிரகாரம் "திரிபுபடுத்தி", "வேண்டியதை மறைத்து" செய்திகளாக பிரசுரிக்கப்பட்டன. இன்னும் அக்கொள்கை கடைபிடிக் கப்பட்டுவருகின்றன. உதாரணத்திற்கு முஸ்லிம் சமூகம் சம்பந்தப்பட்ட முக்கிய செய்தியொன்றை ஒரு சாதாரண மகன் எழுதினால் அவை குப்பைக் கூடை க்குள் வீசப்படும். அதே நேரம் அதே செய்தியை ஒரு தமிழ் மகன் எழுதி னால் அச்செய்தியை முக்கியத்துவப்படுத்தி அந்தச் செய்தியி னூடாக தமிழ்த் தரப்பினர் அப்பாவிகள் போன்ற எண்ணம் வாசிக் கும் வாசகர்களுக்கு உண்டாகும் விதத்தில் "கைகால் வைத்து" பிரசுரிக்க இப்படியான பத்திரிகையின் பிரதான ஆசிரியர் பொறுப்பிலுள்ளவர்கள், ஏற்பாடு செய்து பிரசுரிப்பார்கள்.

இன்று இப்பத்திரிகைகளில் சில முஸ்லிம் செய்திகள் வருகின்றபோதிலும் உற்று நோக்கிப் பார்த்தால் முஸ்லிம் செய்திகளுக்கு திட்டமிட்ட "இரண்டாம் பட்சம்" என்பதை நடுநிலையான வாசகர்கள் ஏற்றுக்கொள்வார்கள். இப்படியான நிலைமைகளின் தொடர்வுகள் இன்று



முஸ்லிம்களைச் சிந்திக்க வைத்துள்ளது. ஆம் இவ்வேளை இலங்கை வாழ் முஸ்லிம்கள் எங்களுக்கும் தனியான தொடர்பு சாதனங்கள் இருந்தால் உண்மைகள் மூடி மறைக்கப்படாமல் தடுக்க முடியுமல்லவா?. என்ற நல்ல சிந்தனை தோன்றி அதனைச் செயல்வடிவமாக்கவும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தொடர்பு சாதனங்கள், அல்லது பொதுஜன ஊடகங்களின் வரிசையில் மிக முக்கியமானதுதான் செய்திப் பத்திரிகை. ஏனெனில் ரீ.வி., வானொலி ஆகிய இரண்டுக்கும் பிரதானமான தேவை செய்திகள், அந்தச் செய்திகள் முதலில் எழுத்துருவில் வரவேண்டும். அதன் பிறகுதான் வாசிக்க முடியும். எனவே எழுத்துத்தான் செய்திகளில் பெறுமதி கூடியதாகும். டி.வி.யோ, அல்லது வானொலியோ செய்திகளை வாசிப்பதோடு முடிந்து விடும். ஆனால் பத்திரிகையில் வரும் செய்தியோ உடனடி யாக அழிவதில்லை. அது அச்சுவடிவில் பன்னெ டுங்காலம் நீடித்து நிலைக்கும். அந்த வகையில் இன்று எமது முஸ்லிம் மக்கள் எமக்கென்று ஒரு பத்திரிகை இல்லையே என ஏங்கிய நிலையில் அதிஷ் டவசமாக எமது கரங்களில் "முஸ்லிம் குரல்" தவழ்கின்றது.

ஆனால் "முஸ்லிம் குரல்" பத்திரிகை முற்று முழுதாக முஸ்லிம் தேசத்தின் குரலாக ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றது. அதன் பிரதம ஆசிரியர் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் இதனை வெளியிட் டுக்கொண்டிருக்கின்றார். ஒரு தேசியப் பத்திரிகை தொடராக வெளிவருவதற்கு மிக மிக முக்கியம் பொருளாதாரம். ஆனால் முஸ்லிம் குரலை வெளியிடும் அன்பர்களிடம் நிறைந்த சமூகப் பற்றுதலும், தேவையான திறமைகளும் அமைந்திருக்கின்ற அதே வேளை பொருளாதாரம் மட்டுமே கேள்விக்குறியாக இருக்கின்றது. எனவே எமது சமூகம் இன்று தொடர்பு சாதனங்களில் தமக்கான சேவைகளை எதிர்பார்த்திருக்கும் இவ்வேளை "அரிதாக எமக்குக்கிடைத்த முஸ்லிம் குரல்" பத்திரிகையை ஆதரவு கொடுத்து வளர்த்தெடுப்பது எங்களின் கட்டாயம் என்பதை நினைவுறுத்தி எம்மாலான வகையில் உதவிடுவோம். "முஸ்லிம் குரல்" உலகெங்கும் ஓங்கி ஒலிக்க பக்க பலமாக இருப்போம்.

# ஸக்காத்தின் பெயரால் பம்மாத்து காட்டிய ஹாஜியாருக்கு பலமான நெத்தியடி

**நடந்த கதையின் நகல்.........**

அபூ ருஸைக்

அன்வர் நானா இப்போது நோய்வாய்ப்பட்டு விட்டார். அதனால் தொழில் எதுவும் செய்ய முடியாத சோகத்தின் சொந்தக்காரராக ஈராண்டுகள் வீட்டிலேயே முடங்கிவிட்டார். மூன்று பெண்பிள்ளைகள் ஓர் ஆண்மகன், மனைவியுடைய பற்றுக்கோடு....

மனைவி சுலைஹா இடியப்பம் சுட்டு, புறக்கோட்டை பஸாரிலுள்ள இரண்டு பெட்டிக் கடைகளுக்கு விற்கிறாள். வாசல் தேடி வந்து, காலையிலும், மாலையிலும் கேட்டுவரும் பகுதிவாழ் வாடிக்கைக்காரர்களுக்கும் இடியப்பம் சுட்டு, விற்று, கணவனின் வருவாய் இல்லாத தன் குடும்பத்தை எப்படியோ நகர்த்திச் செல்கிறாள்.

மகன் மூத்தவன்தான். ஜீ.ஸி.ஈ. பரீட்சையோடு, தன் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு புறக்கோட்டை பஸாரில் ஒரு பிலாஸ்டிக் சாமான் விற்பனை செய்யும் கடையில், பகல் சாப்பாட்டோடு நாலாயிரம் ரூபா சம்பளத்திற்கு, கடந்த ஏழெட்டு மாதங்களாக வேலைசெய்து வருகிறான்.

அன்வரும், சுலைஹாவும் பிள்ளைகளை ஒழுங்காகவே வளர்த்து விட்டிருக்கிறார்கள். அதனால் மகன் சல்மான் எடுத்த சம்பளத்தில் எதுவும் தனக்கென ஒதுக்காமல், பதுக்காமல், அப்படியே உம்மாவிடம் நாலாயிரத்தையும் கொடுத்து விடுவான்.
அதனால் மகன் சல்மான் கொண்டு வந்து தரும் சம்பள உதவியுடன் எப்படியோ கால்வயிறு கஞ்சியேனும் குடித்து அக்குடும்பத்தின் கவலை தீர்ந்து வருகிறது. மூத்தமகள் இந்த வருடம்தான் பத்தாம் ஆண்டுக்கு பாஸாகியுள்ளாள். "உம்மா .... ஜனுபா தாத்தாக்கிட்டே சொல்லி, எனக்கும் பேக் ஒட்டும் வேலையை பேசித் தாங்கம்மா... சும்மா இருக்கிற நேரத்தில் பேக் ஒட்டி கொடுத்தால், அந்த காசில என் டிவ்ஷன் பீஸ்ஸை கட்டுவேம்மா...." என்று சதாவும் மூத்த மகள் செய்த நச்சரிப்பிலும் ஒரு நியாயம் உணர்ந்த சுலைஹா, அவ்வாறே செய்து கொடுத்தாள்.

விளைவு...... ஜனுபா தாத்தா பலவீடுகளுக்கும் எடுத்துக் கொடுப்பது போல சுலைஹா வீட்டுக்கும் பேக் ஒட்டும் பிரவுன்பேப்பரை பேக் கடையிலிருந்து வாங்கிக் கொடுப்பாள், ஒட்டிய பேக்குகளை திரும்ப, கடையில் கொடுத்து கூலியையும் அவளே வாங்கித் தருவாள். பேக் ஒட்டும் காசு, மூத்த மகளின் கல்விக்குக் கைகொடுக்கிறது.

இவ்வாறு அன்றாட வாழ்வை கஷ்டப்பட்டு வாழ்ந்து பார்க்கும் அந்தக் குடும்பத்தின் உறவினர்கள், ஓரளவு வசதியோடு வாழத்தான் செய்கின்றனர். ஆனால் எவருமே இவர்களின் கஷ்டத்தில் பங்கெடுக்கவோ, குறைக்கவோ, தீர்க்கவோ முன்வந்ததில்லை. யார் உதவி செய்யாவிட்டாலும், அன்வரின் உடன்பிறந்த சகோதரன் உத்மான் ஹாஜி அழகாக அருமையாக உதவலாம். உத்மான் ஹாஜி ஒரு 'இன்டஸ்ட்ரீ' வைத்துள்ளார். அல்லாஹ்வின் கருணையினால் வசதியான செல்வந்தராக வாழ்ந்து வருகிறார்.

பணமும், பவிஷும் வந்ததும், தான் பிறந்து வளர்ந்த பகுதி சரியில்லை என்று, மேட்டுக்குடியினர் வாழும் பகுதிக்கு புதிய வீடு வாங்கி சென்றுவிட்டார் இந்த உத்மான் ஹாஜி. தான் குடிபெயர்ந்து போன பகுதி பள்ளிவாசலில் இந்த உத்மான் ஹாஜியும் ஒரு டிரஸ்டி என்றால், அவருக்குள்ள செல்வாக்கை புரிந்து கொள்ளலாமே! தனது பெயர் பெருமை "சமுதாயக் கொடைவள்ளல்" என்ற பட்டம்வேறு உத்மான் ஹாஜியாருடைய பெயருடன் ஒட்டியிருக்கிறது.
யார் யாருக்கெல்லாமோ உதவி வரும் இந்த உத்மான் ஹாஜிக்கு, தன் தம்பி கஷ்டப்படுவது, நோயாளியாக தொழில் செய்ய முடியாமல் சோகம் சுமந்து வாழ்வது ஒன்றும் தெரியாத சங்கதியல்ல. என்றாலும், ஏனோ அவர் இவர்களை, தம்பியின் குடும்பத்தை ஏறிட்டும் பார்ப்பதில்லை. அவ்வாறே ஏனைய குடும்ப உறவினர்களையும் கவனிப்பதில்லை. இவர் கவனிப்பது கருணை காட்டுவது எல்லாமே ஊர் மக்களைத்தான். உட்சுவர் பூசிவிட்டே புறச்சுவர் பூசவேணடும் என்ற தத்துவம் எல்லாம் உத்மான் ஹாஜிக்கு சரிபட்டு வராது. உட்சுவரில் என்னதான் அழகாகப் பூசினாலும் அது வெளியே தெரியவா போகிறது? வெளிச்சுவரில் பூசினாலன்றோ அது விளம்பரமாகும்.



விளம்பரப் பிரியரான இந்த உத்மான் ஹாஜி, ரமழான் வந்து விட்டால் மட்டும், தன் குடும்பத்தார் அனைவருக்கும் ஐந்து கிலோ அரிசியும், ஐம்பது ரூபாவும் கொடுத்தனுப்பத் தவறமாட்டார். அன்வர் குடும்பத்திற்கும் வருடாந்தம் இந்த உதவி, ஸக்காத் எனும் பெயரில் வந்துவிடும். "நானா ஸக்காத்தாக அனுப்பியுள்ளதை திருப்பி அனுப்பலாமா? அது அல்லாஹ்வுக்கு தடுக்காதே" என்று மனைவி சுலைஹாவும் அங்கீகரித்து விடுவாள். இந்த வருடம் பத்து கிலோ சம்பா அரிசி சிறிய மூடையும் நூறு ரூபாவும் வந்தது. அன்வருக்கோ பயான் கேட்ட தெளிவில், தனது சகோதரன் ஸக்காத் எனும் பெயரில் காட்டிவரும் இந்தப் பம்மாத்து பிடிக்கவில்லை.

"சுலைஹா...... இந்த அரிசியையும், நூறு ரூபாவையும் திருப்பி அனுப்பிவிடு..... அல்லாஹ்வை ஏமாத்திற இந்த ஸக்காத் நமக்கு வேண்டாம்..." "என்னங்க... இது? நம்ம திருப்பி அனுப்பினா...... மச்சான் கோபப்படுவார்" என்று மனைவி சுலைஹா கணவரை சாந்தப்படுத்தினார்.

"மகன்... நீ வேலைக்குப்போகும்போது, இந்த அரிசியையும், நூறு ரூபாவையும் பெரியப்பா வீட்டில் கொடுத்திட்டுப் போ..... அரிசிக்கு முன்னூறு ரூபாவும். கையில தந்தது நூறு ரூபா... ஆக.... நானூறு ரூபாவை ஒரு வருஷத்துக்கு பிரிச்சிப் பார்த்தால்..... ஒரு நாளைக்கு ஒரு ரூபாவும், பத்து சதமும் வரும்.... இந்த ஒரு ரூபா, பத்து சதத்தை விட, கூடுதலா நாம பிச்சைக்காரனுக்கு தினமும் கொடுக்கிறோம். ஒங்க பெரிய்யப்பா... நமக்கெல்லாம் ஸக்காத்தால் வாழ வழிகாட்டாம, இப்படி பிச்சை போடுறதை நிறுத்தும்படி கூறி, இந்த அரிசியையும், காசையும் திருப்பிக் கொடுத்திட்டுப் போ....." என்று கணக்குப் போட்டு விளக்கிக் கூறினார். (வாப்பா சொல்வதில் நியாயம் இருப்பதாகவே சல்மானுக்குப்பட்டது. அரிசியுடன் சல்மான் போவதை, அன்வரும் சுலைஹாவும் பார்த்துக் கொண்டேயிருக்கின்றனர். ஸக்காத் பெயரால் இப்படியும் பம்மாத்து காட்டும் பேர்வழிகள்........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாறுபவர் இருக்கும் வரை...

"சேர் இப்ப விஸி பொறவு வரட்டாம்" "தம்பி நாங்க தூரத்தில இருந்து வயல் வரம்பெல்லாம் கடந்து வந்து கனநேரமாகக் காத்துக்கிட்டு இரிக்கம். எம்.பிய கட்டாயம் கண்டு கதைக்கணும் சொல்லுங்க தம்பி" இளைஞர்களும், முதியோர்களுமாக காத்திருந்தனர்.

"நான் சொன்னேன், ரொம்ப பிஸியாம், இப்ப சந்திக்க ஏலாதாம் நெறய விசிட் போக வேண்டி இருக்காம். ஓங்களப் பொறவு வரட்டாம்" கூட்டத்தில் இருந்து ஒரு முதியவர் எழுந்து" பொறவெண்டா எப்பயாம், கொஞ்சம் நேர்ல வந்து சொல்லச் சொல்லு போ.... கண்டறியாத விஸி, எல்லாம் எப்பவந்த விஸி"

—டனே ஏனையோர்" முததப்பா ஏன் கோவிக்கிறிங்க, மெதுவா, எம்.பிக்கிக் கேட்றப்போவுது." "கேட்டா என்ன கேக்கட்டுமே... பயமா.... நாம கக்கிசப்பட்டு உண்டாக்குன எம்.பி தானே, எப்படிக் கோவிக்கிற... நாம என்ன சொந்த வேலயாவா வந்திருக்கம். பொது விசியமாத்தான வந்திருக்கம். நாம வந்து இவ்வளவு நேரமும் விஸியாமா.... அவரு நேரங்கெட்ட – நேரத்துலயெல்லா்ம் வந்து ஓட்டுக்கேட்டாரே் நாம அவருக்காக நேரங்காலம் பாக்காம அடுத்தவனுக்கிட்ட ஓட்டுப் போடச் சொல்லி காட்டுலயும், மேட்டுலயும் அலஞ்சமே அப்ப கோவிச்சமா...." முதியவர் தோளில் கிடந்த சால்வையை தலைப்பாகை கட்டிக் கொண்டு ஒரு குட்டிப் பிரசங்கமே செய்து கொண்டிருந்த போது சிகரட்டை உதட்டில் ஒத்து ஒத்தென்று ஒத்தித்தூக்கியெடுத்த வேகத்தில் புகை தன்பாட்டுக்குப் புறப்பட்டுச் செல்ல எம்.பி. பிரசன்னமானார். எழுந்து நின்றனர் "என்னது... யாரு இங்குன சத்தம் போர்ரது. இதென்ன மார்க்கட்டா....ம்ம்..... நீங்க ஒரு ஓட்டப்போர்டாப்ல.... என்ன வேணுமென்டாலும் கதப்பிங்களோ...." முதியவரை எரித்துவிடுவதுபோல பார்த்தார்." "நாங்க போட்ட ஒவ்வொரு ஓட்டுந்தான் உங்களுக்கு இந்த சொகுசு வாழ்க்கையை தந்திருக்கு. அதெல்லாம் இப்ப ஒங்களுக்கு வெளங்காது. இஞ்சப்பாருங்க இந்த எம்.பி நம்மட பிரச்சினையை தீர்த்து வைப்பாருண்ட நம்பிக்க எனக்கு துளியுமில்ல. நீங்க இருந்து நாருரிங்க நான்போறன்" முதியவர் படியில் இருந்து இறங்கி வீதியில் சென்று மறைந்தார். எம்.பி யுட்பட்ட அனைவரும் சற்று திகைத்துத்தான் போனார்கள். இருந்தாலும் தான் தோற்றுப் போனதைக் காட்டிக் கொள்ளாமல் அதே கோபாவேசத்துடன் "என்ன.... என்ன கதைக்கணும் ... சொல்லுங்க பாப்பம்"

"சேர் போன முற சொன்னமே.... எங்கட ஊர் விசியம்...."

"இந்த போனமுற வந்தமுற கதயவிட்டுப்போட்டு..... அதெல்லாம் சுத்தமா மறந்து போச்சி. இப்ப புதுசாச் சொல்லுங்க"

"போன தடவ வரைபடமெல்லாம் கொண்டுவந்து வெளங்கப்படுத்துனமே. எங்கட ஊடு வளவயெல்லாம் பத்தவெச்சி, கொல செஞ்சி எங்கட பூர்வீகக் காணியெல்லாம் புலி பறிக்கிறானென்டு.... அதனால...."

"ஸ்டொப்....ஸ்டொப்... வெளங்கிட்டு, வெளங்கிட்டு... நீங்கள் எதிர்பார்க்கிற நிவாரண பொருட்கள், மானியங்கள், குடிசைக்கட்டக் கிடுகுகள் எல்லாம் ஏற்பாடு செய்ரன். அதுமட்டுமல்ல ஓங்கட மணல் ரோட்ட தார்ரோட்டாமாத்தப்போறன் கரண்ட் வசதியெல்லாம் தரப்போறன். அடுத்த டி.சி.பி. மீட்டிங்ல நிதி ஒதுக்கப் போறன். ஓகே திருப்திதானே... இந்த சந்தோஷமான செய்தியை ஓங்கட ஏரியாவுல போய் சொல்லுங்க இன்னும் மூனுமாதத்துக்குப் பொறவு உங்கட ஏரியாவுக்கு விசிட் அடிக்கப்போறன். அப்படியே ஒரு பிக்னிக் தென்னம்புள்ள வளவெல்லாம் இருக்கித்தானே, போய்ட்டு வாங்க.... ஏம் போவடமாட்டேங்குறிங்க வேற ஏதாவது எனிதிங் சிபாரிசுக்கடிதங்கள்...." "சேர் தயவு செய்து எங்கட இப்போதைய நெலமயயும், பிரச்சினையையும், தேவைகளையும், புரிஞ்சுக்குங்க. நீங்க ரோட்டுப்போடுறது பாலங்கட்டுறதெல்லாம் ஒரு பக்கம் கெடக்கட்டும், அதவிட முக்கி யமான விடயம் பேசணும்" "என்ன" "முகம்வினாக்குறியானது எம்.பி புதியதொரு சிகரட்டுக்கு தீ வைத்து ஆழமாக இழுத்த இழுப்பில் நுரையீரல்களின் நுண்ணறைகள் அனைத்திலும் பரவிப்பாய்ந்த புகை முடிந்தளவு.... அங்கே நஞ்சைக் கலந்துவிட்டு கட்டங்கட்டமாக மூக்கு வழியே கசிந்து, காற்றில் கலந்து எஞ்சிய நஞ்சுடன் அடுத்தவர் மூக்கில் ஆளறியாமல் நுழைந்தது.

"புலி எங்கட ஊரப்பத்தவெச்சான். கொலசெஞ்சான். இப்புடிச் செய்ரதன் மூலமா அங்க வாழ ஏலா என்டுறநெலமய



துல்கர்னைன்.

உண்டுபண்ணி நிலத்தை அபகரிக்கிறான். ஆக்கள வெச்சி கூடுண வெலக்கி காணிய வாங்குறான். இதனால் ஏற்படப்போகிற எதிர்கால அபாயம் புரியாத பாமரமக்களும் வித்துர்ராங்க. இப்புடி நாளுக்கு நாள் காணி பறிபோய் ஊர் சுருங்குது. இதுக்கொரு முடிவுகாணணும் இப்போதைக்கு அவசரமா தீத்துவெக்க வேண்டிய பிரச்சின இது ஒன்னுதான்"

பிரச்சினையின் தீவிரத்தை விளங்கினாலும் விளங்காதவர்போல "அது தான் எல்லா அபிவிருத்தி வேலையும் செய்யினெண்டு சொல்றனல்லவா. நானும் நேர்ல வந்து பாக்கிறன். இன்னும் நெறய ஆமியெல்லாம் போட்டு பாதுகாப்பப் பலப்படுத்துவோம். இது சம்பந்தமாக இப்ப பிரதமருக்கிட்ட கதைக்கப்போறன். நீங்க போய்ட்டுவாங்க. "எப்படியும் இவர்களைக் களட்டிவிட்டால் போதும் என்ற நிலை எம்.பிக்கு. அதிலொரு இளைஞன் "சேர்... எங்கட நிலத்தை புலி பறிக்கிறானென்டு எங்கட பிரச்சின என்னயென்று வெளங்குதா இல்ல வெளங்காத மாதிரி நடிக்கிறீங்களா இப்ப எங்கட பிரச்சினை அபிவிருத்தியல்ல. எங்கட பூர்வீக நெலத்துல சுதந்திரமா வாழ புலி உடுறானில்ல அதான் பெரும் பிரச்சின. நீங்க எங்கட காணியில வாழற உரிமய பெற்றுத் தாங்க. நாங்க ரோட்டுப்போட்டுக்கிறோம். இல்லாட்டி கொதி மணல நடக்கிறோம். அது ரெண்டாம் பிரச்சினை."

இளைஞனின் பேச்சில் இருந்த யதார்த்தத்தை மறுக்கவோ மறைத்துவிடவோ முடியாது என்பதை உணர்ந்த எம்.பி. "அதுதானே தம்பி நான் சொல்றன்..... நெறய ஆமிக்காறாக்களப்போடுவம். பிரதமருக்கிட்ட இந்தா..... இப்பவே...... கதைக்கிறன். அந்த ஹேன்போன இப்படிக் கொண்டு வா....."

"சேர் நீங்க பிரதமருக்கிட்ட பேசுவிங்களோ வேறயாருக்கிட்டயும் பேசுவீங்களோ எங்களுக்குப் பிரச்சினையில்ல. பேசவேண்டிய நேரத்துலயெல்லாம் பேசாம புதுனம் பாத்துக்கிட்டு இருந்து போட்டு இப்ப ஹேன்போனத் தூக்கி ஹலோ பிரதமர்.... என்று யாரப் பேக்காட்டப்பாக்கிறிங்க. பிரதமர், சமாதான ஒப்பந்தமென்ட பேருல முஸ்லிம்களையெல்லாம் கொல்லச்சொல்லிப் புலிக்கிட்ட புடிச்சிக் குடுத்திருக்காரு. புலியும் 'இனந்தெரியாத நபர் என்ற பேருல கொல்லுது. அதுக்கும் இடைஞ்சல் வந்துரப்புடா என்டு ஆமிர கைகளையும் கட்டிப் பாட்டிருக் காரு. இது எப்படி இருக்கு இந்த லெச்சனத்துல நாம ஆட்சியின் பங்காளியாம். நெலம இப்படி இரிக்கக்குள நீங்க என்னடான்டா பாலங்கட்றன், ரோட்டுப்போடுறன், ஆமி போடுறன் எங்குறீங்க. ரோட்டுப் போடுங்க வேணாங்கயில்ல. அதுக்கு மொத அந்த ரோட்டுல சுதந்திரமா போய்வாற உரிமய உறுதிப்படுத்துங்க முதல்ல அதச் செய்ங்க"

"தம்பிமார் ஆவேசப்படாதிங்க.... மொதல்ல என்ன நம்பணும். நான்தான் நெறய ஆமியக் கொண்டு வந்து பாதுகாப்ப பலப்படுத்துறனென்டு சொல்றனல்லவா"

"என்ன சேர் ஒண்ணுந்தெரியாத கொழுந்தப் புள்ள மாதிரிப் பேசுறிங்க. ஆமிர எண்ணிக்கயக் கூட்டுறதால் என்னசேர் பிரோசனம். செயல்படாத ஆமிய போட்டா என்ன போடாட்டி என்ன... ஆமிக்காறன் பார்த்துக்கிட்டு இரிக்கக்குள தான புலிகொல்றான். கொள்ளயடிக்கிறான், நெருப்பு வெக்கிறான். ஆமி தடுத்துதா.... முஸ்லிம்கள வாழவெக்கிறதுக்கு ஆட்சிய உண்டாக்குனிங்களா இல்ல கொல்றத்துக்கு ஆட்சிய உண்டாக்குனிங்களா? எங்கட வாக்குப் பலத்த வாங்கி எங்களக் கொல்ற அரசாங்கத்த உண்டாக்கியிரிக்கீங்களே. சொந்த நாட்டு மக்களக் கொல்லச் சொல்லிப் பயங்கரவாதிகளுக்கிட்ட புடிச்சிக்குடுக்கிற அரசாங்கம் ஒலகத்துல வேற எங்காவது உண்டா."

"தம்பிமார்..... நீங்க கதக்கிறமாதிரியில்ல, கட்சியின் சட்ட்திட்ட கோட்பாடுகளுக்கு ஏத்தமாதிரித்தான் நாங்க செயல் படுவோம்...."

"அப்புடி என்ன சேர் கட்சியின் கோட்பாடு.... முஸ்லிம்கள்ற உரிமைகளை வெண்டெடுக்கிறதுக்குத்தானே நாம கட்சிய உண்டாக்குனோம். அதான் கோட்பாடு. ஒங்களுக்குத் தானே. கட்சிக் கோட்பாடு தெரியாது உரிமைகளை வென்றெடுக்கவேண்டிய அருமாந்த கட்சிய பதவி பெற்றுத்தரும் கட்சியாகவும், அபிவிருத்தி செய்யும் கட்சியாகவும் மாத்திப் புட்டிங்க."

நீங்க அரசாங்கத்துக்கு சப்போட் பண்ணக்குள கைம்மாறா எங்கட உரிமைகளைக் கேட்டிங்களா... இல்லியே கேட்டிரிக்கணும் அதான் கோட்பாடு. அப்படிக் கேட்டிருந்திங்கன்டா சமாதான ஒப்பந்தத்துல முஸ்லிம்களுடைய பாதுகாப்பு மற்றும் உரிமைகள் எல்லாம் இடம் பெற்றிருக்கும். அப்புடி எதுவும் நடக்கலியே. பிரதமரும் புலியும் சேர்ந்து முஸ்லிம்களை ஒரு குழு எண்டு குறுக்கி அழிவுக்கு வழி பண்ணிப்புட்டாங்களே. இது கூட மக்கள் சொல்லித்தானே உங்களுக்குத் தெரியும். இது எதயுமே நீங்க கவனிக்காம நீங்க கேட்டதெல்லாம் முழு அமைச்சு, பாதி அமைச்சு, தூதுவர் பதவி போன்ற எலும்புகள்தான்.... இல்லங்குறீங்களா..."

"தம்பி... அப்புடியெல்லாம் சொல்லாதிங்க. நாங்க முஸ்லிம்களைக் கை விடமாட்டோம். எத்தனையோ அறிக்கைகளை அவ்வப்போது நாங்க விடாமலில்லை. இந்தப் பதவி பட்டமெல்லாம் கால் தூசு... அதத் தூக்கி...." "நிப்பாட்டுங்க சேர்.... இந்தக் கதயக் கேட்டுக் கேட்டுப் புளிச்சிப் பெய்த்து. ஆவேசமான அறிக்க உட்டா.... பாராளுமன்டத்துல பேசுனா..... சரியா.... இப்ப பொதுத் தேர்தல் ஒன்னுவாற சாத்தியம் தெரிஞ்ச ஒடன பதவி, பட்டம் தூசி கதயெல்லாம் கதக்கிறிங்க. யாரப் பேக்காட்டப்பாக்குறிங்க. இதெல்லாம் வேகாது. இதுவரைக்கும் நடந்த எல்லா எலக்சன்லயும் முஸ்லிம்களின் உரிமைகளை வென்று வருவோம் ஆணை தாருங்கள்' என்று ஓட்டுக்கேட்டு, நாங்க அள்ளித்தந்து நீங்க கொண்டுபோய் வித்துத் திண்டதெல்லாம் மறந்து போச்சா.... நாங்க மறக்கயில்ல. மறுபடியும் வந்து ஏன் திரும்பத்திரும்ப ஆணை கேக்கிறிங்க. காது குத்துனதுபோதும்.... வாங்க போவம். நம்மட சமுகத்துல உள்ள எல்லாத் தரப்பினரையும் ஒன்டு சேப்போம். நமக்கான ஒரு மக்கள் கூட்டமைப்பை உருவாக்கி நமது உரிமைக்காக பல வழியிலும் பாடுபடுவோம். நமது நாளைய சந்ததியாவது தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழும். அதுக்காக அல்லாஹ்வில் தவக்கல் வைத்து இன்றே முதல் அடியை எடுத்து வைப்போம். புறப்படுங்கள்"

"தம்பிமார்.... அப்போ.... நான்....."

"நீங்களுந்தான். நமது மக்கள் கூட்டமைப்பில் நீங்களும் ஒரு அங்கம்"

## கல்முனையில் புதியதோர் உதயம் "IRM பொது நூலகம்"

கல்முனையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவி செய்யும் வகையில் இப்பிரதேசத்திற்கென தனியார் நூலகங்கள் பல உருவாக்கப்பட்டிருந்த போதும், எந்தவொரு நூலகமும் இதுவரை காலமும் நிலைபெற்றிருக்கவில்லை என்பதுதான் கவலைக்குரிய விடயமாக இருந்து வருகிறது. இப்பெரும் தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன் IRM என அழைக்கப்படும் கல்முனை இஸ்லாமிய எழுச்சி அமைப்பானது கல்முனை சாஹிபு வீதியில் "IRM பொது நூலகம்" எனும் பெயரிலான நூலகத்தை அண்மையில் திறந்து வைத்தது.

வீழ்ச்சியடைந்துள்ள முஸ்லிம் சமூகத்தின் கல்வி வளர்ச்சியை எழுச்சி பெறச் செய்ய வேண்டும் எனும் குறிக்கோளுடன் ஒன்று திரண்ட இவ்வமைப்பினர் தமது முதலாவது பாரிய செயற்திட்டமாக இதனை உயிர்ப்பித்திருக்கின்றார்கள். இதன்மூலம் இற்றை வரை சுமார் 70 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் அங்கத்தவர்களாக சேர்ந்து பயனடைகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்க விடயம். இதில் சகல மாணவர்களுக்குமான பாடத்திட்டத்திற்கமைவாக நூல்கள், கடந்தகால வினா-விடை நூல்கள், பொது அறிவு நூல்கள், அரசியல், சட்ட, இலக்கிய நூல்கள், இஸ்லாமிய நூல்கள், அத்துடன் சஞ்சிகைகள், மாதாந்தம், வாராந்தம், நாளாந்தம் வெளியாகும் பத்திரிகைகள் என்பனவைகளும் காணப்படுகின்றன.

இச் செயற்பாட்டை அமைப்பின் கல்வி பிரிவு நடத்துவதோடு, பிரிவின் தலைவர் எஸ். இர்ஷாத் என்பவர் நூலகப் பொறுப்பாளராகவும் கடமை வகிக்கின்றார். அத்தோடு இதன் நிர்வாக கட்டமைப்பாக அமைப்பின் தலைவர் எம்.வி.எம். மாஹிர், செயலாளர் எம்.வி.எம். றிபான் உட்பட இதர உறுப்பினர்களின் வழிகாட்டலினூடே இந்நூலகம் செயற்பட்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்னும், புதிதாக வெளிவரும் சஞ்சிகைகள் நூலகத்திற்கு தேவையான பாட, பொது நூல்கள், பிற நூல்கள் என்பன அதற்கான நலன் விரும்பிகள் மற்றும் அதிகாரிகளிடமிருந்து கோரப்படுவதோடு, ஆக்கபூர்வமான கருத்துக்களும் வேண்டப்படுகின்றது.

தகவல் : எம்.வி.எம். றிபான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும்... துரோகங்களின் துயரப்பட்டியல்


கிண்ணியா சபருள்ளா

சாவுகளின் ராஜபாட்டையில் சமாதிக்கவிதைகளை சப்தித்துக் கொண்டு விஷச்சூழலில் தமது இருப்பை தக்க வைத்துக் கொள்ள தத்தளித்துக் கொண்டிருக்கும் கிண்ணியா முஸ்லிம்கள் கடந்த 2003.11.23 லிருந்து 2003.11.30 வரையான ஒரு வாரத்துள் புலிகளின் இனச்சுத்திகரிப்புக்கு எட்டு முஸ்லிம்களை பறி கொடுத்த துயரம் நெஞ்சுகளை இன்னும் இம்சித்துக்கொண்டிருக்கும் வேளை திருமலை மாவட்ட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களான முஸ்லிம் காங்கிரஸின் சின்ன தௌபீக், திடீர் தௌபீக், மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. சின்னமஹ்றூப் ஆகிய மூவரும் கிண்ணியா முஸ்லிம்கள் மீதான வன்முறைகளை பாராளுமன்றக் கூட்டத் தொடரில் கண்ணீர் மல்க எடுத்துக் கூறினார்கள். கிண்ணியாவை அச்சுறுத்தும் சூனியத்தை விலா வாரியாக விளக்கினார்கள். திருமலை மாவட்ட முஸ்லிம்கள் சார்பாக நன்றிகள் இவர்களைப் போய்ச்சேரட்டும். பத்திரிகைச் செய்திகளில் திருமலை மாவட்ட முஸ்லிம் எம்.பிக்கள் கண்ணீர் வழிய கிண்ணியா வன்முறையை சொன்னதாக தலைப்புகளில் காணப்பட்டது.

இவ்வாறு இவர்கள் ஓரளவேனும் உணர்வுடன் நடந்து நடந்தேறிய நிகழ்வுகளை பாராளுமன்றத்தில் விபரிக்க சில காரணங்களுண்டு. அதில் மிக முக்கியமானது என்னவெனில் கிண்ணியா முஸ்லிம்கள் மீது புலிகளால் தொடரப்படும் வன்முறைகள் தொடர்பில் கிண்ணியாவில் சுமூக நிலையையும் அமைதிநிலையையும். தொடரும் படுகொலைகளை நிறுத்தும் நோக்கிலும் கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமா சபை மற்றும் ஊரின் முக்கிய பிரமுகர்களை உள்ளடக்கியதான குழுவொன்று கடந்த 2003.11.30 அன்று கிண்ணியா பெரிய பள்ளிவாயலில் கூடியது. இதில் மூன்று பா. உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். குறிப்பிட்ட இந்த கலந்துரையாடலில் கிண்ணியா முஸ்லிம்கள் மீதான வன்முறைகளை பாராளுமன்றத்தில் எடுத்துச் சொல்லவேண்டும் என அங்கு கூடியிருந்தோரால் அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்லப்பட்டது. இதனைத் தொடர்ந்து மூன்று பா. உறுப்பினர்களும் கிண்ணியா வன்முறைகளை பாராளுமன்றத்தில் எடுத்துச் சொல்வதாக வாக்குறுதியளித்தனர். இதன் படி அவர்களால் பாராளுமன்றத்தில் கிண்ணியா வன்முறைகள் எடுத்துச் சொல்லப்பட்டது.

ஆனால். கசப்பான உண்மைகள் இதன் பின்னரே ஒட்டு மொத்த கிண்ணியா முஸ்லிம்களையும் ஒரேயடியாய் வெறுப்பின் விளிம்புக்கு ஓரங்கட்டி விட்டது. கடந்த 2003.12.02ம் திகதியன்று கிண்ணியாவின் பாதுகாப்பு நிலவரம் குறித்து பகல் 2.00 மணிக்கு வடக்கு கிழக்கு முஸ்லிம் பாராளுமன்ற ஒன்றியம் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவை சந்தித்து பேச ஏற்பாடாகி இருந்தது. ஜனாதிபதியை சந்திக்க பா. உறுப்பினர் ஹிஸ்புல்லா ஏற்பாடு செய்திருந்தார். ஜனாதிபதியை சந்திக்க ஏற்பாடு செய்து தருமாறு ஹிஸ்புல்லாவை வேண்டியது சின்ன தௌபீக் மற்றும் மஹ்றூப் இருவருமே. ஆனால் இறுதியில் நடந்தது என்னவெனில் இந்த இரண்டு எம்.பிக்களும் மற்றும் திடீர் தௌபீக்கும் ஜனாதிபதியுடனான சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை. கிண்ணியா முஸ்லிம்களின் பாதுகாப்பு சம்பந்தமான அதிமுக்கியமான இந்த சந்திப்பில் கிண்ணியா முஸ்லிம்களை பிரதி நிதித்துவப்படுத்தும் மூன்று எம்.பிக்களும் கலந்து கொள்ளவில்லை என்ற சங்கதி, தமது பாதுகாப்பிற்கும், இருப்பிற்கும் அச்சுறுத்தலுக்குள்ளாகி இருக்கும் கிண்ணியா முஸ்லிம்களின் நெஞ்சுகளை மேலும் கீறிக்காயப்படுத்தியது.

உண்மையில் நடந்தது என்னவெனில் ஜனாதிபதியுடனான இந்த சந்திப்பில் தான் அவசியம் கலந்து கொள்ள வேண்டுமென்ற



பிடிவாதத்துடனிருந்த சின்ன தௌபீக்கை பஷீர் சேகுதாவூத் 'தலைவர் (ஹக்கீம்)' இப்போது நாட்டில் இல்லை (இந்தியாவிலிருக்கின்றார்) அவரில்லாத சமயம் அவரது ஆலோசனையின்றி ஜனாதிபதியை சந்திக்க செல்லலாகாது! என மிகக்கடுமையாக தடுத்திருக்கின்றார். இதில் பெரிய ஜோக் என்னவென்றால் ஜனாதிபதியுடனான சந்திப்பில் அன்றைய தினம் கலந்து கொண்ட ஏழுபேரில் நூர்தீன் மஷூரும் ஒருவர். தலைவர் ஹக்கீம் நாட்டில் இல்லாதபோது இவர் எப்படி இதில் கலந்து கொண்டார்? சின்ன தௌபிக்கை வன்மையாகத் தடுத்த பஷிர் சேகுதாவுதின் கைங்கர்யம் மஷூிர் விடயத்தில் கையாலாகாத்தனமாக மாறியதேன்? சின்ன தௌபீக்கிடம் பலித்த பஷிரின் பாச்சா மஷூரிடம் மட்டும் ஏன் மூர்ச்சையிழந்து போனது. ஒருவேளை மஷூர் இந்தியாவிலிருந்த ஹக்கீமிடம் தொடர்பு கொண்டு ஜனாதிபதியை சந்திக்க விசேட அனுமதி ஏதேனும் பெற்றாரோ தெரியவில்லை.


குருதி நதியில் தினம் குளியல் நடாத்திக்கொண்டிருக்கும் கிண்ணியா முஸ்லிம்களின் கண்ணீர் பற்றி இந்த பஷிர் என்ன அறிவார்? "குருஷேந்திரம் நடந்து கொண்டிருக்கையில் கும்மாளம் கொட்டியது" மாதிரியான இவரது நடத்தை உச்ச கோபத்தை உள் வாங்குகின்றது. கிண்ணியா முஸ்லிம்களின் பாதுகாப்பு தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்தாலோசிக்க சின்ன தௌபீக்கை தடுக்குமளவுக்கு பஷிர் தரம் கெட்டுப்போனது ஏன்? எமது மண்ணைப்பற்றி எடுத்துரைத்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடி பாதுகாப்பைக் கோர தௌபீக்கை தடுக்க யாரிந்த பஷிர்?

இவ்வாறான திருகு தாளங்களில் திசை தவறிக்கிடக்கின்றனர். எமது முஸ்லிம் எம்.பி. க்கள் என்ற வேதனை எம்மை வேட்டையாடிக் கொண்டிருக்க கடந்த 08.12.2003 அன்றைய வீரகேசரியில் "கிண்ணியா அசம்பாவிதங்களை தடுக்க ஜனாதிபதி தவறிவிட்டார்" என்ற தலைப்பின் கீழ் ஒரு செய்தி காணப்பட்டது. அதன்படி பஷிர் சேகுதாவூத். திடீர் தௌபீக். மற்றும் மஹ்ரூப் ஆகிய மூவரும் ஒப்பமிட்டு மாண்புமிகு ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த எழுத்திலான அறிக்கையொன்றில் பாதுகாப்பு அமைச்சராகவும். முப்படைகளின் தளபதியாகவும் உள்ள ஜனாதிபதி கிண்ணியா அசம்பாவிதங்களை தடுக்கத்தவறிவிட்டார் எனவும் இந்த அசம்பாவிதங்களுக்கு அவரே பொறுப்பு எனவும் குற்றம் சாட்டியிருந்தனர்.

ஜனாதிபதி அசம்பாவிதங்களுக்கு பொறுப்பா? இல்லையா? என்ற விவாதத்தை ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு மேற்படி மூன்று எம்பிக்களினதும் அறிக்கைக்கு அவர்கள் அருகதையுடையவர்கள்தானா எனப்பார்ப்போம். கடந்த டிசம்பர் இரண்டாம் திகதி கிண்ணியா முஸ்லிம்கள் பாதுகாப்பு நிலவரம் தொடர்பில் ஜனாதிபதியுடனான சந்திப்பில் கலந்து கொள்ள வேண்டுமென்றே தவறிய இவர்கள். அதில் கலந்துகொள்ள முயன்ற சின்ன தௌபீக்கை பிடிவாதமாக தடுத்த பஷிர் இப்போது என்னவென்றால் ஜனாதிபதிக்கெதிராக அறிக்கை விடுக்கின்றார். இவ்வாறான சமூக அக்கறைவாதிகள் அன்றைய சந்திப்பில் கட்டாயம் கலந்துகொண்டிருக்க வேண்டுமே! ஏன் கலந்து கொள்ளவில்லை. இவ்வாறான இரட்டை நாடகத்தையும், அரைவேக்காட்டுத்தனத்தையும் எப்போது இவர்கள் களையப்போகிறார்கள். சும்மா முஸ்லிம் சமூக அக்கறையை வாய்ச்சொல்லில் வரவிட்டு பம்மாத்துக் காட்டும் இந்த பத்தாம் பசலித்தனம் இன்னும் தொடர்வதையிட்டு மிகக் கேவலமாகவும் அவமானமாகவும் இருகின்றது.

இறுதியாக திருமலை மாவட்ட முஸ்லிம் பா.உறுப்பினர்கள் நீங்கள் தக்கசமயத்தில் சுய சிந்தனையில் நடவடிக்கை எடுப்பதற்கு தயாராகாதவரை உங்கள் தவறுகளின் பட்டியலில் நீங்களும் உங்கள் மக்கள் தொடர்பில் என்ன செய்யவேண்டும், எப்படி கொண்டு செல்ல வேண்டும் என்று உங்களுக்குத்தான் தெரியும். மாறாக திருமலைக்கு வெளியே உள்ளவர்களுக்கல்ல. தற்போது கிண்ணியாவில் நிகழும் [illegible] முறைகளையும், அக்கிரமங்களையும் முஸ்லிம்களின் துயரத்தையும் இவைகளின் உண்மைத்தன்மையையும் வெளியுலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்ட உங்களால் மட்டுமே முடியும். இந்த மக்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும் பலம் உங்களிடத்திலே உள்ளது. ஏனெனில் பாராளுமன்றத்தில் இந்த மக்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் நீங்கள். இந்த நெருக்கடியான காலகட்டத்தில் உங்கள் மீது மிகப்பெரிய பொறுப்பு சுமத்தப்பட்டிருக்கிறது. கடந்த காலங்களில் விட்ட தவறுகள் விட்டவையாகவே இருக்கட்டும். இனிமேலாவது மக்கள் நலனுக்காக உங்களை கொஞ்சமேனும் மாற்றிக்கொள்ளுங்கள். ஏனெனில் திருமலை மாவட்ட குறிப்பாக கிண்ணியா, மூதூர் முஸ்லிம்கள் உங்கள் மீதான அவநம்பிக்கையை அதிகரிப்பது மாதிரி நீங்கள் தொடர்ந்தும் நடந்துகொண்டிருக்கிறீர்கள். உங்களில் எவரையும் முஸ்லிம்கள் நம்பத்தயாராகாத அவலத்துக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர். அதனை மாற்றி அமைக்கும் பொறுப்பு உங்களிடத்தில் இருக்கின்றது. மக்கள் நலன் என்பது கட்சி அரசியலைத்தாண்டியதாகவே எப்போதும் இருக்கின்றது. தன்னலம் என்பது மக்கள் நலனை இரையாக்கி தன்னை வளர்த்துக் கொள்கிறது.

## ஏதிலிகளுக்கு ஏன்...



சொந்தமாய் காணியில்லை
சேர்ந்து வாழ
சோகமாய்க் கழிந்தது
சில காலம்
காணிப் பங்கீட்டுச் சேதி
கேட்டு
அவசரமாய் நடந்தேன்
கட்டுச் சோற்றுடன்
ஆங்கே.

என் நிலை ஒற்றோர்
சிலரைக்
கண்டேன்
எஜமானர்
பலரைக்
கண்டு வியந்தேன்
ஏதிலிகளுக்கு யாவும்
எட்டியே நிக்குது
நிதம்.

வளமானோருக்கு
வசதியான
இருக்கை
வறுமையான எமக்கோ
வரிசை
கட்டுச் சோற்றின்
கட்டவிழ் நேரம்
கடிதம் எங்கே?
கடிந்தது ஒரு குரல்

ஓரிரு மாதங்களில்
அழைப்போம்
ஓசியாயின் 'பொலிடோல்'
இனிக்குமோ?
ஓட்டாஞ்சல்லியும் பங்கீடாம்
ஓடிப் போ!

அதட்டியது
அதே குரல்
ஐயோ.......
காத்திருந்தேன்
காலாண்டு
காரியம்
கை கூடவில்லை
அதிகாரியால்
மல்கினேன்
மண்டியிட்டேன்
மேலதிகாரியிடம்
அவரின்
மேதாவிலாசம்
அறிந்ததிர்ந்தேன்

எம்.பியிடம் சென்றேன்
தேம்பியழ
ஏனென்று கேட்கவோர்
நாதியில்லை
வாக்குக் கேட்டு
என்
வாடகை வீடு வந்து
வாய்கிழியக் கிழித்தவரும்
வந்திருந்தார்.

தேர்தல் காலந்தனில்
தெருத் தெருவாய்
வசை பாடி
மகிழ்ந்தவரும்
எதிர்த்தரப்பு மேடைதனில்
இகழ்ந்தவரும்
ஈ யாய்
இருந்தனர்
எம்.பியுடன்

மருதமுனை றாஷிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தங்களும் அழிவுகளும் நிறைந்த சதாமின் வாழ்க்கை!

-1980 செப்டம்பர் 22இல் ஈரானுடனான போரைத் தொடங்குதல் - 8 ஆண்டுகள் இப்போர் நீடித்தது.

-1988 மார்ச் 28இல் குர்தீஷ் நகரான ஹலப்ஜா மீது இரசாயன ஆயுதத் தாக்குதல்

-5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குர்திஷ் மக்கள் கொல்லப்பட்டனர்.

-1990 அக்டோபர் 2இல் குவைத் மீதான படையெடுப்பு.

-1991 ஜனவரி 17இல் குவைத் சதாமிடமிருந்து விடுவிக்கப்படல்.

-1996 பெப்ரவரி 20இல் தனது இருமகள்களின் கணவன்மார்களையும் கொலை செய்தல். (அமெரிக்காவுக்குக் காட்டிக் கொடுத்தமைக்கு)




## வடக்கு கிழக்கு மாகாண சபையிலிருந்து முஸ்லிம் ஊழியர்களை திட்டமிட்டு அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள்!

(திருமலைச் செய்தியாளர்)


வடக்கு கிழக்கு மாகாண சபையிலிருந்து முஸ்லிம் உத்தியோகத்தர்களைத் திட்டமிட்டு இடமாற்றம் செய்யும் நடவடிக்கைகள் அதிகரித்திருக்கிறது. நாளொரு வண்ணமாக முஸ்லிம்கள் மாகாண சபை நிர்வாகத்திலிருந்து அகற்றப்பட்டு வருகின்றனர். திடீர் திடீரென இடமாற்றங்கள் நடைபெறுகின்றன. இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு முஸ்லிம் அரசியல் தலைமைகள் உருப்படியான எந்த நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை.

இம்மாகாண சபையில் 10 செயலாளர் பதவிகள் உட்பட, 28 பணிப்பாளர்கள், 4 ஆணையாளர்கள் என்கிற உயர்பதவிகளில் கூட எந்த முஸ்லிம்களும் இல்லை. இப்போது அங்கு கடமையாற்றும் சிற்றூழியர்களுக்கும் கல்த்தா! நமது எம்.பிக்கள், அமைச்சர்களால் இவற்றைத் தடுத்து நிறுத்த முடியாதா?





முஸ்லிம் சமூக அரசியல் பண்பாட்டுத் தளத்தை மையப்படுத்திய கருத்துக்கள், விவாதங்களை உள்ளடக்கிய மாத இதழ்

## ஏமாற்றத்துக்குள்ளான அந்தத் தருணம்









*Bombay Sweet Court*

உங்கள் அனைத்து வைபவங்களுக்கும் தேவையான பாதம், அத்திப்பழ, பிஸ்தா, சாரோலி, புறுட், கஜூ, எல்லு, ரவ, ரோஸ் போன்ற நெய் மஸ்கட் வகைகளும் பர்பி வகைகள் பால்கோவா, மைசூர் பாகு, மில்க்டொபீ, கஜூ பாகு, பூந்தி, பாலுதா, சாட்டாமிட்டாய், சோன் பப்பாழ, மோன்தால், குன்தார்பாகு, குலப்ஜம்பு போன்ற இனிப்பு வகைகளும் தரமும் சுவையும், சில்லறையாகவும், மலிவு விலையிலும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

**பம்போ சுவீட் கோட், ஸாவியா வீதி, காத்தான்குடி - 01**

**தொ.பே: 065-2247268.**

advt

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printcom - 2543691